
Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 | வெள்ளி - 03 | 11 - 17 - மார்ச் - 2005



## படித்ததில் பிடித்தது

# துயரத்தின் மத்தியில்

கிட்டிப்புள் ஆடாமலே
வளர்ந்து
கணனி
பொறியியலாளராகிவிட்டான்
என்னோடு படித்த கணேசன்

பிரபந்தமெல்லாம் மறந்துபோன
பக்கத்து வீட்டு
நரசிம்மாச்சாரிக்கு

லண்டன்போன மகனின்
கடிதத்திற்காய்
காத்திருப்பது தவமாயிற்று

மழையில் நனைந்தால்
காய்ச்சல் வருமென
குழந்தைகளை
உள்ளே இழுக்கும்
தாய்மார்கள்.

யாரும்மதிக்கவில்லையென
மூச்சு ஒருதரம் அதிரவைக்கும்
பாட்டியும் கம்பீரம் தொலைத்து
மூலையில் பழந்துணியோடு

அரசியல் கொடிகள் ஐந்தாறு
பறக்கின்றன
ஏற்றியவர் ஒவ்வொருவரும்

கட்சி மாறியதறியாமல்

சருகை உதிர்ந்து பூமியை
மூடும்
வேப்பமரத்தையும்
வெட்டியாச்சு
நல்ல விலைக்கு

ஈரப்புடைவை உடலை
அழுந்த
தெருவை அடைக்கக்
குளித்து
திரும்பும்
குமரிப்பெண்களில்
ஒருத்தியைக் கூட
காணோம்.
இப்போதெல்லாம்

விளக்கின்றி
இருட்டுக்குள் தவிக்கும்
பிள்ளையாருக்குத்
துணையாய்
எல்லோரும்
எதையெதையோ
தொலைத்ததைப் போல
நானும்.

ஆங்கிலத்தில்-மேவின்ராவ்
தமிழில்-இ.றஜித்

## கடல்தாண்டி கரைதொடும் கரம்

# கடலே

தம்பியின் எல்லையில் கரைதாண்டியகடலே;
உனக்குமா இனவெறி ?

கடல் எருமையே
உன் வாலைக்கடித்து
உசுப்பிவிட்ட கயவன் யார்?

தமிழர்கள்,
ஜல்லிக்கட்டு அடக்குபவர்கள்;
என்பதை நீ அறியாயா?

முல்லையைக் கசக்க வந்த
உயிர் கொள்ளையே
நீ தமிழரின் தொல்லையே!

உலகெல்லாம்
ஆழியே உன் புகழ் பரப்பி
நன்மை செய்தவனுக்கு
நீ இன்மை செய்தாய்

நீ கடலம்மாவா?
காவு அம்மாவா?
அம்மா என்ற பெயர்
உனக்கு அருகதையில்லை

லெமுரியாவும்
பஃறுளியும்
தனுஷ்கோடியும்
இழந்த அவனிடம்
இனி இழப்பதற்கு
என்ன இருக்கிறது
ஈழம் ஒன்றைத்தவிர?
நிறுத்து உன்
பேய்க்கூத்தை
இல்லை
திருத்தும்
தம்பியின் தலைமை
உன் தாண்டவத்தை

கவிஞர் ஞானபாரதி
ஆண்டிபட்டி

## காரசாரம்

# பங்குனி மாத வெயில் கொடுமையிலும் கொடுமை

பாடசாலைகளெல்லாம் மைதான விழாக்கோலம் கொண்டிருக்கு. பங்குனி மாதத்துக்குள்ள முழுப்பாடசாலைகளும், இல்ல விளையாட்டுப்போட்டிகளை முடிக்க வேணும். பாடசாலை நேரமும் பாடசாலை விட்ட பிறகும் பிள்ளைகளுக்கு விளையாட்டுப் பயிற்சி குடுக்கிறதில ஆசிரியர்கள் மிகக் கவனமாகச் செயற்படுகினம். இது முடிய வலய மட்டம், கோட்ட மட்டம், மாகாண மட்டம் வரை பிள்ளைகளைக் கொண்டுபோகவேணும். இம்முறை சுனாமியடிச்சதால பாடசாலைகளில பெரிய ஆடம்பரமா இதைச் செய்யவில்லைத்தான், எண்டாலும் ஒருகதை.

'பங்குனி மாதம் பகல்வழி நடப்பவரைப் பாத்திருந்தாலும் பாவம்' எண்டு ஒரு பழமொழி இருக்கு. கார் சைக்கிளுகள் வராத காலத்து மொழி. இப்ப வாகனகாரர் கூட வெயில் தாளப்போவம் எண்டு சொல்லுவினம். இந்தப் பங்குனி வெயில்ல பச்சைப் பாலனுகளை விளையாட்டு மைதானங்களில புரட்டி எடுக்கிற ஆசிரியர்களுக்கும், பாடசாலை நிர்வாகத்துக்கும் ஒரு பணிவான வேண்டுகோள். மார்கழியில வாற பரீட்சைக்குத்தானே தையிலயிருந்து படிப்பிக்கிறியள். வீட்டுப்பாடம் குடுக்கிறியள். காணாததுக்கு டியூசனுகளுக்கும் பெற்றார் அனுப்புகினம். பங்குனியில வாற விளையாட்டுப் போட்டிகளுக்கும் வருடம் முழுக்க வேலைசெய்தா என்ன? வாராந்த பாட அட்டவணை நேரத்தில உடற்பயிற்சிக்கும் ஒரு நேரம் இருக்கெல்லே. எத்தினை பாடசாலையில இந்த நேரத்துக்கான பாடம் நடக்குது. மாணவர்களைக் கலைக்கிற மாதிரி மைதானத்துக்க திறந்து விட்டுப் பிறகும் அடைக்கிறியள். இல்லாட்டி வீட்டுக்கு வீடு விளக்குமாறு கிடந்தமாதிரி பாடசாலைக்கு பாடசாலை பந்தும் மட்டையும் கிடக்கும் அதைக் குடுத்து விடுவியள். கேட்டா ரெடிமேட்டா ஒரு பதில் பீற்றி மாஸ்டர் இல்லை''

அதென்ன விளையாட்டுப் போட்டி வந்தாமட்டும் இல்லத்துக்கான ஆசிரியர்கள் களத்தில இறங்குகினம். எல்லா ஆசிரியர்களும் பாடசாலைகளில் கற்றுத்தானே வந்தவர்கள். தமது பிள்ளைகளுக்கு கற்பிக்குமளவு திறமையோடுதானே வருகிறார்கள். கற்பிக்கிறதுக்கான ஊதியமில்லாவிட்டாலும் தொடர்ந்து சேவையாற்றி வேலை பெற்ற தொண்டராசிரியர்கள் கூட விட்டது தொல்லை என்று முன்னுள்ள ஆசிரியர்களின் பாதச்சுவடுகளைப் பின்பற்ற ஆரம்பித்துள்ளனர்.

பங்குனி வெயிலில் பகல் முழுதும் உழலும் பிள்ளைகள் திடீரென அதிகப்படியான உடல் வலுவை செலவிடுவதாலும், நான் பெரிது, அவன்பெரிது, யார்பெரிது என்ற போட்டிகளாலும், வென்றுவிட வேண்டும் என்ற அதீத (தோல்வியை இல்லத்தோழர்கள் ஏற்காத போது கேலிக்கும் அவமதிப்புக்கும் ஆளாதலால்) முயற்சிகளில் ஈடுபடுவதாலும், உடல் நரம்பு நோய்களையும், உளத்தாக்க விளைவாகவும் வெயில் காரணமாகவும் சளி, தலையிடி, வயிற்றோட்டம் அல்லது மலச்சிக்கல் போன்ற நோய்களை எதிர்நோக்குகின்றனர்.

மனித உடலில் ஐந்து வயது வரை உறுப்புகளில் முழு வளர்ச்சி ஏற்பட்டிருப்பதில்லை. மூளை வளர்ச்சி கூட இந்த வயதில்தான். குழந்தையின் தலைச் சுற்றளவு இருப்பத்தொரு அங்குலமாக இருக்க வளர்ந்துள்ள முழுமனிதனது தலை இருபத்து மூன்று இருபத்து நாலு வரைதான் இருக்கும். அதாவது ஐந்து வயதின்பின் அவ்வளவுதான் வளர்ச்சி. உடல் வளர்ச்சி பெறாத முன்பள்ளிச் சிறார்களிடையே போட்டிகள் முதலாவது, இரண்டாவது என்ற பேதம் மட்டுமல்ல அவர்களுக்கும் காலை முதல் பாடசாலை நேரம் முடியும்வரையும் பாடசாலை விட்ட பின் மாலையிலும் பயிற்சி நடக்கிறது. "நீ செய்வது பிழை நிண்டுபார்'' என ஒரு பிள்ளையை ஒதுக்கிவிட்டு வேறு பிள்ளையை அந்த இடத் துக்குப் போடுவது. ஒதுக்கப்பட்ட பிள்ளையில் உளத்தாக்கத்தை ஏற்படுத்தாதா? குழந்தை உளவியல் தெரியாத கையில் தடியுடன் நின்று மழலைகளைப் பயிற்றும் ஆசிரியைகள் பங்குனி மாதம் பிள்ளைகளைச் சாறு பிழியும் மாதமா? சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

மாயா

# இது குற்றச்சட்டத்தில் சின்னக் கோரிக்கை

எல்லாவிதத்திலும் புண்ணியஞ் செய்த ஆத்மாக்கள் இருக்கினமோ எண்டு கேட்டா நிச்சயமா அது பஸ்கொண்டக்டர்மார்தான். அதிலும் சிற்றூர்தி நடத்துநர்கள் விசேடமாகப் பலவித அட்டமா சித்திகளையும் பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள். நல்லவேளையாக தமிழீழ அரசுக்குச் சொந்தமான பேருந்துகள் இந்தப் பாக்கியத்தைப் பெறவில்லை.

நிலையத்திலிருந்து புறப்படும் பஸ்ஸானாலும், நினைத்தபடி எல்லோரும் ஏறக்கூடிய வசதிகளைக் கொண்டதாக இருப்பதால் தத்தமது வசதிக்கேற்ப பயணிகளை உரப்பியும் அதட்டியும் உள்ளேதள்ள முடிகிறது. குறிப்பாகப் பாய்ந்து ஏறிவிடும் ஆண்களை அடுத்து ஏறும் பெண்களைத் தொட்டுத் தொட்டுத் தள்ளித் திணிக்கும் பாக்கியத்தையும் பின் தொடர்ந்து அவர்களிடை புகுந்து நெரியுண்டு இடியுண்டு உரசுண்டு அடிபஸ்ஸுக்குள் புகுந்து அனுமதிச்சீட்டு வழங்கியவாறே திரும்பவும் முன்னோக்கி உழன்றபடி வெளியே வரும்போதும் விரும்பிய இடத்தில் கால்பரத்திச் சாய்ந்து (உடலில்) சீட்டெழுதும் போதும் யாராவது முனக வேண்டுமே "ச்சா அப்பிடி மற்றவை முட்டாமப் பயணம் போறதெண்டாத் தனிக்கார் பிடிச்சுப் போகலாமே..'' அதாவது தனிக்கார் பிடிக்க வசதியற்றவர்களை உரசலாம், மிதிப்பலகைப்பயணம் தடைப்பட்டாலும் மிதிப்பலகையின் நேரேயுள்ள கம்பியில் தொங்குதல் ஒன்றும் தடைசெய்யப்படவில்லை என்பதை நோக்குக.

வீதியின் மருங்கே வேகக் கட்டுப்பாட்டுப் பலகையுண்டு. நாப்பதுக்கும் ஐம்பதுக்குமிடையில் போனால் தானே. ஐம்பதில் போனால்...? ஐம்பதுக்கும் அறுபதுக்குமிடையில் போனால் தானே, அறுபதில் போனால்...? என்ற ரீதியில் இந்த வாகனங்கள் ஆள்பிடிக்கப் போட்டி போடும் போது பயணிகள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பேச்சு மூச்சற்று இருப்பர்.

ரிக்கற்றின் பின்புறம் ஒரு கிறுக்கல் மிச்சக்காசு. பயணிகள் முறிகண்டியில் இறங்கி சில்லறை விவகாரங்களைப் பார்க்க இவரைச் சூழ்ந்து நிற்பதைக் காணும்போது ஏன்தான் வரும் போதே அளவான பணத்தைக் கொண்டுவரக்கூடாது என எண்ணத்தோன்றும்.

பயணிகள் இறங்க வேண்டிய இடத்துக்கு சற்று அதிகமாகவே கொண்டு செல்லும் கருணை இவர்களுக்குண்டு. சரி கொஞ்சத்தூரந் தானே நடந்துபோகலாம் உடம்புக்கும் நல்லது என்ற வைத்தியக் குறிப்பை இலவசமாக வழங்கும்பேறு பெற்றவர்கள் எப்போதாவது பயணிகள் இவரிடம் அதிகப்படி மீதிப்பணமாகப் பெறாவிட்டாலும், அவர் கருணையால் ஏற்றிய நபர்களுடைய பயணக் கூலியையும் கூட நாணயங்களாக வழங்கவேண்டிய சில்லறைகளை மடக்கி எசமானுக்கு நாணயமாக நடந்துகொள்வதில் உள்ள சமர்த்து.

சாரதியுடன் தனக்குள்ள முறுகலைக் காட்ட இறங்கி நின்று ரைட் கொடுத்துவிட்டு ஓடிய வாகனத்தை திருப்பிக்கொண்டு வந்து தன்னை ஏற்றவைக்கும் அதிகாரமுடையவர்.

எல்லாம் கிடக்கட்டும்எதிரில வரும் சகோதர மினிபஸ்ஸை மறித்து "மச்சான்'' பென்டில காவல்துறை நிக்கிது என்று எச்சரிக்கும் பண்புடையவர். கூடவே எதிரிலும் யாராவது நிற்கிறார்களா என்பதை அறிந்துகொள்ளும் சாமர்த்தியமும் அவர்கட்கேயுரியது.

பின்னே வரும் வாகனத்தை முந்தவிடாது ஓடி முன்னேறிற்கும் பயணிகளை இழுக்காத குறையாக உள்ளேதள்ள உதவும் சாரதி அப்படியே முன்னுக்குவாங்கோ, பின்னுக்குப்போங்கோ என்ற குரலுதவியையும் வழங்கத்தவறார். பயணிகள் என்ன நடந்தாலும் இவற்றைப் பொறுத்து எல்லாம் (இ)றைவர் செயல் என்றோ எல்லாம் இறைவன் செயலன்றோ கருதி மௌனம் காக்கின்றனர். இது பக்தியா? பயமா? ஒரு ஓடு தூரத்துக்கு அனுமதிக்கப்பட்ட வாகனம் அதற்கான பயணியை ஏற்றாமல் போக முடியாது என்ற சட்ட விதி தெரியாமையோ எதுவாயினும் நடத்துநர் கெட்டிக்காரன்.

# மார்ச் -04 ஆம் திகதியின் நீதி?

யாழ்ப்பாணத்தில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற கோரமான சம்பவங்களும் அதன் பின்னர் நடந்தேறியவைகளும் பல்வேறு முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டுபவையாக அமைந்தன. தமிழ் மக்கள் பற்றிய சிங்களப் படைகளின் மனப்பதிவு, சிங்களப்படைகள் பற்றிய மக்களின் மனப்பதிவு ஆகிய இரண்டும் பளீரென வெளிப்பட்ட அதே வேளையில் சிங்களப்படைத் தலைமையின் வக்கிரமான சிந்தனையும் அவர்களது வாயாலேயே உலகிற்கு அறியப்படுத்தப்பட்டும் விட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை யாழ்ப்பாணம் பிரப்பங்குளத்திலுள்ள நாகேந்திரம் அவர்களின் வீட்டில் இயல்பாகத்தான் விடிந்திருக்கும். காலை 7.30 இற்குப் பின்னதாக தமது மகள் துளசிகா தன்னுடைய 7ஆம் வகுப்புக்குரிய புத்தகங்களைச் சுமந்தபடி மிதிவண்டியில் ஏறிய போது அவர்கள் நினைத்திருக்கமாட்டார்கள் தமது மகளின் பூமுகத்தை அதே கோலத்தில் தாங்கள் இனி மேலும் பார்க்கமுடியாதென்பதை.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்கு இன்னும் சில நூறு மீற்றர்களே உள்ள நிலையில் போதனா வைத்தியசாலை OPT வாயில் கதவுகளுக்கு நேராகத் துளசிகா பயணிக்கும்போது அந்தக்குழந்தை நினைத்திருக்கமாட்டாது தனக்கான இயமதூதன் சிறிலங்காப் படையின் உழவு இயந்திரத்தின் வடிவில் வருகிறான் என்று. ஆனால் அதுதான் நடந்தது. இராணுவ உழவு இயந்திரம் அந்த ஒடுக்கமான நெரிசலான வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாகப் பேரிரைச்சலோடும் பெரு வேகத்தோடும் வருகிறது. முன்பாக வீதியில் சென்றுகொண்டிருந்த மிதிவண்டியை மோதித் தன்னுடன் இழுத்துச் செல்கிறது.

வெள்ளைச்சீருடையில் இரத்தம் தோய்ந்துபோக துளசிகா முகம் சிதைந்த நிலையில் எதிரே இருந்த வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படுகிறாள். வைத்திய சாலையில் அவளது உயிரைக் காக்க வைத்தியக்குழு போராடிக் கொண்டிருக்க; வெளியே வீதியில் விபத்து நடந்த இடத்தில் விபத்தின் தடயங்களை அழிக்கவும் அதனது போக்கை மாற்றவும் சிங்களப் படைகள் முயற்சித்துக்கொண்டிருந்தன.

அந்தக்குழந்தை சிந்திய இரத்தத்தை மறைத்துவிட அதன்மீது மண்ணைப்பரவிவிடவும். மிதிவண்டியை வீதியின் எதிர்ப்பக்கத்திற்கு மாற்றிவிடவும் சிங்களப்படைகள் முயன்றன.

விபத்தைக் கண்டு அதிர்ந்து உறைந்துபோன மக்களின் கவனத்தில் உடனடியாக உறைந்த விடயங்கள் இவைதான். விபத்தின் தடயத்தை அழிக்கவும், திரிக்கவும் படைகள் முயன்றபோதுதான் மக்கள் சீறி எழுந்தனர். குழந்தை சரியான பக்கத்தால்தான் வீதியிலே சென்றாள் என்பதை வீதியிலே கூடிய மக்கள் அடித்துக்கூறி திரும்பவும் அவளது மிதிவண்டியை அது கிடந்த இடத்துக்குக் கொண்டுவந்தனர்.

தமது பாடசாலை மாணவி சிங்களப்படைகளின் உழவு இயந்திரத்துள் நசியுண்டு போனாள் என்ற செய்தி கேள்வியுற்று வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளும் ஆசிரியர்களும் வீதிக்கு வந்தனர். தொடர்ந்து ஏனைய பாடசாலைகளும் வீதிக்கு வந்துவிட வீதிகளில் தடைகள் எழுந்து மாணவர்களின் எதிர்ப்புக் கோசமும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் வெடித்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் வீதிக்கு வந்தது. மாணவர்களது எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து பொதுமக்களும் தமது உணர்வலைகளைப் பரவலாக வெளிப்படுத்தினர். வீதிகள் தடுக்கப்பட்டு புகைமண்டலம் சூழ்ந்து எங்கும் ஆர்ப்பாட்டம்.

இந்தச்சூழலில்தான் சிங்களப்படைகள் தமது சுயரூபத்தைக் காட்டத்தொடங்கின. தடியடி, கண்ணீர்ப்புகை போன்ற மரபு சார்ந்த கலகமடக்கும் கருவிகளுக்கு மேலதிகமாக எந்தவிதமான முன்னெச்சரிக்கையுமின்றித் துப்பாக்கிச் சூடுகளைப் பரவலாகவும், சரமாரியாகவும் நடத்தின சிங்களப்படைகள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தை நோக்கிச்சிங்களத் துப்பாக்கிகள் ரவைகளைத் துப்பிய போது அவ்வழியே பயணித்த முதியவர் ஒருவரும் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

200இற்கும் மேற்பட்ட ரவைகளைச் சிங்களப்படைகள் தம்மீது சுட்டதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் பல்கலைக்கழக மாணவர்கள் முறையிட்டனர்.

திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்திக்கு அருகிலுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் மீது சிங்களப்படைகள் பாய்ந்தன. சரமாரியான துப்பாக்கிச் சூட்டை நடத்திய பின்னர் அங்கிருந்த மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்களை தமது வாகனங்களில் ஏற்றியது இராணுவம். அங்கிருந்த மாணவர்களைத் தாக்கியது. அவர்களிடமிருந்த கைத்தொலை பேசிகளையும் பறித்தெடுத்தது.

இந்த அத்துமீறல்களையும் வன்முறைகளையும் தடுக்க முற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனையும் இராணுவம் தாக்க முயன்றது. அவரது அலுவலகத்தையும் தாக்கி நாசப்படுத்தியது.

யாழ்ப்பாணம் சத்திரத்துச்சந்தியில் இராணுவம் சுட்டதில் இரண்டு பேர் காயமடைந்தனர். இதை விடவும் பல இடங்களிலும் சிங்களப்படைகள் நடத்திய தாக்குதல்களில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இத்தோடு சிறிலங்கா இராணுவம் நின்றுவிடவில்லை. திருநெல்வேலியிலுள்ள சிறுவர் விடுதி ஒன்றினுள்ளும் நுழைந்தது. பிள்ளைகள் பாடசாலைக்குப் போய்விட்ட காரணத்தால் அங்கேயிருந்த காவலாளியை ஒருகைபார்த்துவிட்டு நகர்ந்தது.

இவை அன்று நடந்தவை. இதன்பின்னர் தனது படைகள் நடத்திய வற்றை ஆடிய வெறியாட்டத்தை மறைக்க சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் தனது கற்பனைவளத்தை எவ்வாறு பிரயோகிக்கிறார் என்பதைக் கவனியுங்கள்.

விபத்தில் கொல்லப்பட்ட மாணவி ஒரு வாரத்திற்கு முன்னதாகத்தான் மிதிவண்டி ஓட்டத் தொடங்கியிருந்தாள் என்கிறார். சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்கா இதன் அர்த்தம்-சரியாக மிதிவண்டியை ஓட்டமுடியாத பிள்ளை உழவு இயந்திரத்துக்குள் தானாகவே மோதிக்கொண்டது என்பதுவே.

அப்படியாயின் தயாரத்னாயக்காவின் படையினர் ஏன் வீதியின் இடதுபுறத்தே கிடந்த துளசிகாவின் மிதிவண்டியை வலது புறமாகத் தூக்கிப்போட முயன்றார்கள்?

தயாரத்னாயக்கா அத்தோடு நிற்கவில்லை. "பல்கலைக்கழகத்துக்கு முன்பாக சுடப்பட்டு இறந்தவரின் சடலம் வேறெங்கோ இருந்து அங்கு கொண்டுவந்து போடப்பட்டது." என்றார் அவர். இந்தக் கூற்றுகளும் படையினர் நடந்ததை மறைக்க முயற்சித்ததுமே மக்களைச் சீற்றமடையச்செய்தன. கிளர்ந்தெழவைத்தன.

இந்தச் சம்பவங்களின் தொடர்ச்சியை நோக்கும் ஒருவருக்கு, யாழ்ப்பாணத்தின் ஒடுங்கிய சனநெரிசலான வீதிகளில் இராணுவமுட்கம்பிகளினிடையே வேகமாகக்கட்டுப்பாடின்றி சிறிலங்கா இராணுவத்தின் வாகனங்கள் செல்வதென்பது, அது தங்களது ஆக்கிரமிப்பிலுள்ள பூமி என்ற அவர்களது மனப்பதிவின் பிரதிபலிப்பென்பதை விளங்கிக்கொள்ளமுடியும்.

அதேவேளை மக்களுக்கும் சிங்களகப் படைகள் தமிழ் மக்களது உயிர்களையும் கௌரவத் தையும் தூசாகவே கருது கின்றனர் என்பது புரிந்தே இருக்கிறது என்பதும் நடப்பியலின் ஊடாகப் புரிந்து கொள்ளக் கூடியதாயி ருக்கிறது.

இங்கேதான் ஏறக்குறைய 10 வருடங்களாக சிங் களக் கொள்கை வகுப்பாளர்கள் தலைகீழாக நின்று செயற்படுத்திய "மக்களின் மனங்களை வெல்லுதல்" என்ற மூலோபாயம் தவிடு பொடியாகிப் போயிருக்கிறது.

மறுதலையாக தியாகி திலீபன் கூறிய மக்கள் புரட்சி என்பது மெல்ல மெல்ல முகிழ்க்கிறது. சுனாமிப் பேரலைகள் எழுந்த போது தமிழீழக்கடற்கரைகளில் முகாமிட்டும், காவலரண்கள் அமைத்தும் இருந்த சிங்களப்படைகள் தமது முட்கம்பிச் சுருள்களிலேயே சிக்கி மரணமடைய நேரிட்டது. இது மீளவும் நிகழ்ந்தேறும் ஒரு காலம் அண்மிப்பதாகவே நடப்பியல் எதிர்வு கூறுகிறது.

இதற்குள் மக்கள் மனங்களில் எழுகின்ற மிகப்பெரிய கேள்வி இந்தக் குழந்தை கோரமாக இறந்த போதும், அதுபற்றிய தடயங்களைப் படையினர் மறைக்க முயற்சித்த போதும் சிறுவர் உரிமைக்காகப் பாடுபடுபவர்கள் ஏன் அமைதி காத்தனர்? அல்லது எங்கே போயிருந்தனர்? என்பதாகும்.

அடுத்தது 62 வயது முதியவர் சுடப்பட்டு இறந்துபோன சம்பவம் எந்த மனித உரிமை ஆர்வலரையும் தொடவில்லையா? இவர்கள் இவை குறித்து ஏன் ஐ.நா. செயலருக்கு எழுதக்கூடாது?

**பு.சத்தியமூர்த்தி**






## சந்தேக மணியத்தார்...

எத்தனை பேரையயா நாட்டவிட்டு துரத்திறது. ஒண்டுமட்டும் நிச்சயம் சிறிலங்காவில கெதியண்டு ஒரு கின்னஸ் சாதனையொண்டு நடக்கப்போகுது.

அதாவது பாருங்கோ சமாதானத்தை குழப்புவதற்கு கொழும்புக்காரர் நாட்டை விட்டு வெளியேற்றின வெளிநாட்டுக்காரரும் கொழும்புக்காரருக்கு பயந்து பின் வாங்கின வெளிநாட்டு அரசாங்கக் காரர் அல்லது வெளிநாட்டு அமைப்புக்காரரின் தொகை கூடிக்கொண்டே போகும் போலக் கிடக்கும் பாருங்கோ.

அதாவது இப்ப கடைசியா ஜே.வி.பி காரர் குரல் கொடுக்கினமே உலக வங்கியிண்ட இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்டை வெளியேத்தட்டாம்.

பாவம் மனுசன் தான் அப்பிடியொண்டும் பிழையா கதைச்சுப்போடலை. நான் சொன்னதையே பேப்பர்க்காரத் தம்பிமார் பிழையாப் போட்டிட்டினம் எண்டு சொல்லியிருக்கு.

அது இல்ல சும்மாதான் நான் கேக்கிறன் அவர் சொல்லியிருந்தாக் கூட என்ன இல்லாததையா சொல்லிப்போட்டார்.

இஞ்சால இருக்கிறது தனி நாடு இல்லாம என்ன மோட்டு இனவாதியள் சொல்லுற ஒரு நாடே இருக்கு.

இஞ்ச தரைப்படை இருக்கு, கடற்படை இருக்கு, விமானப்படை இருக்கு, பொலிஸ் இருக்கு எண்டு சொல்லிக்கொண்டே போகலாம். இதை விட்டு சும்மா பம்மாத்துக் கதை கதைக்கிறாங்கள். அதுக்கு உவையளும் மறுத்துக் கதைக்காமல் நழுவிக்கதைக் கப்பாக்கினம்.

நான் ஒண்டு சொல்லுறன் சமாதான முயற்சி முற்றாக் குழம்பிப் போகும் வரைக்கும்.

ஒரு ஜோன்வெஸ் பேர்க்கப்போல, ஒரு ரிக்வேரிலெவ் சனப்போல, ஒரு பீற்றஹரோல்ட் எண்டு ஆக்கள துரத்தப்பாப்பினம்.

இவை எதுக்கு ஆக்களத் துரத்தினம் எண்டிறது விளங்காமல் உலகமும் சைபரா இருக்கிது நாங்கள் என்ன செய்ய.



# மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்ட கலைஞன்



விழிசிட்டி க.சிவராசா

மக்கள் மத்தியில் வாழ்ந்து மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு மக்களுக்காக எழுதிய ஒரு படைப்பாளியை நாம் இந்த வாரம் இழந்துபோனோம். 40 வருடங்களாக எழுதிய ஒரு பேனா உறங்குகிறது.

விழிசிட்டி க.சிவராசா என அறியப்பட்ட கணபதிப்பிள்ளை சிவராசா காலமாகிவிட்டார். 1960கள் தொட்டு தமிழரசுக் கட்சியின் மக்கள் போராட்டத்தில் ஆரம்பித்து தமிழீழ விடுதலைக்கான போரின் இன்றைய கூர்மையான காலம்வரை தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருண்மிய விடுதலைக்காக உழைத்தவர் சிவராசா.

சிறுகதைகள், நாடகங்கள் மக்கள் விழிப்படையச் செய்யும் ஆயுதங்களாகப் பயன்படுத்தியவர் அவர். இலக்கியத்தை மக்களை விடிவுக்கான கருவியாகப் பிரயோகித்து அதில் வெற்றியும் பெற்றவர்.

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும்போது தொழிற் சங்கத்திற்கு தலைமைதாங்கி அங்கும் பொதுப்பணியாற்றியவர்.

93ஆம் ஆண்டின்பின் புலிகளின் குரல் நிறுவனத்தில் இணைந்து தனது கலையாற்றலை தமிழீழ விடுதலைக்கான தடத்தில் வீச்சுடன் அர்ப்பணித்து அயராது உழைத்தார் சிவராசா.

2003ஆம் ஆண்டு தொட்டு அவரது சேவையை நிதர்சனம் நிறுவனம் பெற்றது. தனது பட்டறிவு, படிப்பறிவு சிந்தனை அனைத்தையும் விடுதலையின பாதையிலும் மக்களின் முன்னேற்றம், விடிவு என்பனவற்றுக்காகவுமே அர்ப்பணித்த சிவராசாவுக்கு நாட்டுப்பற்றாளர் விருது வழங்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. அவரது மிகப் பல சிறுகதைகள் இருந்தபோதும் எதுவுமே இன்னும் நூலுருப்பெறவில்லை. எதிர்காலத்தில் இது நிகழந் தேறுமாக இருப்பின் நான்கு தசாப்தங்களாக எமக்காக உழைத்த ஒரு படைப்பாளிக்கு நாம் செய்த நன்றிக் கடனாக அது அமையும்.

# கவிதை குறித்த கதையாடல்

## ஞாபகங்களும் கனவும்



நாற்பத்தியாறு கவிதைகளை மட்டும் எழுதி மூன்று கவிதைத் தொகுதிகளில் அவற்றை வெளியிட்டிருக்கிறார். கந்தன் டேவிட் கலா.

01.உதிரும் கடல்
02.காயப்பட்ட வெயில்
03.புல்வெளியில் அசையும் கத்தியின் நிழல்.

என மூன்று தொகுதிக் கவிதைகளையும் ஒரே நாளில் வெளியிட்டிருக்கிறார் கந்தன் டேவிற் கலா.

முப்பது வருசமாக ஒருவர் அல்லது பலர் எழுதிய கவிதைகளை ஒரு புத்தகத்தில் ஒரே நாளில் ஒருவர் வாசிக்கலாம் என்றால் ஏன் ஒன்பது வருசங்களாக எழுதிய கவிதைகளையும் ஒரே நாளில் வெளியிடக்கூடாது என்று கேட்டார் கந்தன் டேவிற் கலா.

இருபத்தெட்டு காதல் கவிதைகள், நாற்பத்தியொரு அரசியல் கவிதைகள், பத்தொன்பது தலித் கவிதைகள், பதினேழு பெண்ணியக் கவிதைகள், முப்பத்தியாறு அகதிக் கவிதைகள், சூழலியல் பற்றிய பதினான்கு கவிதைகள், திரித்தவியற் கவிதைகள் நாற்பது, நாற்பத்திநான்கு அந்நியமாதற் கவிதைகள் என இதுவரையில் கந்தன் டேவிற் மொத்தமாக இருநூற்று முப்பத்தொன்பது கவிதைகளை எழுதியுள்ளதாக- இது வரையில் விமர்சகர்கள் சொல்கிறார்கள். இதைவிட இன்னும் கூடுதலான தொகையை வேறுவிமர்சகர்கள் யாரும் கண்டுபிடித்திடவும் கூடும். ஆனால், தான் இதுவரையில் நாற்பத்தியொன்பது கவிதைகளை மட்டுமே எழுதியுள்ளதாகச் சொல்லி அவற்றைக் காட்டி சாட்சிப்படுத்தினார் க.டே.க. அதெப்படி கணக்கு மாறுபடுகிறதே என்று கேட்டால் அவரவர் விருப்பம், தேர்வு, ரசனை, அரசியல் என்பவற்றைப் பொறுத்துக் கவிதைகளை அவர்கள் அடையாளங்காணுகிறார்கள்.

ஒரு கவிதையின் அனுபவம் ஆளுக்காள் வெவ்வேறு தன்மைகளிலும் கோணங்களிலும் மாறுபடலாம். எந்தக் கவிதையையும் அவரவர் தங்கள் அனுபவத்தின் ஊடாகவும் தளங்களின் வழியாகவுமே அணுகிறார்கள்; அடையாளங்காணுகிறார்கள். அப்படிக்காண்கிற அடையாளத்தை வைத்துக்கொண்டு தாம் விரும்புகிற குறிகளைச் சுடுகிறார்கள். இதில் ஒரு கவிஞன் சிலவேளை வெவ்வேறு விதங்களாகப் புரிந்து கொள்ள முடியும். சில வேளைகளில் அவன் அபத்தமாகப் புரிந்து கொள்ளப்பட்டு விடுகிறான்.

அப்படியொரு அபத்த நிலையுருவாகும் போதுதான் கவிஞன் பெருந்துன்பத்தில் வீழ்த்தப்படுகிறான். அவனுடைய கவிதைகளே அவனைத் தண்டனைக்குட்படுத்தும்படியாகின்றன. ஆனால் உண்மையில் கவிதைகள் அப்படி அவனைத் தாக்கும் கருவியாகவில்லை. கவிதையைப் புரிந்துகொள்வோரின் பிழைமனம் கவிதைகளில் முள்ளை ஏற்றி விஷத்தையூற்றி அவனுக்கே அந்தப் பண்டத்தை ஊட்டிவிடுகிறார்கள்.

கவிஞன் எந்தச் சம்பந்தமுமில்லாமற் பழிவாங்கப்படுகிறகொடுமையின் அபத்தம் உருவாகும் விதத்தை பார்த்தீர்களா என்கிறார் கந்தன் டேவிற்கலா. புரிந்து கொள்ளல்தான் உலகின் முதற்பிரச்சினையும் பெரும்பிரச்சினையும். அறிவென்பது புரிந்துகொள்ளலுக்கான வழிகளைக்கண்டறிவதற்கான கருவியாக மாறியிருக்கவேணும். ஆனால் நடந்திருப்பது எதிர்மறையானது. அறிவு தவறான விளக்கங்களைக் கொள்ளும் வழிகளையே திறந்துவிட்டிருக்கிறது.

அடிப்படையில் சந்தேகமும் தன்நோக்கமும் வளர்ந்திருக்கிற வாழ்க்கையில் எதனையும் கற்பிதங்களூடாகவே புரிந்துகொள்ளும் அறிவை வளர்ப்பதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்?

உலகில் இந்தப் பிரச்சினைகள் தீரவே வாய்ப்பில்லை. பதிலாக இன்னுமின்னும் பிரச்சினைகள் உருவாகவே போகின்றன. ஒவ்வொரு மனிதனும் தனது மிகப்பெரிய சேமிப்பாக காயங்களையே நிரப்பிக்கொள்கிறான். எல்லாவிதமான வழங்கல்களையும் விட காயங்களை வழங்குவதையே மனித குலம் இலக்காகக் கொண்டிருக்கிறது.

நம்பிக்கைகள் தகர்ந்து போகின்றன. நம்பிக்கையூட்டக் கூடிய மாதிரி கவிதைகளை எழுதுங்கள், படைப்புகளை முன் வையுங்கள் என்ற வேண்டுதல் அல்லது கோசங்கள் எந்தளவுக்கு அறிவுத்தனமாகவும் உண்மையாகவும் முன் நிறுத்தப்படுகின்றன?

சக மனிதனையே நம்பாத அளவுக்கு யதார்த்தமிருக்கும்போது கவிதைகளில் எந்த நம்பிக்கையை எப்படி ஏற்றுவது.

பொய்யும் புனைவுமான கவிதையை உருவாக்க முடியுமேதவிர எழுதமுடியாது.

கவிதையை வன்முறைக்கான ஆயுதமாக்குவதும் விடுவதும் கூட இப்படியானதொரு பின்புலத்திலும் இவ்வாறான நிலைமைகளிலும்தான் நிகழ்கின்றன.

சொற்கள் அவற்றின் பொருளை விடவும் வெவ்வேறு விளக்கங்களை அளிக்கும் போக்கு அதிகரித்துச் செல்கின்றன. மொழி இன்றும் அப்படியே வரையறுக்கப்பட்ட விளக்க எல்லைக்குள் நிற்க முடியாது மொழி விரிய முடியாமல் தத்தளிப்பதாகவே நினைக்கிறேன்.

மனப்பாங்கைஉருவாக்குவதில் மொழிக்கும் செயல்களுக்கும் பெரும் பங்குண்டு. நடத்தைகள் மனப்பாங்கின் வழியாக இயக்கம் கொள்கின்றன. நடத்தைகளே மனப்பாங்கை உருவாக்குவதிலும் பாதிப்பதிலும் பங்காற்றுகின்றன. நடத்தைகளுக்கு மொழியும் ஒரு வகையில் பிரதான அடிப்படையானது.

அம்மா என்ற சொல் உறவுச் சொல்லாகவும் அதன் வழி அது மதிப்புக்குரியதாகவும் இருந்தது. அம்மா என்ற உறவு மரியாதைக் குரிய பாத்திரமாக இருப்பதால் அது மதிப்புக்குரியதாகவும் மாறியது. ஆனால் அதன் முதன்னிலை விளங்கும் அம்மா என்பது உறவு-முதல் உறவு என்பதே.

இன்று அம்மா என்ற பதம் ஜெயலலிதாவை நினைவூட்டுகிற அளவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

அங்கேயிருந்த உறவு-மதிப்பு நிலையெல்லாம் இங்கே தலைகீழாக்கப்பட்டுள்ளன. இங்கே அம்மா என்று அழைப்பதன் நோக்கமென்ன? இந்த "அம்மா" என்ற சொல்லாடலுக்குள் நிறைந்திருக்கிற தந்திரங்களும் அரசியலும் மிகவும் ஆபத்தானவை. பயங்கரங்களின் நிழல் படர்ந்து வருகிறது மொழியின் மீது.

பேசுவதைவிடவும் பேசாதிருப்பதே நல்லது என்ற நிலை வசதியானது. பல சந்தர்ப்பங்களில் அதிகம் பேசாதவன் பலராலும் விரும்பப்படுகிறான். கூடுதலாகப் பேசுபவனை கொச்சைப்படுத்துதல் நிகழவில்லையா. விவரம், விளக்கம் சொல்வோர்கள் தவறாக விளங்கிக் கொள்ளப்படுகிறார்கள்.

மௌனமே மதிப்பைப் கொண்டிருக்கிறது. மொழியைவிடவும் மொழிதல் சரிவை நோக்கிச் செல்கிறது.

இது தகவல் யுகம் என்ற பிரகடனத்தின் கீழ் மௌனத்தின் இடமென்ன என்ற தலைகீழான கேள்வி இப்போது இங்கே எழுகிறது. மௌனமும் ஒரு மொழிதான் என்றொரு தயாரிக்கப்பட்ட தயார்நிலைப் பதிலும் உண்டு.

தகவல் யுகத்தில் பரிமாறப்படும் பண்டங்கள் புனைவுகளே புகழுரைகள், பொய்யலங்காரங்கள் ஆதரித்துப் பேசுதல் என்றவாறாக கீழிறங்கும் நிலைமைகளாலானவை. ஆனாலும் அவற்றையே விரும்புகிற யதார்த்தம் தான் இன்றுள்ளது. மனம் எதைக் கொள்வதற்குரியது என்ற கேள்வியில்லை.

கந்தன் டேவிற் கலா இப்படி தன்னனுபவங்களையும் தன் கவிதை சார்ந்த பார்வைகளையும் சொல்லிக்கொண்டேயிருந்தார். அதுவொரு விரிந்த உரையாடல்.

உண்மையைச் சார்ந்து இயங்கும் இதயத்தின் தத்தளிப்பு அந்த உரையாடலின் போதான மொழியிலும் உணர்ச்சித் தெறிப்பிலுமிருந்தது.

நிழலுக்கு வர்ணமடிக்கிற முயற்சிகளையே எப்போதும் பார்க்கிறேன். வர்ணங்களோடிருக்கும் உருவங்களை மனம் பெரிதாக விரும்புவதில்லையே.

கவிதையில் உண்மையைக் காணும்போது வாசகர்கள் அதிர்ச்சியடைகிறார்கள். உடனே அந்தக்கவிதையை விட்டு அடுத்த கவிதைக்குத் தாவுகிறார்கள். அதுவும் அப்படியே உண்மையின் தளத்திலேயே நிற்குதென்றால் உடனே அங்கிருந்து விலகி விடுகிறார்கள். அந்தக் கவிதைகளோடு அவற்றையெழுதிய கவிஞனையும் தள்ளிவிடுகிறார்கள்.

கந்தன் டேவிற் கலாவின் குரல் தீர்க்கமாக ஒலிக்கிறது. ஒளிநிரம்பிய கண்களை மேலும் கூர்மையாக்கிக்கொண்டு சற்று நேரம் அமைதியானார்.

அவர் எழுதிய கவிதைகள் நாற்பத்தியாறு. ஆனால் அவற்றை புரிந்து கொள்ளப்பட்ட விதங்கள் அல்லது விமர்சன அடையாளங்களின் வழி அவை இருநூற்று முப்பத்தொன்பது. இதைவிட வாசகர்கள் எத்தனை விதமாக அடையாளம் கண்டு எத்தனையாக அவற்றைக் கணக்கிட்டார்களோ!

கம்பராமாயணத்தை அண்ணாத்துரைவிளக்கியதொரு விதம். கம்பராமாயணத்தை நாம் விளங்குகிறது இன்னொருவிதம் நோக்கங்கள்தான் பெரும்பாலும் படைப்புகளை அணுகும் வழியைத் தீர்மானிக்கின்றன.

கருணாகரன்

# ஈரானின் அணுகுமுறை ஈரானைக் காப்பாற்றுமா?

இஸ்லாமிய நாடுகளை ஆக்கிரமிக்க முயலும் அமெரிக்காவின் போக்கை இஸ்லாமிய நாடுகள் முறியடிக்க எந்தளவு தூரம் பங்கெடுத்துக் கொண்டன. ஆக்கிரமிப்புச் சக்திகளைக் கையாள உலகளாவிய மட்டத்தில் தற்போது காணப்படும் தேசிய அரசுகள் முன்வைக்கும் தீர்வுகள் யதார்த்தமானவை என்று அளவிடமுடியுமா? அப்படியாயின் ஏன் ஆக்கிரமிப்பாளர்களின் இலக்கு நிறைவுபெறுவதுடன் உலக அரசியல் நின்றுவிடுகிறது. இதனை ஈரான் விடயத்தை மையமாகக்கொண்டு அளவீடு செய்ய முயலுவோம்.

கடந்த பல வாரங்களாக உலக அரசியலில் ஈரான் விவகாரமே முதன்மையாகப் பேசப்படுகின்றது. வேறுபல சம்பவங்கள் வந்துபோனாலும் உலகளாவிய தளத்தில் ஈரானை எப்படி கைப்பற்றுவது என்றும் ஈரான் அதனை எப்படி முறியடிப்பது என்பது பற்றியுமே அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. இதில் அமெரிக்க உபாயம் ஒன்றாக அமைய ஈரானின் உபாயம் எவ்வாறு காணப்படுகின்றது என்பதை அவதானிப்பதன் மூலம் அமெரிக்க ஆக்கிரமிப்புத் தொடருமா இல்லையா என்பதை முழுமைப்படுத்திவிடலாம்.

தற்போது ஈரான் உலக மட்டத்தில் அமெரிக்காவின் உபாயங்களை முறியடிக்க முயன்றுவருகிறது. அது இரண்டுவகையான உபாயத்தை தேர்ந்தெடுத்துள்ளது. ஏற்கனவே பல உபாயங்களைப் பரிசோதித்துப் பார்த்தபோதும் தற்போது ஈரான் நிற்கும் கட்டம் முக்கியமானது. தவிர்க்கமுடியாதது. இதனை எப்படி எதிர்கொள்கிறதோ அதன்படியே ஈரானின் எதிர்காலம் நிர்ணயமாகும். குறிப்பாக ஈரான் பிராந்திய சக்திகளை சேர்க்க எடுத்த முயற்சி மறுபக்கத்தில் அமெரிக்காவின் எதிரி நாடுகளோடும் அணுவாயுத நாடுகளோடும் ஒரு வகையான உறவு நிலையை சாத்தியப்படுத்திக்கொள்ள முயன்றது. அது மேலும் ஆக்கிரமிப்புச் சக்தியான அமெரிக்காவை குழப்பத்திலும், குதர்க்கத்துக்குள்ளும் அமுழ்த்தியது. மேலும் தயார்படவும் உலகளாவிய மட்டத்தில் பிரச்சாரங்களை அதிகப்படுத்தவும் அதனூடாக நன்மையடையவும் உதவியது. இது யதார்த்தத்தில் தவறான அதேநேரம் பிழையான முடிவுகளுக்கு வழிவகுக்கும்.

ஈராக் இப்படியே முயன்று இறுதியில் அமெரிக்காவின் பிரசன்னத்துக்கு உதவியது. அமெரிக்கப் பிரசன்னத்துக்கு ஈராக்கும் சதாம் உசைனும் பிரதான காரணகர்த்தாக்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. அதே பாணியில் ஈரானும் செயல்படுமாயின் நிச்சயமாக ஈராக்கின் நிலைமையையே எதிர்நோக்கவேண்டியதாக அமையும். அதனால் இன்றைய உலகத்தின் போக்கையும் அதற்கான ஒழுங்கு எப்படி உள்ளதெனவும் சரியாக அளவிடுவோமாயின் ஈரான் எவ்வாறு நடந்துகொள்ளமுடியும் என்பது தெளிவாகும்.

இன்றைய சமகால உலகம் உலகமயப்படுத்தலைத் தீவிரமாக அமுல்படுத்த முயலுகின்றதென்ற போக்கு அமெரிக்க மயப்படுத்தலையும் அத்தகைய மயவாக்கம் அமெரிக்கப் பேரரசுவாதத்துக்கான கட்டுமானத்தைக் கொண்டதாகவும் உள்ளது. ரோமப் பேரரசு விஞ்ஞான, தொழில்நுட்ப, தகவல் வளர்ச்சி குறைவான காலத்தில் பிராந்திய சக்திகளும் தனிமனித எழுச்சிகளும் சாத்தியப்பாடுடையதாக அமைந்தது. அதன் வடிவத்தில் அமெரிக்கப் பேரரசுக்கான போக்கு அமைய வாய்ப்புக் குறைவு. காரணம் தொழில்நுட்பத்தின் தகவலின் வளர்ச்சி சீரான வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனாலே அமெரிக்காவின் செல்வாக்கும் பரவலும் ஒரே வகையானதாக உலகத்தை மாற்றுவதற்கான போக்காகவே அமையும். அரசுகளும், அதன் ஆட்சியாளர்களும் தாம் நினைப்பதை விடுத்து அமெரிக்கா நினைப்பதை அமுல்படுத்துபவர்களாக மாறும் நிலையையே அமெரிக்கா விரும்புகின்றது.

அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை இரண்டு மாதிரிகளை அமுல்படுத்துவதாக 2005 காணப்படுகிறது. புஷ்ஷின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில் இணைப்புகளற்ற அல்லது தொடர்பற்ற வெளிநாட்டுக் கொள்கையும், இரண்டாவது எதிரிகள், ஆபத்தான அரசுகள், ஆட்சியாளர்கள் யார் என இனங்கண்டு அவர்களுடன் பின்பற்றும் உறவு முறைகளைக் கொண்டது என வகுக்கப்பட்டுள்ளது. இதில் முதலாவது வெளிநாட்டுக் கொள்கையானது அரசுகளுடன் பரஸ்பரம் கொள்கைகளை வரைந்து அதற்குக்கீழ் ஒப்பமிட்டுச்செயல்படும் போக்கை அமெரிக்கா நிராகரித்துவிட்டது. கணிசமான அரசுகளின் எல்லைகளுக்குள் அமெரிக்காவின் பிரசன்னமும், சுரண்டலும் விலகலும் எந்த உறவுமுறைக்குட்படாத நிபந்தனையுடனும் அமையாத போக்கு நிர்ணயமானதாக உள்ளது. இது அரசுகளுக்கிடையிலான உறவு முறையில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றமாகும். அரசுக்கும் இன்னோர் அரசுக்குமான உறவென்பது இல்லாது போவதுடன் அமெரிக்கப் பேரரசின் போக்குக்குள் ஏனைய பிரதேச மக்களும் அவர்களின் நிர்வாக அலகுகளும் என்ற நிலைமையை ஏற்படுத்த விளைகின்ற போக்கையே அவதானிக்க முடிகின்றது. இதுவே புஷ் தலைமையிலான அமெரிக்க பேரரசின் வெளிநாட்டுக்கொள்கையில் ஒன்றாக உள்ளது.



இரண்டாவது பகுதி எதிரி நாடுகளை எப்படிக் கையாளுவதென்பதிலான வெளிநாட்டுக் கொள்கை (Still danger) யாகும். இது இப்போது ஆபத்தான அரசுகள் எனக் கருதுபவைகளை அணுகுவதற்கான உறவு முறையாகும். குறிப்பாக எதிரிநாடுகள் அல்லது ஆபத்தான நாடுகள் என்பது அமெரிக்க மயவர்க்கத்தை நிராகரிக்கும் நாடுகள் என்பதாகும். அவற்றை இனங்கண்டு தோற்கடிப்பதே அமெரிக்கக் கொள்கையாகவுள்ளது. இது முழுமையாக அமுலாக்கப்படுவதென்பதைவிட எதிரிகளை இனங்கண்டு அழிப்பதாகவே அமையும். இசைந்து போகும் அதே நேரத்தில் வலுவற்றவையென இனங்காணப்படும் அரசுகளோ மக்களோ எந்தவிதத்திலும் நெருக்கடிகளிலிருந்தும் விலக்கப்படுவார்கள். ஆனால் இவ்வகையான அமெரிக்கக் கொள்கை வகுப்புக்கு பிரதான எதிர்ப்பினைக் கொண்டிருக்கும் அரசுகளை விடுத்து அமெரிக்கா கீழைத்தேச நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்திவருகின்றது. அவ்வகையான கொள்கை வகுப்புக்குள் ஈராக் போன்று ஈரான் அமைந்துவிடக்கூடாதென்பதே தற்போதைய ஈரானிய ஆட்சியாளரின் இலக்காக உள்ளது.

ஈரான் கடந்த வாரத்தில் சில தந்திரமான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. ஒன்று ஐரோப்பிய நாடுகளை தமக்குச் சார்பாக அணிதிரட்டுவது. இதில் பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா போன்ற வலுவான அரசுகளுடன் ஈரானிய வெளிவிவகார அமைச்சின் குழு கலந்துரையாடியதுடன் அணுவாயுத உற்பத்தியை தாம் மேற்கொள்ளப் போவதில்லை எனவும் தமது விஞ்ஞான தொழில்நுட்ப தகவல் பரிமாற்றத்தைப் பெறுவதற்காகவே தாம் முயல்வதாகவும் கூறியிருப்பதுடன் அதனை ஐரோப்பிய அரசுகளிடம் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இது எந்தளவுக்கு ஈரான் மீதான இராணுவ நடவடிக்கையை நிறுத்தும். ஏற்கனவே உள்ள அனுபவத்தைக் கொண்டு பார்க்கும்போது அதற்கான வாய்ப்பு அரிதாகவே உள்ளது. ஐரோப்பிய அரசுகளை அமெரிக்கா எதிர்த்தோ எதிர்க்காமலோ அல்லது எதுவாயினும் ஈராக் மீது போரை நிகழ்த்தியது. போரை ஐரோப்பாவில் சில அரசுகள் எதிர்த்தன. ஆனால் ஐரோப்பிய மக்கள் முழுமையாகவே எதிர்த்தனர். இருந்தபோதும் போர் யதார்த்தமாக்கியது அமெரிக்கா.

ஐங்கரன்

ஆனால் ஈரான் மீதான இராணுவ நடவடிக்கையை ராஜீக முயற்சிகளால் முறியடிக்க முடியாது என்பதே ஈராக்கின் பின்பான அனுபவமாக உள்ளது. வீட்டோ நாடுகளின் பலம் அரசுகளின் பலம் என்பதை அமெரிக்காவுக்கு முன்னால் சாத்தியப்பாடற்றதொன்றாகிவிட்டது.

இரண்டாவது நிலையில் ஈரான் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக எச்சரித்துள்ளது. குறிப்பாக பொருளாதாரத் தடை விதித்தால் அணுவாயுத உற்பத்திக்கான ஆரம்பகட்ட நடவடிக்கையை தயார் செய்யப்போவதாகக் கூறியுள்ளது. உண்மையில் ஈரான் அணுவாயுத தயாரிப்புக்கான கணிசமான வேலைகளை முடித்துள்ளது. இது நிரந்தரமான ஆயுத உற்பத்திக்கான உபாயமாகவே தெரிகின்றது.

இவ்வாறு ஈரான் மிரட்டுவது அமெரிக்க இராணுவ நடவடிக்கையை நிறுத்துமா? உண்மையில் அணுவாயுதம் என்பது அமெரிக்காவிடம் மட்டும் உள்ள உற்பத்தி சக்தியல்ல உலகத்தில் பல நாடுகளிடம் உள்ள விடயம். இன்று பாகிஸ்தானிடம் அதாவது இஸ்லாமிய உலகத்திடம் அணுவாயுதம் கிடைத்துவிட்டது. அதனால் இஸ்லாமியரிடம் கிடைக்கக்கூடாது என்பதல்ல. அப்படியாயின் ஈரானிடம் அணுவாயுதம் கிடைப்பதாலோ அல்லது பரிசோதனையை நிகழ்த்தினாலோ அமெரிக்க நடவடிக்கை நிறுத்தப்படப்போவதில்லை. ஆனால் இந்தகைய நடவடிக்கையூடாக இஸ்ரேலுக்கு பாதுகாப்பளிக்க அமெரிக்கா திட்டமிடலாம். படிப்படியாக இஸ்ரேலுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை தகர்த்துவிடுவதே அமெரிக்காவின் பிரதான நோக்கம். ஆகவே ஈரான் அமெரிக்காவை மிரட்டுவதை ஓர் உபாயமாகக் கொள்வது கடினமான விளைவுகளை ஏற்படுத்துமே அன்றி ஈரானுக்கு சாதகமானதாக அமைய வாய்ப்புக் குறைவாகவே உலக ஒழுங்கு காணப்படுகின்றது.

அப்படியாயின் ஈரான் எத்தகைய வழிமுறைகளை மேற்கொள்வது பொருத்தமாக அமையும் என்பதே அடுத்த கேள்வியாகும். பேரரசுவாதத்தை அடையும் அரசுகளை உதிரிகளாகவும், எதிரிகளாகவும் இருந்து எதிர்கொள்வது ஆபத்தானதாகவே அமையும். அமெரிக்கப் பேரரசுவாதத்தை அதே பாணிக்குள்ளும் எதிர்பார்க்கைக்குள்ளும் இசைந்துபோவது போல் காட்டிக் கொண்டும், அடிபணிவதுபோல் வெளிப்படையாகக் காட்டிக்கொண்டும் பலமாகவும் யதார்த்தமாகவும் மக்களுடனும் ஆட்சி முறைமையுடனும் சுமூகமாகவும் பொருத்தப்பாடுடையதாகவும் நடந்துகொள்வதே அதிகமான சாதகத்தன்மையை ஏற்படுத்தும்.

இவ்வகையான அணுகுமுறைக்குள் ஈரான் மேலும் ஆழமான மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். பாதுகாப்பைப் பேணுகின்ற அதே நேரம் பேரரசுகளுடன் ஒத்துழைத்து காரியத்தை அடைதல் வேண்டும். பேரரசோ அல்லது அவை சார்ந்த அரசுகளோ கொடுக்கும் நெருக்கடிகளையும் முறியடித்துச் செயற்பட வேண்டும். அமெரிக்காவை மிரட்டுவதை விடுத்து இசைந்து போய் செயற் படுவதாகக்காட்டிக் கொள்வதுடன் அமெரிக்கப் பாணியில் அமெரிக்காவை தோற்கடிப்பதே பொருத்தம்.

'எனவே தொகுத்து நோக்கும் போது ஈரானின் அணுகுமுறை ஈரான் மீதான நடவடிக்கை அதிகப்படுத்துவதாகவே உள்ளது. நிரந்தரமான மாறுதலை நோக்கி உலகத்தில் திருப்பங்களை ஏற்படுத்தக்கூடிய அணுகுமுறை மிக மட்டமானதாகவே காணப்படுகின்றது.



# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 11 . 03 . 2005

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com


# கூச்சல் புதிதல்ல...!

உலகவங்கியின் பணிப்பாளர் பீற்றர் ஹறோல்ட்டை "வெள்ளைப் புலியாக" வர்ணிக்கும் அளவுக்கு இனவாதிகளின் கோபம் உச்சத்திலிருக்கிறது.

இந்த கோபம் ஒன்றும் ஆச்சரியத்திற்குரிய தொன்றோ அல்லது இலங்கையில் புதிதானதொருவிடயமோ அல்ல.

இப்பொழுதெல்லாம் விடுதலைப்புலிகள் அமைப்பை அல்லது புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கின்ற தமிழர் தாயகம் தொடர்பாகவோ எவரும் யதார்த்தத்தையொட்டி கருத்துக்களை தெரிவித்தால் கொழும்பில் அதுபெரும் பிரளயமாக்கப்படுகின்றதொரு வழமை காணப்படுகிறது.

இதற்கு பல காரணங்கள் உண்டு.

தமிழர் விவகாரம் சார்ந்து எதிர்ப்பு அரசியல் நடத்தும் கட்சிகளின் எண்ணிக்கை அதிகளவில் இப்போது கொழும்பில் உள்ளன.

இத்தகைய கட்சிகளுக்கு இருக்கும் வாக்குகளும் கூட இனவாதக் கருத்துக்களை ஊட்டி பெறுகின்ற வாக்குத் தொகைகளாகவே உள்ளன.

இதனை தொடர்ந்து காப்பாற்றிக்கொள்ளவேண்டுமாயின், இவ்வாறு ஏதாவதொரு விவகாரத்தை சூடாக்கி இத்தகைய கட்சிகள் குளிர்காயவேண்டிய அவசியத்திலிருக்கின்றன.

அத்தோடு, துண்டாகிப்போவதற்கான எல்லா அம்சங்களையும் தாங்கி வலுவான ஒரு பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டிலிருப்பதுடன், எல்லாவகையான நிர்மாண அமைப்பு நிர்வாகங்களும் செவ்வனே புலிகளின் பகுதியில் உள்ளதென்பது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நாட்டின் பிரதிநிதி களுக்கூடாகவோ அல்லது ஒரு அமைப்பின் பிரதி நிதியின் கூற்றின் ஊடாகவோ வெளிவருவது என்பது வலிந்து ஒட்டி வைத்துக்கொள்ள முயலும் தமிழர் தாயகத்தை இழந்ததாகிவிடும் என்ற சிங்களதேசத்தின் அர்த்தமற்ற அச்சமேயாகும்.

அதாவது, இன்று சர்வதேசத்தின் எல்லைகள் யாவையும் எட்டிவிட்ட தமிழர்தாயகம், தமிழரின் படைபலம், தமிழரின் நிர்வாக அமைப்புகள் போன்றவற்றின் கீர்த்தியை இந்த சில பெறுமதியற்ற அமைப்புக்கள் இடும் கூச்சல் இடுவதன் மூலம் தடுத்துவிடலாம் என எண்ணுகின்றன.

இதற்காக இந்த இனவாதிகள் அரசின் அனுசரணையோடு நாட்டைவிட்டு எவரையும் வெளியேற்றவும், கூறாத கருத்தை கூறியதாக திரிவுபடுத்தவும் தயங்கப்போவதில்லை.

இவர்களுக்கு பக்கத்துணையாக இனவாதத்தை பெரிதும் பிரதிபலிக்கின்ற சில சிங்கள ஆங்கில ஊடகங்களும் துணைநிற்கின்றன.

எது எப்படியோ சுனாமிப் பேரலை பேரனர்த்தத்தின் பின்னர் அரசு ஜே.வி.பி மற்றும் இனவாதக்கட்சிகளினதும் அமைப்புக்களினதும் கோபங்கள் பெருமளவு அரசசார்பற்ற நிறுவனங்கள் மீது திரும்பியிருந்தன.

ஜே.வி.பி அரசசார்பற்ற நிறுவனங்கள் மீதான தனது கோபத்தை பகிரங்கமாக நாடாளுமன்றம் முதல் பாமர சிங்கள மக்கள்வரை கொட்டி கொண்டிருக்கிறதை பொதுவாக அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இந்த நிலையில்தான் இப்போது இவர்களின் கோபம் இலங்கைக்கான உலகவங்கியின் பிரதிநிதி பீற்றர் ஹறோல்ட்டின் பக்கம் திரும்பியுள்ளது.

இதற்கு இந்த நிறுவனங்கள் புலிகள் அமைப்போடு இணைந்து பணியாற்ற முயல்வதையும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இணைந்து பணியாற்றவேண்டியே உள்ளது. என்ற யதார்த்தத்தை ஏற்றுச்செயற்பட முனைவதின் காழ்ப்புணர்ச்சியே அன்றி வேறில்லை.

இலங்கையின் சமாதான முயற்சியோடு தொடர்புபட்ட இராஜதந்திரிகள் பலரின் வெளியேற்றத்துக்குக் காரணமாக அல்லது அவர்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் இந்த அமைப்புக்கள் மற்றும் அரசு செயற்பட்டு வருகின்றமை கவனிக்கத்தக்கது.

இது இலங்கையில் அரசு- புலிகள் விவகாரத்தில் யதார்த்தத்தை ஒட்டி கருத்துக்களை சொல்லவோ அல்லது தீர்மானங்களை எடுக்கவோ எவர் முயன்றாலும் இனவாத சக்திகள் இவ்வாறுதான் செயற்பட முனையும்.

இதற்கு இராஜதந்திர வட்டாரங்கள் அழுத்தமான ஒரு பதில் நடவடிக்கை எடுக்காதவரை இந்த நாடுகடத்த தூண்டும் காரியங்கள் தொடரவே செய்யும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின் இத்தீவில் தமிழ் மக்கள் அனுபவித்த துயரங்கள் சொல்லில் அடங்காதவை. பேரினவாத சிங்களத் தலைமைகள் இத்தீவை ஒரு தனி பௌத்த சிங்களத்தீவாக மாற்றுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளே தமிழர்களின் இன்றைய தனி நாட்டு கோரிக்கையின் பின்னணி.

1948 இற்குப் பின் இத்தீவில் தமிழ் மக்கள் அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும், அழிக்கப்பட்டும், உரிமைகள் மறுக்கப்பட்டும், பறிக்கப்பட்டும், பூர்வீக இடங்களில் அகதிகளாக. அநாதைகளாக எடுப்பார் கைப்பிள்ளை போன்று இனவாத சிங்களத் தலைமைகளால் நடத்தப்பட்டு வந்தனர்.

ஓரினத்தால் மற்றோர் இனம் அடக்கப்படும் போது அந்த அடக்கப்படுகின்ற இனம் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுவது உலக நியதி. அவ்வாறு எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுகின்றபோது அடக்க நினைக்கின்ற இனம் தங்களது இராணுவ மற்றும் இதர பலத்தைப் பயன்படுத்தி அவர்களது போராட்டங்களை அழித்துவிடுவது உலக வழக்காகிவிட்டது.

சம்பவம் ஒன்று. அந் நிகழ்வு தமிழ் இன சுத்திகரிப்பாகவே கருதப்படுகின்றது. பௌத்த பிக்குமார்களின் ஆலோசனைகளைப் பெற்று ஆட்சி செய்கின்ற சிங்கள அரசு அவர்களது ஆசைகளுக்குத் தூபமிடவே அந்நிகழ்வை அரங்கேற்றியது. கொல்லாமை சொன்ன புத்தனின் போதனைகள் சிறிலங்காவில் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டன. புத்த பிக்குகளின் கைகளில் பாத்திரங்களுக்குப் பதிலாக தமிழர்களின் மண்டை ஓடுகள் தவழ்ந்தன. இதுதான் முடியாது என்று. அதற்கு எமது அன்றைய தமிழ் தலைவர்கள் நடத்திய போராட்டமும் அதனை சிங்கள தேசம் அடக்கிய முறையும் பாடமாக இருந்தது.

தமிழர்கள் வந்தேறுகுடிகள் என கூறிய சிங்கள தேசம் இன்று அவர்களை சம அந்தஸ்துடன் ஒரே மேசையில் சந்தித்துப் பேசுகின்றனர். இதற்கெல்லாம் காரணம் தமிழர்களின் படைபலமே என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இவ்வாறு வியாபித்ததுதான் தமிழர்களின் போராட்டம்.



# எதுவரை தொடரப்போகிறது?

அவ்வாறுதான் இலங்கைத் தமிழர்கள் ஆரம்ப காலங்களில் அகிம்சை வழியில் சிங்கள தேசத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக எதிர்ப்புப் போராட்டங்களில் இறங்கினர்.

இதன்போது சிங்கள அரசு தனது இராணுவ பலத்தை பயன்படுத்தி நிராயுதபாணிகளாக நின்ற அன்றைய தமிழர்களை அடக்கினர். தந்தை செல்வா காலிமுகத்திடலில் சாத்வீகப் போராட்டத்தை அமைதியாக நடத்தியபோது அன்றைய சிங்கள தலைமைகள் சிங்களக் காடையர்களைப் பயன்படுத்தி அடக்கியது. இருந்தும் அன்றைய எமது தமிழ் மக்களது போராட்டங்களைத்தான் அவர்களால் அடக்க முடிந்ததே தவிர தமிழர்களின் உணர்வுகளை அவர்களால் அசைக்க முடியவில்லை.

1987யூலையில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இனக் கலவரம் தமிழர்களின் வாழ்வில் என்றுமே மறந்துவிட முடியாத இன்றைய சிங்கள பௌத்த போதனைகளாக இருக்கின்றன.

யாழ் நூலகம் எரிக்கப்பட்டதில் இருந்து தமிழ் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டது தொடக்கம் பல்வேறு இன அழிப்பு நடவடிக்கைகளை தமிழர்கள் மீது அவிழ்த்து விடப்பட்டிருந்தது.

இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் சிங்களவர்களாக மாற நிர்ப்பந்திக்கப்பட்டமையையும், அழிக்கப்பட்டமையையும் தடுக்கும் வகையில் தமிழ் இனத்தின் தலைவர் உருவெடுத்தார். இத்தீவில் தமிழ் மக்கள் சிங்கள மக்களைப் போன்று சம அந்தஸ்துடன் வாழ

**மு.தமிழ்ச்செல்வன்**

வேண்டும் என்பதற்காக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆயுத வழியில் ஆரம்பித்து வைத்தவர். விடுதலைப்புலிகளுக்கு நன்றாகவே தெரியும் அகிம்சை வழியில் சிங்கள தேசத்திடம் இருந்து எமது உரிமைகளை வென்றெடுக்க உரிமை பெற்றுக்கொள்வதற்காக இன்றும் சமாதானத்தை ஏற்படுத்தி பேச்சுவார்த்தை மூலம் தீர்வை பெற்றுக்கொள்ளவென ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை மூன்றாண்டைப் பூர்த்திசெய்துவிட்டது. ஆனால் பயன் ஏதும் கிடைக்கவில்லை. இக் காலப்பகுதியில் தமிழ் மக்களும், தமிழ் இன காவலர்களான விடுதலைப்புலிகளும் தங்களது உறவுகளை இழந்து கொண்டிருக்கின்றனர் என்பது தான் வேதனையானது. ஆனால் இவற்றுக்கெல்லாம் விரைவில் ஓர் முடிவு வரும் என்பதில் சந்தேகம் இல்லை.

எமது போராளிகளும் தமிழ் மக்களும் இவ்வாறு கொல்லப்பட்டுக்கொண்டிருப்பதனை 'எமது தலைமை பார்த்துக்கொண்டிருக்காது' என்ற அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்களின் கூற்று சாதாரணமானதன்று வெகுவிரைவில் இவற்றுக்கெல்லாம் சிங்கள தேசம் பதில் சொல்லும்.





*மீண்டும் முகமூடியுடன் மட்டக்களப்பில் தலையாட்டி-செய்தி*
"கை காட்டியள் எப்பவாம்"

*சமஷ்டி முறையில் விரைந்து தீர்வு - சனாதிபதி.*
"ஆருக்கெண்டதுதான் கேள்வி"

*புலிகள் விமானப்படை குறித்து அமெரிக்காவிடம் முறைப்படுகிறது. சிறிலங்கா அரசு - செய்தி.*
"விமானப்படைதானோ விமான எதிர்ப்புப் படையுமோ"

*உலக வங்கி வடக்குக்கிழக்குக்கு உதவுவது பற்றி ஜே.வி.பி எதிர்ப்பு.*
"கட்டில கிடக்கிறநாய் குலைக்கத்தான் செய்யும்"

*கஞ்சா கடத்தி யாழ்.கொண்டுசெல்ல முயன்றவர் புளியங்குளத்தில் சிக்கினார். - செய்தி.*
"யாழ்ப்பாணத் தெருவெல்லாம் கஞ்சாவிதைச்சிருக்குதெண்டு இவருக்குத் தெரியாதோ?"



# அநீதியால் எழும் கோபங்கள்



தமிழர் தாயகம் நாளாக ஆக பொறுமை இழந்து வருகின்றது. என்பதை நிகழ்வுகள் கோடி காட்டு கின்றன. பொறுமையிழப்பை வெளிக் காட்டுவதற்கான சந்தர்ப்பங்களையும் சிறிலங்கா அரசும் படைகளுமே ஏற்படுத்திக் கொடுத்துக் கொள்கின் றன. மார்ச் மாதத்தில் மட்டும் வடக் கிலும் கிழக்கிலும் நடந்த சம்ப வங்களை நோக்கினாலே இதனைப் புரிந்து கொள்ளலாம்.

இனவிடுதலைப் போராட்டம் தீவிரமடையத் தொடங்கியதன் பின் பான அமைதிப் பேச்சுக் காலங்களில் எல்லாம் ஒரே மாதிரியான நிகழ்வு நடந்திருக்கிறது. சமாதானத்தின் மீது பற்றுறுதி கொண்டு, ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தருணத்தில் சிறி லங்காப் படைகள் கிழக்கில் போராளி கள் மீதும் மக்கள் மீதும் வன் முறைகளைக் கட்டவிழ்க்கும்; உயிரி ழப்புக்களை ஏற்படுத்தும்.

பொறுமைக்கும் விடுதலைப் போராட்டத்தின் தார்மீக அடிப்படை களுக்கும் சவாலாக சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளும். இந்திய அமைதி முயற்சிகள் முதல் சந்திரிகா அரசுடனான கடந்த தசாப்தப் பேச்சுக்கள் வரை எல்லாம் முடிவுக்கு வந்தது இந்த வகையில் தான்.

கிழக்கில் தொடங்கப்படும் சிறிலங்காப் படைகளின் அடாவடித் தனங்கள் வடக்கு வரை குழப் பங்களை உண்டு பண்ணி யுத்தம் ஒன்றுக்கான ஏதுநிலைகளை உரு வாக்குகின்றன. கடந்த மாதம் லெப். கேணல் கௌசல்யன் உட்பட்ட போராளிகளினதும் மாமனிதர் சந்திர நேருவினதும் படுகொலைகளுடன் திரும்பவும் அந்த உத்தியை படைத் தரப்பு கையில் எடுத்துள்ளது. தொடர்ந்து போராளிகள் மீதான தாக்கு தல்களை மேற்கொண்டதன் மூலம் அதன் பிரதிபலிப்பான மக்கள் எதிர்ப் புப் போராட்டங்களுக்கு வடக்கில் இடமளித்தது.

கடந்த மாத பிற்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் வெகுசனப் போராட்டங்களும் சிறிலங்கா படை களுக்கு எதிரான கிளர்ச்சிகளும் இடம்பெறுகின்றன. இந்த நிலை யில் சுனாமி அனர்த்தத்தால் பாதிப் புற்றோருக்கு மறுவாழ்வும் வழங்கு தல் என்ற போர்வையில் திரு கோணமலையில் சிங்களக் குடி யேற்றம் ஒன்றையும் ஜே.வி.பி தொடங்கியிருக்கின்றது.

இவையாவும் சீற்றம் கொண்டு மக்களைக் குரல் எழுப்பச் செய்துள்ளன; வீதிக்கு இறங்கி தமிழர் தாயகம் எங்கும் மக்களைப் போராடச்செய்திருக்கின்றன. இப் போராட்டங்கள் ஓய்வு நிலைக்கு வந்துவிடாதபடி யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளியன்று படையினர் நிகழ்த்திய அடாவடித்தனம் காரியம் ஆற்றியிருக்கிறது.

ஒரு வாரத்துக்கு முன்பதாகத்தான் சுமார் அறுபதாயிரம் பேர் வரை பங்கேற்ற மாபெரும் பேரணி ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. அதன் சூடு ஆறமுன்னரே பதினொரு வயதான வேம்படி மகளிர் கல்லூரி பாடசாலை மாணவி இராணுவ வாகனத்தால் மோதுண்டு உயிரிழந்தார்.

இது சடுதியாக ஏற்படுத்திய உணர்ச்சிப் பிரவாகம் குடாநாட்டில் உள்ள படையினருக்கு எதிரான போராட்டமாக வெடித்தது. மக்களதும் மாணவர்களதும் வீதிமறியல் போராட் டங்களை பொலிசாரும் படையினரும் முரட்டுத் தனமாக எதிர்கொண்டனர், அத்துடன் மாணவி கொலையுறக் காரணமான விபத்துத் தடயங்களைப் படையினர் நீதி விசாரணைகளுக்கு முன்னதாக அகற்றினர்.

இவை அனைத்தும் சேர்ந்து வன்முறை தழுவிய சிறிலங்கா படை யினருக்கு எதிரான நடவடிக்கை களுக்கு இட்டுச் சென்றுள்ளன. படை யினரின் வாகனங்கள் தாக்கப்பட்டு, எரியூட்டப்பட்டன, காவலரண்கள், சிறி லங்கா புலனாய்வுப் பிரிவினரின் அப் பக்கடை என்பன அடித்து நொருக் கப்பட்டன.

இந்தச் சம்பவம் தனியே பாட சாலைமாணவி ஒருவர் கொல்லப் பட்டமைக்கான எதிர்ப்புணர்வு அல்ல. சமாதானத்துக்கான காலத்தில் சமாதானமுமின்றி கடந்த கால ஆக்கிரமிப்புகளின் நெருக்கீடு களில் இருந்து மீட்சியும் இன்றி வாழும் நிர்ப்பந்தத்துக்குள்ளான வர்களின் கொதிப்புணர்வு என்றே இதனைப் பார்க்கவேண்டி உள்ளது.

சிறிலங்காப் படைக ளின் நடவடிக்கைகளால் நிரந்தர மாக மனங்களில் பதிந்து விட்ட வெறுப்பு, இத்தகைய சந்தர்ப் பங்களில் பீறிட்டுக்கிளம்பு கின்றது. இது குடாநாட்டிலோ தமிழர் தாயகத்திலோ படை யினரின் பிரசன்னம் இருப்பதை விரும்பவில்லை என்பதைத்தான் கோடிகாட்டுகின்றது.

ஆனால், இதனை எதிர்க்கின்ற ஏற்றுக்கொள்ளாதவர்களின் விமர் சனம் தற்செயலான ஒரு வீதி விபத்தை அரசியலாக்கிவிட்டார்கள் என்பதாக உள்ளது.

இது நியாயமான வாத மல்ல. முதலாவது யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் எந்த விபத்து மரணத்தின் பின்னரும் விபத்துக்குக் காரணமானவர்கள் மீதான எதிர்ப் புணர்வு இயல்பாகத் தோன்றி வருவது கவனிக்கப்பட வேண்டும். அதில் எந்தப் பின்னணியும் இருந்த தில்லை.

இரண்டாவது மிக முக்கியமான காரணம் இலங்கைத் தீவு முழுவதும் நாளாந்தம் வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. ஆனால், சிறிலங்கா இராணுவ வாக னங்களால் மக்கள் விபத்துக்குள் ளாவதும் உயிரிழப்பதும் யாழ்ப் பாணத்தில் மட்டும்தான் நடக் கின்றன. குறித்த மாணவி உயிரிழந்த சம்பவம்தான் இதில் முதலாவ துமல்ல. இதனை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியும் சம்பந்தப்பட்டவர் களுக்கு சுட்டிக் காட்டியிருக்கிறார்.

ஏற்கனவே சிறிலங்கா படை யினரின் பிரசன்னம் முதல் அவர்க ளின் உயர்பாதுகாப்பு வலயக் கெடு பிடிகளால் சீற்றமுற்றுள்ளவர்கள், சமாதானத்துக்கான காலத்தில் சீற்றம் தணிந்து திசை திரும்பிவிடவில்லை. இன்றும் தொடரும் அவர்களின் அகதிமுகாம் வாழ்க்கை பரவலாக யாழ்ப்பாணம் முழுவதும் படைக ளுக்கு எதிரான உணர்வை கனல வைத்துக்கொண்டிருக்கின்றது.

அதுவே சந்தர்ப்பம் கிடைக் கும் போதெல்லாம் பற்றி எரிகின்றது. அதிலும் திரும்பத் திரும்ப வாகன விபத்து என்ற போர்வையில் மக்க ளைப் பலியெடுக்கும்போது கடும் கொந்தளிப்பை உண்டு பண்ணு கிறது.

இந்த யதார்த்தத்தை மறந்து விடும் எவரும் கூறும் கருத்துக்கள் விசனத் துக்குரியவை: செயற்பாடுகள் விமர்சனத்துக்குரியவை.

**ஞாபகன்**

---



# "உதவி கோராமல் சுயமாய் இருப்பதற்கு உதவுங்கள்"

அது 1908 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குளிர் காலத்தின் பதின் மூன்றாவது வாரத்தில் ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்க ளான பெண்கள் முப்பதுனாயிரம் பேர் பணிப்புறக்கணிப்புப் போராட் டத்துடன் வீதிகளில் இறங்கினர். குறைந்த வேதனம், நீண்ட பணி நேரம், மனிதாபிமானமற்ற பனிச் சூழல் என்பவற்றுக்கெதிராக நியூயோர்க் வீதிகளில் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட இவர்களின் போராட்ட சுலோகமாக **Bread and roses** அமைந்திருந்தது. பாண் பொருளாதாரப் பாதுகாப்பின் குறியீடாகவும், றோசா மேம் பாடான வாழ்க்கைத்தரத்தையும் சுட்டி நின்றன. இரண்டு வருடங் களின் பின் அதாவது 1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பெண்களுக்கான சோசலிச சர் வதேச அமைப்பு இந்தப் போராட் டத்தைக் குறித்த நாளை பெண் களுக்கான விடுதலை நோக்கிய பயணத்தின் நாளாகக் குறிக்கும் மகளிர் தினமாகக் கொண்டாடு கின்றனர்.

பெரும்பாலும் மாயக்காரியங் களாகவும் வேட்டை நாய்களா கவும் **(Witches and bitches)** சமுதாயத்தால் கணிக்கப்பட்ட பெண்கள் மதரீதியான தத்து வார்த்தங்களிலும் சிலுவை களிலேயே அறையப்பட்டிருந் தனர். எப்போதும் கொட்டுவதற் குத் தயாராக நிற்கும் ஒரு தேள் என யூத ஆதிக் கிருஸ்தவ சமூகங்களால் குறிக்கப்பட்ட பெண்கள் பேகன் அரேபியர்க ளால் சாத்தானின் கையில் உள்ள சாட்டை எனவும் உவ மைப்படுத்தப்பட்டனர். உலக சனத்தொகையின் அரைப் பகுதியினரான இவர்கள் பலவீ னமான பாலராக உலகில் எல்லா இடங்களிலுமே கடந்த நூற்றாண்டு வரை கருதப் பட்டனர். மனித உரிமைகள் பட் டய உருவாக்கக் கருதுகோள் களிலும் **(Concept of Human rights)** பெண்கள் மீதான ஒடுக்கு முறை செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் ஒன்றாக இடம் பெற்றிருந்தது.

இப்போது நிலைமை மாற்ற மடைந்து விட்டது. பெண்கள் தாயாக, தாரமாக வகித்த பாத் திரத்தோடு குடும்பத்தின் உழைப் பாளர்களாகவும் பாத்திரம் வகிக்கத் தொடங்கிவிட்டனர். பரந்தளவில் ஏற்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்பு இதற்குக் காலாக அமைந் திருந்தது. ஆனால் இன்றைய சிறி லங்காவில் எழுபது பில்லியன் ரூபாய்களுக்குமேல் வருமானம் ஈட்டித்தரும் முக்கிய வருமான ஊடகங்களில் ஆடைக்கைத் தொழிற்சாலைகளில், வெளிநாடு களில், தேயிலைத் தோட்டங் களில் அறுபதுனாயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் குறைந்த வருமானத்தில் நீண்டவேலை நேரத்துக்கு மனிதாபிமானமற்ற வேலைச்சூழ்நிலைக்கு உட்படுத் தப்படுகிறார்கள் என அமைப் புக்கள் பல தெரிவிக்கின் றன. திறந்த பொருளா தாரக் கொள்கையின் அடிப் படையில் ஏற்படுத்தப்பட்ட உலகமயமாதல் கோட் பாடுகளின் கீழ் அபிவிருத் தியடைந்த மேற்குலகில் பால் சமத்துவத்துக்கான பல்வேறு சட்ட சமூக பாது காப்பு ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ள நிலையில் அபிவிருத்தியில் பின் தங் கிய மூன்றாம் உலக நாடு களின் பெண்கள் 1908 ஆம் ஆண்டில் நியூயோர்க் வீதியில் இறங்கிய பெண் களின் நிலையிலேயே உள்ளனர். இதுவும் உலக மயமாதலின் பக்கவிளைவுகளே.

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு பற்றல் என்பது ஒரு பாரிய சமூக மாற்றத்தை விளை வித்துக்கொண்டிருக்கையில், இன்றும் சமூகத்தின் அடித் தளத்தில் கருத்தியல் மாற் றங்களுக்கும் உட்படவிரும்பாது இன்னும் தங்கள் பாரம்பரியம் எனும் பழமைவாதக் கருத்துக் களுக்குள் புதைந்து போயுள்ள சமூகக்கட்டமைப்பொன்றும் இன் னும் வாழ்ந்துகொண்டுள்ளது என்பதற்கான சாட்சியங்கள் இருக்கின்றன.

கிளிநொச்சி அழகியல் கலா மன்றம் பால் சமத்துவத்திற்கான நிறுவனம் ஒன்றுடன் இணைந்து நடத்திய அரங்காற்றுகளில் பகிரங் கமாகவே அந்த ஆற்றுகையாளர் களான ஆசிரியர்களுடன் முற் பட்டதை அவதானிக்க முடிந்தது. எனினும் பல கிராமங்களில் இந்த ஆற்றுகை விவாதத்திற்குரிய தொடக்கப்புள்ளியாக அமைந்தி ருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

இதே போன்று கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களை யும், அழகியல் கலாமன்றம் விஜயசேகரனின் நெறியாள் கையில் 'புதியதோர் உலகம் செய்வோம்' எனும் ஆற்றுகையை மகளிர் தினத்தில் ஆற்றுப்படுத்தி யுள்ளனர். அழகியல் வெளிப் பாட்டுடன் உருவாக்கப்படும் ஆற்றுகைகள் சிந்தனையைத் தூண்டும் விவாதங்களில் தொடக் கப்புள்ளிகளாக அமைவது என்பது பொது மரபாகும்.

பெண் விடுதலை என்பது இலத்தீன் அமெரிக்க வெண் கவிஞர் **Mlejondra** குறிப்பிட்ட தைப்போல் **" Help me not to ask for help"** (உதவி கோராமல் சுய மாய் இருப்பதற்கு உதவுங்கள்) என்பதாகவே அமையமுடியும்.

**அ.அன்ரன் அன்பழகன்**

# கைவிட்டுப்போகுமா குடிசைக்கைத்தொழில்கள்

புதியன புகுதலும் பழையன கழிதலும் நன்மையே இருந்தாலும் பாரம்பரியத்தை கழித்து விடுவது என்பது தவறு. நவீனத்தால் எந்தளவுக்கு நன்மை இருக்கின்றதோ அதே அளவு தீமைகளும் இருக்கின்றன.

எமது பிரதேசத்தை பொறுத்த வரை மட்டுமன்றி உலகின் ஒவ்வொரு மாந்தர்க்கும் சுயதொழில் என்பது இன்றியமையாத ஒன்று. நாளாந்த வீட்டுச் செலவுகளை ஈடு செய்வதற்கு அவ்வாறான சுய தொழில் பெரிதும் பங்காற்றி வந்துள்ளது. முன்பெல்லாம் ஏராளமான வீடுகளில் வீட்டுத் தோட்டம், கயிறு பின்னுதல், பாய் பின்னுதல், தும்புத்தடி, விளக்குமாறு செய்தல் மட்பாண்டங்கள் செய்தல் எனப் பல்வேறு குடிசைக் கைத்தொழில்களில் மக்கள் ஈடுபட்டு வந்தமையைக் காணக் கூடியதாக இருந்தது. ஆனால் இப்போது விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே அவ்வாறான குடிசைக் கைத்தொழிலை செய்து வருகின்றனர். அவர்களும் இனி வரும் காலங்களில் தொடர்ந்து செய்வதாக இல்லை என்பது நாம் அவர்களோடு கதைத்ததிலிருந்து புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. இப்போது எமது பிரதேசங்கள் திறந்த பொருளாதாரத்தில் சிக்குப்பட்டுப் போனதுதான். இதனால் வெளியிடங்களில் இருந்து நவீனமயமான நிறையப் பொருட்கள் வந்து குவிகின்றன. அவை நவீன இயந்திர சாதனங்களைக் கொண்டும், புதிய தொழில் நுட்பங்களைக் கையாண்டும் கவர்ச்சியான முறையில் தயாரிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுகின்றன. இதனால் என்னவோ கொள்வனவாளர்களின் கொள்வனவு ஆர்வம் வெளியிடங்களில் இருந்து வருகின்ற அவ் உற்பத்திப் பொருட்களின் மீதே அதிகமாகக் காணப்படுகின்றது.

ஆனால், நாம் இந்த இடத்தில் ஒன்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். என்னவெனில் எமது பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருட்கள் சூழலுக்கும், நமது உடலுக்கும் எவ்விதத்திலும் தீங்கை விளைவிப்பதில்லை. உதாரணமாக புல்லுப்பாய், தும்புத்தடி, மட்பாண்டங்கள் என்பன பாவனைக் காலத்தின் பின் அழிந்து விடுகின்றன. இதனால் சூழலுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படுவதில்லை. ஆனால் புதிய புதிய தொழில்நுட்பங்களோடு கவர்ச்சியாக உற்பத்தி செய்யப்படுகின்ற பிளாஸ்ரிக் மற்றும் உலோகப் பொருட்களால் பாதிப்புக்கள் பல உண்டு. அதிலும் பிளாஸ்ரிக் உற்பத்திப் பொருட்களால் எமது சூழல் நிறையவே பாதிப்படைகின்றன. இந்தப் பிளாஸ்ரிக் உற்பத்திப்பொருட்கள் காலம் காலமாக அழியாமல் சூழலில் இருந்து பல விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இருந்தும் மக்கள் அவற்றை விரும்பிக் கொள்வனவு செய்கின்றனர். இதற்கான காரணத்தை அவர்களிடமே வினாவும் நோக்குடன்

கிளி நகர் சந்தைப் பகுதியில் பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டிருந்த சந்திரசேகர் என்பவரைக் கேட்டபோது இவ்வாறு கூறுகின்றார்.

"அந்தப் பொருட்கள் (பிளாஸ்ரிக், அலுமினியம்) நீண்ட காலம் பாவிக்கின்றன. அது மட்டுமல்ல பல வடிவங்களில் செய்து வைச்சிருக்கினம். விலையும் இவற்றை விட கொஞ்சம் கூடுதலாக இருந்தாலும் கனகாலம் பாவிக்கலாம்'' எனக் கூறிய அவரை குறுக்கிட்ட நாம் இந்தப் பிளாஸ்ரிக் பொருட்களால் சூழலுக்கும் உடலுக்கும் நிறையப் பாதிப்பு ஏற்படுகின்றனவே எனக் கேட்டபோது.



"இருக்குத்தான் இருந்தாலும் கனகாலம் பாவிக்கலாம்'' எனத் திரும்பவும் அதே பதிலே வந்தது.

இவர் கூறியது போல நாம் சந்தித்த பல கொள்வனவாளர்கள் கூறினார்கள் எமது பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாய் 50 ரூபா தொடக்கம் 70 ரூபா வரை விற்பனையாகின்றன. ஆனால் அதே அளவான பிளாஸ்ரிக் பாய் 100 ரூபா தொடக்கம் 130 ரூபா வரை விற்பனையாகின்றன. இவ்வாறே பிளாஸ்ரிக் அலுமினியப் பாத்திரங்கள் என்பனவும் காணப்படுகின்றன.

இதனால் குடிசைக் கைத்தொழிலை மேற்கொண்டு வந்த பலர் இன்று அதிலிருந்து விடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். மேலும் பலர் ஏற்கனவே கைவிட்டு விட்டு வேறு தொழில்களை நாடியுள்ளனர். எனவே தான் நாம் இவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை அறியும் நோக்குடன் தற்போது மண்பாண்ட உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற வேலுச்சாமி என்பவரை சந்தித்தோம்.

"நான் முப்பத்தைந்து வருசமாக இந்தத் தொழிலைச் செய்து வாரன். ஆனால் கடந்த சில வருடங்களாக எங்கட தொழில் நல்லாக் குறைஞ்சு போட்டுது. பிளாஸ்ரிக், அலுமினியத்தால குடம்,வாளி, பானைகள் என உற்பத்திப் பொருட்களை பெரிசா ஒருவரும் வேண்டிறாத இல்லை கடைக்காரரும் தங்களால் விற்பனை செய்யமுடியாமல் இருக்கின்றது எனச் சொல்லுகினம். விசேட நாட்களிலும் விற்பனை முன்னரைப்போல இல்லை. இப்படியே போனால் இதை விட்டிட்டு வேறு தொழில்தான் செய்யவேண்டும். முன்பெல்லாம் இந்தத் தொழிலை நம்பி வாழ்க்கை நடத்தக்கூடியதாக இருந்தது. ஆனால் இப்ப அப்படியில்லை'' என்கிறார்

எனவேதான் இவர்களது தொழில்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் வரி, மானியம் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் சூழலுக்கும், உட லுக்கும் எவ்வித பாதிப்பினையும் கொடுக்காத குடிசைக் கைத்தொழில் அழிந்துவிடும் அபாயம் ஏற்பட்டு விடும்.

"அடுத்து மட்பாண்ட உற்பத்தியில் ஈடுபட்டு வருமானம் போதாமையால் கட்டடப்பொருள் உற்பத்தியை மேற்கொள்கின்ற சந்திரகுமார் என்பவர் இவ்வாறு கூறுகின்றார். மட்பாண்ட உற்பத்தியைத்தான் செய்து வந்தனான். ஆனால் அதன் மூலம் கிடைச்ச வருமானம் குடும்பச் செலவினைக் கொண்டு நடத்துவதற்கு முற்று முழுதாகப் போதாது. அதனால்தான் விட்டிட்டன். இப்போது இந்தத்தொழிலும் பரவாயில்லை.

**சுழியன்**

ஆனாலும் தொழிலை மேம்படுத்துவதற்காகக் கடன் கேட்டுப் பல நிதி நிறுவ னங்களிடம் ஏறி இறங்கினேன் ஒரு வரும் தருவதாக இல்லை. ஏனோ தெரியவில்லை, எனக்கும் (கடன் களைத் தந்து உதவி செய்தால்) சந்தையோடு போட்டி போட்டு விற்பனை செய்யக்கூடியதாக இருக்கும்'' என்கிறார்.

இதைவிட பாய் உற்பத்தி செய்கின்ற செபமாலை மரியான் என்பவரை சந்தித்தபோது,

"முன்பெல்லாம் நிறையப் பாய் அடிச்சு விற்பனை செய்கிறனாங்கள் ஆனால் இப்போது அப்படியில்லை. பிளாஸ்ரிக் பாயின் வருகை எங்கட தொழிலை நல்லாப் பாதிச்சிட்டு.




இப்படிப் போனால் எப்படி நாங்கள் இதனை தொடர்ந்து செய்யமுடியும். கோயில் திருவிழா போன்ற சில நாட்களில் மட்டும்தான் கொஞ்சம் விற்பனை கூடுதலாக இருக்கும். மற்ற நாட்களில் விற்பனையே இருக்காது. முன்னர் இதை நம்பித்தான் வாழ்க்கை நடத்தினாங்கள். இப்ப அப்படி முடியாது. அதனால் வேறு தொழிலைத்தான் நாடவேண்டும்.

இவ்வாறு எமது பிரதேசத் தொழிலாளர்களின் நிலைமைகள் காணப்படுகின்றன. எவ்வித பாதிப்புக்களையும் ஏற்படுத்தாத எமது பிரதேச உற்பத்திப் பொருட்களின் கேள்வி நாளுக்கு நாள் குறைவடைந்து செல்கின்றது. உலகளாவிய ரீதியில் பிளாஸ்ரிக் பொருட்களை தடைசெய்வதில் சூழல் பாதுகாப்பு ஆர்வலர்கள் அதிக அக்கறை செலுத்தி வருகின்றனர். ஆனால் எமது பிரதேச மக்கள் பிளாஸ்ரிக் பொருட்களை கொள்வனவு செய்வதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.



உலகளாவிய ரீதியில் இன்று பிளாஸ்ரிக் உற்பத்திப்பொருட்கள் சூழலுக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறிவருகின்றது. ஆனால் எமது பிரதேசம் அவற்றுக்குப் பெரும் சந்தையாக மாறிவருகின்றது. எமது உழைப்பின் பெரும் பகுதி வெளி நாட்டு பல்தேசிய கம்பனிகளுக்கு இப் பொருட்களின் ஊடாகச் சென்றடைகின்றது. இந்த பிளாஸ்ரிக் உற்பத்திப் பொருட்களின் மூலம் பொருட்கள் வேறு உற்பத்திப் பொருட்களின் கழிவுப்பொருட்களாகவே காணப்படுகின்ற மாறாக எமது குடிசைக்கைத் தொழில் உற்பத்திப் பொருட்கள் பல வகையிலும் நன்மையே தருகின்றன. அலுமினியப் பாத்திரங்களில் உணவுகள் தயாரிக்கின்றபோது எரிபொருள் செலவு ஒப்பீட்டு ரீதியில் குறைவுதான். இருப்பினும் அலுமினிய உலோகத்தால் உடலுக்குத் தீங்கு ஏற்படுவது என்பது மறுக்க முடியாத ஒன்று.

ஆனால் மட்பாண்ட பாத்திரங்களில் உணவு தயாரிக்கின்றபோது எரிபொருள் செலவு சற்று அதிகம் என்றாலும் சுவைமிக்கதாகக் காணப்படும் அதேநேரம் உடல் நலத்திற்கு எவ் விதத்திலும் தீங்கு இல்லை. எனவே தான் இப்பொருட்கள் தொடர் ாக ஓர் விழிப்புணர்வு எமது பிரதேச வாழ் மக்களுக்கு ஏற்படுத்தவேண்டும். அப்போது தான் எமது குடிசைக் கைத்தொழில் பாதுகாக்கப்படும். எனவே பொறுப்பு வாய்ந்த அமைப்புக்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் எமது சூழலையும் பாதுகாத்ததாக அமையும் அதேநேரம் குடிசைக் கைத் தொழிலையும் பாதுகாத்ததாகவும் அமையும். ●



## விசுக்விசுக் விசாலாட்சி

சனாதிபதி ஆணைக்குழுவாம்... என்னடா உங்கால சாமியச்சாட்டிப் பூதந்திண்டகதையா மட்டக்களப்புக்க சுட்டுப்பாக்கிறாங்கள். நீங்கள் அறியேல்லயே. சும்மா சும்மா எண்டு அவையும் சொல்ல, பாப்பம் பாப்பம் எண்டு நீங்களும் சொல்ல ஒண்டு தெரியுமோடா அள்ளுவாரோட இருக்கலாம் கிள்ளுவாரோடஇருக்கேலாது. பெரிய பெரிய சண்டையள்ள இழநதாலும் ஒரு வெற்றி கிட்டும். இது என்னடா எண்டா சண்டைய நிப்பாட்டு சமாதானம் எண்டு நாலாபக்கத்தாலயும் வந்திச்சினம். விடியக்கலியாணம் பிடி வெத்திலபாக்கெண்டு ஏதோ அமளிப் பட்டதைப் பாத்து உன்னாணையடா அருண்டுதான் போனன். பின்ன ஒண்டோ ரெண்டோ எத்தின பேச்சு வார்த்தையக் கண்டனான் இப்ப ரணிலன் பேச வாறானாமெண்டு ஒரு சலசலப்பு அடிபட அப்பவே நான் சொல்லயில்லையோ... எடேய் எல்லாம் எங்கட பெடியள் பட்டம் விட்ட மாதிரித்தான்.

கொக்குப்பட்டம், படலைப்பட்டம் எண்டு எந்தப் பட்டம் விண் கூவினாலும் வாலை ஆட்டியாட்டி வானத்தில பறந்தாலும்... எது கயிறு ஆற்ற கையிலயோ அவர்தான் எசமான். பின்ன சிறிலங்கன் அரச பீடத்தில அம்மா இருந்தா என்ன ஐயா இருந்தா என்ன? இதெல்லாம் ங... இந்தப் பதவியெல்லாம் வெறும் பட்டங்கள் தான். பட்டத்தின்ர நூல் பௌத்த பேரினவாதத்தின்ர கையில தான் கிடக்கு. அந்த நாளையில புகழேந்தியார் நளவெண்பாவில பாடினாரடா ஒரு பாட்டு என்னவோ... ஆ... வந்திட்டுது. இழவுமறதி "மாதர் அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும் ஒரு கூட்டில் வாழ..." நளன் ஆட்சி செய்தானாம். தூசு இலங்கையில வலது சாரியும் இடது சாரியும் சேர்ந்து அரசாங்கம் வச்சிருக்கிறதப் பாடப் புகழேந்தியாருக்கு குடுத்து வைக்கேல்ல.

அது சரி... சண்சோனி ஆணைக் குழுவிலயிருந்து இண்டைக்கு வரைக்கும் தமிழற்ற பிரச்சினையள விசாரிக்க எத்தின ஆணைக்குழு நியமிச்சவை இவையடமுடிவிலதான் தீர்ப்பிருக்கு எது தமிழற்ற பிரச்சினைக்கோ? எட பேய்ப்பொடியா. ராசீவ அடிச்சவனுக்குப் பதவிஉயர்வு எழுவத்தேழில தமிழற்றகடை கண்ணியள அடிச்சு கொள்ளையடிச்சு எரிக்கத்துணை நிண்டவைக்கு பதவி உயர்வு இடமாற்றம். இப்ப மட்டக்களப்புத் துவக்குச் சூடுகள ஆர் நடத்தினதெண்டத விசாரிக்க கண்டுபிடிச்சாத்தானே அவயளுக்குப் பதவியுயர்வு குடுத்துக் கௌரவிக்க உதுகள நல்லாப் படிச்ச நாங்கள் சொல்லுறதக் கேட்டு நடவுங்கோ. அவனவன் யாவாரத்துக்கு வந்து போறான் அவங்களும் சந்தையி ருக்குமட்டும் வருவாங்கள். அங்கால எங்கட சாமானுகளுக்கு நாங்கதான் சந்தை தேடோணும். பின்ன அங்க சுத்தி இஞ்ச சுத்தி அடிமடியில கை வைக்குமட்டும் அமைதியாவே இருக்கப் போறியள். முக்காலுங்காகம் முழு கிக்குளிச்சாலும் வெள்ளைக் கொக்காவும் மாறாது புறாவாயும் மாறாது.

# இடையூறு விளைவிக்கும் ஜே.வி.பி

சுனாமிப்பேரலை அனர்த்தத்தைக் கூடிய பட்சம் அரசியலாக்கி அதிலிருந்து இலாபம் பெற முயற்சிப்பவர்களாக ஜே.வி.பி கட்சியினர் உள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களை மனதிற்கொள்ளாது வெந்த வீட்டில் பிடுங்கியது அறுதி என்பது போலவே ஜே.வி.பி நடந்து கொள்கின்றது.

சுனாமிப் பேரலை அனர்த்தம் ஏற்பட்ட சில நிமிடங்களில் அதில் சிக்கிக்கொண்ட மக்களை மீட்டெடுத்து அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் அனைவருமே தீவிர பங்காற்றியிருக்கின்றனர். அதனைத் தமது மனிதாபிமானக் கடமையாகக் கட்டாயமாகச் செய்து முடிக்க வேண்டிய பணியாகச் செய்திருக்கின்றனர். உண்மையில் இந்தவேளை சோகம் மிகுந்த அதேவேளை மனிதம் நிறைந்த வேளையாக இருந்திருக்கிறது. இதிலே எவரது பணியையும் கூட குறைத்து மதிப்பிட்டுவிடமுடியாது.

ஆனால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப்பணிகளிலும் மக்கள் ஒன்றிணைந்து தீவிரமாகச் செயற்பட்ட அதேவேளை அது ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட பணியாக அமையவேண்டியது அவசியமாகியது. ஏதோ ஒருவகையில் இப்பணியைப் பாதிக்கப்பட்ட சகலருக்கும் பாரபட்சமின்றி செய்து முடிக்க ஒரு அமைப்பு ரீதியான செயற்பாடு தேவைப்பட்டது.

ஆனால் ஜே.வி.பியோ இந்த ஒருங்கிணைப்புக்குள் கட்டுப்படாது தான்தோன்றித்தனமாக நடக்க முற்பட்டது.

அரசாங்கத்தின் முக்கிய பங்காளியான ஜே.வி.பி அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்குள் உள்ளடங்காது தனித்துச் செயற்பட்டு கட்சிக்கு அரசியல் இலாபமீட்ட முயன்றது.

ஜே.வி.பியானது தனது முயற்சியால் நிவாரணப் பொருட்களைப் பெற்று அதனைப் பாதிக்கப்பட்டுத் தவித்துக்கொண்டிருந்த மக்களுக்கு வழங்கியிருக்குமானால் அதனை எவரும் குறைகூற முடியாது. அல்லது அரசாங்கத்திற்குக் கிடைத்த நிவாரணப்பொருட்களின் விநியோகத்தைப் பாரபட்சமின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்குக்கிடைக்க வழிசெய்திருக்குமானால் அதுவும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒன்றே. அல்லது சீரான விநியோகத்தை அது ஒழுங்குசெய்திருக்குமானால் அதுவும் வரவேற்கப்படக்கூடியதே.

இன்றும் தென்பகுதியிலுள்ள மக்களுக்குக்கூட சீரான நிவாரண விநியோகம் கிட்டிவிடாத நிலையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி அதனைச் சீர் செய்யவோ அதற்குப் பொறுப்பேற்கவோ முன்வராது குறுக்குவழியில் இலாபம் ஈட்டவே முயல்கின்றது.

ஆரம்ப கட்டத்தில் ஏனைய அமைப்புக்கள் பொதுமக்களிடமிருந்து சேகரித்த பொருட்களைப் பறித்து தனது பெயரில் விநியோகம் செய்து இலாபமீட்ட முயன்றது. இப்போது நிவாரண முயற்சிகளை ஒருங்கிணைக்க அமைக்கப்பட்ட நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு அப்பால் தனது முயற்சியில் எதனையோ சாதித்து விடப்போவது போல தனது செயற்பாடுகளை வெளிக்காட்டி வருகின்றது.

கிழக்கில்,அம்பாறையிலும், திருகோணமலையிலும், தற்காலிக வீடுகள் சிலவற்றை அமைக்க ஜே.வி.பியால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மக்கள் தீவிர எதிர்ப்புக் காட்டியமைக்குக் காரணம் மக்கள் இதனை உணர்ந்து கொண்டமையினாலேயாகும்.



ஏனெனில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனரமைப்புப்பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பணிகளை பகிர்ந்து நிறைவேற்றுவதன் மூலமே பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் சமத்துவமான முறையில் பயனடைய முடியும் என்பது வெளிப்படை.

ஆனால், இந்த அமைப்புக்களுடன் இணைந்து செயற்படாது, தனித்து வேறு தேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் குடியிருப்புக்களை அமைத்து வழங்கப்போவதாகக் கூறி ஜே.வி.பியினர் எடுத்த முயற்சி நிச்சயமாக சந்தேகத்திற்கு இடமான ஒன்றாகவே அமையும்.

மனிதாபிமானமென்ற போர்வையில் கட்சிநலனையும் தனது இனவாதச்சிந்தனைகளை மக்கள் மத்தியில் பரவவிடும் நோக்கம் கொண்ட செயலாகவுமே இதனைக் கருதமுடியும். அதிலும் நிச்சயமாக தமிழ் மக்கள் ஜே.வி.பியின் இச் செயற்பாடுகளில் சந்தேகம் கொள்ள வலுவான காரணங்கள் உள்ளன.

ஏனெனில் ஜே.வி.பி தமிழ் மக்களுக்கு எதுவித உரிமையும் கிடைத்து விடக்கூடாது என்பதில் உறுதியாகவுள்ள கட்சி வெளிப்படையாகவே அது இதனை வலியுறுத்தி வருகின்றது. சமாதான முயற்சிகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை அது தீவிரமாக எதிர்க்கிறது. தமிழ் மக்களின் தாயகம், தேசியம், தனித்துவம் என்பவற்றை அது முற்றுமுழுதாகவே நிராகரிக்கின்றது.

அதேவேளை சுனாமியால் கடுமையாகப்பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வெளிநாட்டு நிவாரண உதவிகள் கிட்டுவதற்கு வெளிப்படையாகவே ஜே.வி.பி முட்டுக்கட்டை போடுகின்றது.

அதாவது தமிழர் தாயகப்பகுதியில் செயற்தன்மையுடைய அமைப்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே இருக்கின்றது. இதன் காரணமாகவே சுனாமி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணைந்த அமைப்பொன்றை சர்வதேசம் விரும்புகிறது. ஆனால் இதனை அமைப்பதற்கு முட்டுக்கட்டையாக இருந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர புனரமைப்பு நடவடிக்கைகளை ஜே.வி.பி தடுத்து வருகின்றது.

இந்நிலையில் "மூவின மக்களுக்கும்" என்று கூறிக்கொண்டு ஜே.வி.பி சில குடியிருப்புக்களை அமைத்தால் அது குறித்து தமிழ் மக்கள் பலத்த சந்தேகம் கொள்வதில் தவறேதுமில்லை.

உண்மையிலேயே ஜே.வி.பி சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவேண்டும் என விரும்பினால் அதுவும் சகல மக்களுக்கும் சமனான முறையில் சென்றடைய வேண்டுமென விரும்பினால் சர்வதேசத்தின் விருப்பத்தை மதித்து அது நடக்கவேண்டும். ஆளும் கட்சியாக உள்ள அது நிவாரண நடவடிக்கைகள் சீரான முறையில் நடைபெறுவதற்கு வழிவகுக்க வேண்டும்.

ஆனால் ஜே.வி.பி அதனைச் செய்ய ஒருபோதும் முன்வராது. ஏனெனில் அதன் இனவாதச் சிந்தனை காரணமாக தமிழ் மக்கள் நன்மையடைவதை விரும்பாது. அதேவேளை அது அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதே கூட்டுக்கட்சியை விழுங்கிவிட்டு தான் முன்னணிக்கு வருவதற்காகவே. எனவே அது நிவாரண நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதை அனுமதிக்காது.

**வேலவன்**

## நேர்நோக்கு

# ஒளிமயமான வாழ்வுக்கு ஏங்கும் மக்கள்

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக பெரும்போருக்கும் பொருளாதாரப்போருக்கும் முகம் கொடுத்து வாழ்ந்த தமிழீழ மக்கள் கடந்த மூன்றாண்டு சமாதான காலத்தில் தம்மிடம் இருந்தவற்றைக்கொண்டு தமது சுய தொழில் முயற்சிகளை முன்னெடுத்துச்சென்ற காலகட்டத்தில்தான் இந்த ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்தேறியது. இவ்வனர்த்தம் நிகழ்ந்தேறி மூன்று மாதங்களை எட்டிக்கொண்டிருக்கிறது. ஆனால் எந்த அபிவிருத்திப்பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. நலன்புரி நிலையங்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிகக் குடியிருப்புக்களில் முழுமையாக இதுவரை குடியமர்த்தப்படவில்லை. தமிழர் தாயகப் பகுதியின் பெரும் பகுதி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் அழிவடைந்துள்ளது.

அதாவது யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறை மணற்காடு, நாகர்கோயில், தாளையடி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய கரையோரப்பகுதிகள் முற்றாக அழிவடைந்துள்ளதுடன் 1256 பேர் உயிரிழந்துள்ளதுடன், 1647 பேர் காயமடைந்தும், 41013 பேர் இடம்பெயர்ந்தும் உள்ளனர். அத்தோடு 11 பாடசாலைகளும், 7198 வீடுகளும், மூன்று மருத்துவ மனைகளும் சேதமடைந்துள்ளன. இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் 2771பேர் உயிரிழந்துள்ளதுடன், 2590 பேர் காயமடைந்துள்ளதும், 21178 பேர் இடம்பெயர்ந்தும் உள்ளனர். 12 பாடசாலைகளும், 4000 வீடுகளும், 2மருத்துவமனைகளும் அழிவடைந்துள்ளன. திருகோணமலை, குச்சவெளி, நிலாவெளி, கிண்ணியா ஆகிய பகுதிகளில் 1076 பேர் உயிரிழந்துள்ளதுடன் 69212 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அத்துடன் 23 பாடசாலைகளும், 16378 வீடுகளும், 9 மருத்துவமனைகளும் அழிவடைந்துள்ளன.



மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, நாவலடி, காத்தான்குடி, பெரியகல்லாறு ஆகிய பகுதிகளில் 2840 பேர் உயிரிழந்துள்ளதுடன், 1575 பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் 61912 பேர் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். 36 பாடசாலைகளும்,21126 வீடுகளும், 8 மருத்துவமனைகளும் அழிவடைந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவளை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, கோமாரி, பொத்துவில் ஆகிய பகுதிகளில் 9051 பேர் உயிரிழந்துள்ளதுடன் 6771 பேர் காயமடைந்தும், 137960 பேர் இடம்பெயர்ந்தும் உள்ளனர். இவை தவிர 29077 வீடுகளும், 40பாடசாலைகளும், 29 மருத்துவமனைகளும் அழிவடைந்துள்ளன. இவை எந்தப்பகுதியிலாவது சிறிலங்கா அரசு முன்வந்து தமிழ் மக்களுக்குப் பாரிய உதவிகளைச் செய்ததாக இல்லை. தமிழர் தாயகப்பகுதி தவிர்ந்த ஏனைய சிங்களப் பகுதிகளில் ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்தேறிய அடுத்தகணமே நிவாரண உதவிப்பொருட்கள், உடனடியாக அனுப்பப்பட்டு மீட்புப் பணிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். ஆனால் தமிழர் தாயகப்பகுதிகளில் இவை இவ்வளவு விரைவாக அனுப்பி வைக்கப்படவில்லை. தாயகத்தில் இறந்த மக்கள் தொகையையும், அழிவுற்ற பொருட்களையும் காட்டித்தான் அரசு சர்வதேச உதவிகளை கோரிவருகின்றது.

அவ்வாறு கோரி வரும் அரசு அந்த உதவியை எமது பகுதி மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு எள்ளளவேனும் முயற்சிக்காது என்பதில் எந்தச்சந்தேகமும் இல்லை என்றே கூறவேண்டும். ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களைத் தற்காலிகக் குடியிருப்புக்களை அமைத்து அத்தற்காலிகக் குடியிருப்புக்களில் மக்களை மீளக் குடியமர்த்தி அவர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏதோ ஒரு வகையில் வழங்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் 232 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டு 53223 குடும்பங்களைச் சேர்ந்த 159544 பேர் குடியமர்த்தப்பட்டுள்ளனர். வடக்கு கிழக்கில் 16934 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த வகையில் இம்மக்களின் மீள்குடியமர்வு நிவாரணம் பற்றிய விடயங்களில் அரசாங்கம் எவ்வளவு அக்கறையாகச் செயற்படுகின்றது என்பது கேள்விக்குரியது.

பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட வரும் சர்வதேச நாட்டுப் பிரதிநிதிகளையும், உதவிகளையும் தமிழர் தாயகப் பகுதிகளுக்கு வரவிடாது தடை செய்து வருகின்றன. அத்துடன் தற்காலிகக் குடியிருப்புக்களில் குடியமர்த்தப்பட்ட மக்கள் இனி வருகின்ற காலங்கள் கடும் வெயில் காலங்களாக இருப்பதனால் இவ்வாறு அமைக்கப்பட்ட தற்காலிகக் கூடாரங்களில் தொடர்ந்து வாழ்க்கை நடாத்த முடியுமா? என்பதும் அது அவர்களுக்கு ஏற்ற சூழலாக அமையுமா? என்பதும் கேள்விக்குறியான விடயமே ஆகும். எனவே இவர்களுக்கான ஒரு ஒளிமயமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய பொறுப்பு எல்லோரிடத்திலும் உள்ளது.

**சு. பாஸ்கரன்**

# தகவல் தொழில்நுட்பம் கண்ணயர்ந்தால் காவு கொண்டு விடும்



கணினிப் பயிற்சி கணினி வகுப்புக்கள், நிறுவனப்பணிகள் யாவும் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன என்ற விளம்பரங்களும் தொழில் வாய்ப்பு விண்ணப்பங்களில் கணினிப் பயிற்சிகளை நிறைவு செய்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என குறிப்புக்களுடனான அறிவிப்புக்களும் இன்று பரவலாகக் காணப்படுகின்றன. எங்கும் எதிலும் கணினிபற்றிய, இணையத்தைப்பற்றிய பேச்சாகவே இருக்கின்றது. முன்பு இலங்கையின் ஏனைய பகுதிகளில் காணப்பட்ட இந்நிலைமை சமாதானச் சூழல் ஏற்பட்டு பாதைகள் திறக்கப்பட்டு பொருணமியத்தடைகளும் பெரு மளவு தளர்த்தப்பட்ட பின், தமிழர் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் பரபரப்பாகப் பேசப்படும் ஒன்றாக முக்கியத்துவமுடையதொன்றாக தகவல் தொழில் நுட்பத்துறை விளங்குகிறது.

இந்நிலையில்தான் இன்றைய உலகை தகவல் யுகம் என்கின்றனர். தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டபெரும்புரட்சி, இக்காலத்தில் முக்கியத்துவமுடைய ஒரு துறையாகவே தகவல் தொழில் நுட்பத்தை மாற்றிவிட்டது.

பல்வேறு தகவல் தொடர்பு சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால் தகவல் தொடர்புகள் பெரும் விருத்தியடைந்துள்ளன. இவ் வகையில் மின்னஞ்சல், செய்மதித் தொலைக்காட்சி, செய்மதித் தொலைபேசி, கணினி என்ற வரிசையில் தகவல் தொடர்புத் தொழில் நுட்ப விருத்தியின் உச்சமாக இணையம் விளங்குகிறது. செய்மதி, தொலைக்காட்சி, இணையம் போன்றன ஊடாக, ஒருகணப்பொழுதில் உலகின் மூலை முடுக்குகளில் நடக்கும் சம்பவங்களையும் மற்றும் பல்வேறு துறைசார் தகவல்களை, தரவுகளை எல்லாம் அறிந்துகொள்ளவும் காட்சி வாயிலாகக் காணும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளமை மானுடத்திற்கு வரப்பிரசாதமே.

மருத்துவம், கல்வி, பொருண்மியம், இராணுவம் போன்ற பல்வேறு துறைசார் வளர்ச்சிக்கும் கற்றலுக்கும் இத்தகவல்தொழில் நுட்ப சாதனங்கள் பெரிதும் துணை புரிகின்றன எனில் மிகையில்லை. இதனால் இப்பல்துறைகளும் தன்னளவில் வளர்ச்சிகண்டுள்ளன. வளர்ச்சி கண்டு வருகின்றன.

அனைத்துத் துறைகளுமே கணினி மயப்படுத்தப்பட்டுள்ளமையால் எத்துறை சார்ந்தோராயினும் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்றிருப்பது அத்தியாவசியமான தொன்றாக மாறிவிட்டது. இவ்வாறு தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்றிருக்க வேண்டியதேவை அதிகரித்ததால் இன்று எல்லோரும் தகவல் தொழில்நுட்ப அறிவை பெற்றுக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். தகவல் தொழில்நுட்பக் கல்வியை கற்றிருப்பது கௌரவமாக, ஒரு நாகரிகமாக, பெருமையானதொன்றாகவும் கருதப்படும் நிலையும் உள்ளது. இதனால் தகவல் தொழில் நுட்பக் கல்வியை புகட்டுவதே ஒரு துறையாகவே காணப்படுகின்றன என்று கூடக் கூறலாம்.

இத்தொழில்நுட்பக் கல்வியானது ஒருவருக்கு பல்துறைசார் அறிவை விருத்தி செய்வதோடு, தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ள அவருக்கு மேலதிக தகைமையாகவும் அமைகிறது. இதனால் இன்றைய உலகில் தகவல் தொழில் நுட்பக் கல்வி கவர்ச்சிகரமானதொன்றாகத் தென் படுவதையும் காணலாம்.

தகவல் தொழில்நுட்ப அறிவும் சாதனங்களும் மனித சமூகத்தின் அறிவு விருத்திக்கும் நாட்டின் பல்வேறு துறைகளது அபிவிருத்தியடைதலுக்கும் மட்டும் பயன்படும் எனில் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் உலகிற்குக் கிடைத்த பெரும் பேறே.

தகவல் தொழில் நுட்பத்தை ஆள்வோர் அவ்வாறு மட்டும் விடுவார்களா? அவர்களின் நோக்கம் அதுவல்லவே. சுயசிந்தனைவழியில் ஒவ்வொரு மனிதனையும் நடந்துகொள்ள அனுமதித்தால் இவ்வுலகை எவ்வாறு அவர்கள் கட்டியாள்வதாம்.

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தான் வழிப்படுத்துவதற்குப் பதிலாக எல்லோரையும் தான் வழிநடத்துவதே தகவல் தொழில்நுட்பத்தை ஆள்வோரின் நோக்கமும் இலட்சியமும் ஆகும். மூலைமுடுக்கெங்கும் வாழும் ஒவ்வொரு மனிதனது மூளையையும் சலவை செய்து, தான் எண்ணும் மனிதனாக (சிந்தனையால்) அவனை மாற்றி, அவனை ஆள்வதின் ஊடாக, உலகம் முழுவதையுமே ஆள்வதே தகவல் தொழில் நுட்பத்தை ஆள்வோரின் நோக்கம்.

முற்காலத்தில் படைப் பலம், பொருளாதாரப்பலம் ஆகியவற்றை மிகுதியாகக் கொண்டோனே உலகை ஆள்வோனாக விளங்கினான். ஆனால் இன்று தகவல் தொழில்நுட்பத்தை எவன் ஆள்கின்றானோ அவனே உலகை ஆள்பவன், ஆள்கின்றான். இன்றைய தகவல் தொழில் நுட்பம் மேற்கு உலகின் ஏகபோகமாகத் திகழ்வதால், அவர்களே உலகை ஆள்பவராக உள்ளனர். உலகின் ஒவ்வொரு மனிதனும் தேசிய இனமும் தேசமும் தத்தமது தனித்துவங்களை, உரிமைகளை, சுதந்திரத்தை மறக்கச் செய்து, அவர்களது கவனத்தை, சிந்தனையை சிதறடிப்பதற்கு தகவல் தொடர்பு சாதனங்கள் ஊடாக மிக நுட்பமான செயற்பாடுகளை தகவல் நுட்பத்தை ஆள்வோர் செயற்படுத்துகின்றனர்.



இதற்காக அவர்கள் தகவல் தொழில்நுட்பத்தின் அவசியத்தை வலியுறுத்திச் செய்யும் கவர்ச்சிகரமான பரப்புரை மூலமாக உலகை, தகவல் தொடர்புத் தொழில் நுட்பத்தின்பால் ஈர்த்துவிடுகின்றனர். ஒருவன் தகவல் தொழில் நுட்ப சாதனங்களை பயன்படுத்தத் தொடங்கியதும் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக் கிடைத்துவிடுகிறது.

மனிதரிடத்தே காணப்படும் பொதுவான பலவீனங்களை தமக்கு சாதகமாகக் கையாளத் தொடங்குகின்றனர். அதாவது மனிதனின் பாலியல் பலவீனத்தை மிகநுட்பமாகக் கையாள்வதினூடாக, அவனது சுயசிந்தனையை மழுங்கடித்துத் தான் காட்டும் பாதையில் பயணிக்கும் மனிதனாக மாற்றுவதன் மூலம் உலகில் தனது மேலாண்மையை நிலைநிறுத்திக்கொள்ள முனைகின்றனர்.

அறிவியல், கல்வி போன்ற துறைகளில் தனக்குத் தேவையான தகவல்களை,விபர களைத்தேடி, இணையத்தின் கு த தளத்தை திறக்கும் ஒருவ க உன் னிப்பாக தேவையான தகவல்களை சேகரிப்பதில் கவனம் செலுத்தும் போதும் அதிலிருந்து விடுபட வைக்கத்தக்க, கவனத்தை திசை திரும்பச் செய்யத்தக்கதாக மிகக் கவர்ச்சியான விளம்பரங்கள் அங்கு காணப்படுகின்றன.

என்னதான் மனவுறுதியோடு கவனத்தை சிதறவிடாமல் குறித்த விடயங்களை அறிவதில் முனைப்புக் காட்டினாலும் ஒருவனுடைய புலன் ஒரு கட்டத்தில் அக் குறித்த விளம்பரம் மீது ஈர்க்கப்பட்டுவிடும் சந்தர்ப்பமே அதிகம். மனிதனில் இயல்பாகவுள்ள எதனையும் அறியும் ஆவல் அதனை என்ன? என்று அறியத்தூண்டுகின்றன. அத்தளத்தை திறக்கும்போது பெரும்பாலும் பாலியல் ஆபாசங்களே வெளிப்படுகின்றன. இக்காட்சிகள் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்த, அதற்கே அடிமையாகி விடுகின்றான். பெரும்பாலும் எந்தச் சாதாரண மனிதனும் இவ்வாறு ஈர்க்கப்பட்டு விடுவான்.

ஆபாசப்படங்களின் தீங்கான விளைவுகளையும் தகவல் தொழில் நுட்பத்தை ஆள்வோரின் கபட நோக்கங்களையும் சரியாகப் புரிந்த ஒருவரால் கூட, தகவல் நுட்பத்தை ஆள்வோர் விரிக்கும் இம் மாயவலையில் சிக்காமல் இருக்கமுடியுமா? என்பது வினாவாகவே உள்ளது. எனில் சாதாரண மனிதனின் நிலை எத்தகையதாக இருக்கும் என்பதை எண்ணிப்பார்ப்பதே கடினம்.

இணையத் தளத்தின் இத்தகைய பாலியல் படங்களிற்கு அடிமையாகும் ஒருவன், அதாவது அந்தரங்க விடயங்களை, அருவருப்பூட்டும் வகையிலான காட்சிகளாகக் காணும் பே து பெரும் மனக் குழப்பங்களுக்கு உட்படுகின்றான். தீவிர மன உளைச்சலுக்கு ஆட்படுகின்றான். இதனால் அவன் தனது வளமான எதிர்கால தாம்பத்திய வாழ்வின் மீதான பற்று அழிகிறது. இல்வாழ்வில் வெறுப்பும் விரக்தியும் உடையவனாகி ஒரு மன நோயாளனாக மாறிவிடும் அபாயம் இருப்பதாக, ஆபாசங்கள் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி ஆய்ந்த அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளதை இவ்விடத்தில் மனங்கொள்ள வேண்டும்.

அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக உலகம் முழுவதும் பரவும் ஆபாசப்படங்களும் எழுத்துக்களும் தடுப்புச் சுவர்களையும் கடந்து மனிதனை பீடித்து வருகின்றன. இதன் பிடியில் சிக்குண்ட மனிதன் குடும்பத்துள்ளும் வெளியேயும் வன்முறைகளில் ஈடுபடுகின்றவனாக மாறுகின்றான். அதாவது ஆபாசங்களால் மனக்கிளர்ச்சிக்குட்படும் மனிதன் பாலியல் வன்முறைகள், விபச்சாரங்கள், கொலைகள் போன்ற முறைகேடான செயல்களில் ஈடுபடத்தூண்டப்படுகின்றான்.

மேலும் ஆபாசப்படங்களில் வருவனவற்றை செயற்படுத்த முனையும் கணவனின் போக்கிற்கு மனைவி ஒத்துழைக்க மறுக்கிறாள் அதனையே அடியோடு வெறுக்கிறாள். இதனால் கணவன்-மனைவி உறவு சிதைந்து சின்னாபின்னமாவதுடன் இதன் தொடர்ச்சியாகக் குடும்ப வன்முறைகளும் கொலைகளும் கூட நிகழ்ந்தேறுகின்றன. மணமுறிவுகளும், மணவிலக்குகளும் இதனால் ஏற்பட்டும் வருகின்றன. சில குடும்பங்களில் இத்தகைய பிணக்குகள் நீறு பூத்த நெருப்பாக இருந்து இழுபட்டுச் செல்கின்றன.

இணையத்தள வசதியுடைய பலருக்கு மிக இலகுவாக முகமறியாத இணையத்தள நண்பர்கள் கிடைத்து விடுகிறார்கள். ஆரம்பத்தில் மிக உன்னத மனிதனாக இனங்காட்டிக் கொண்டு நட்புக்கொள்ளும்

**தருமைவதனன்**

இணையத்தள நண்பர்கள் பலர் போதைப்பொருள் பேர்வழிகளாகவும் ஓரினச் சேர்க்கையாளர்களாகவும் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களாகவும் ஆபாசப்படத் தயாரிப்பாளர்களாகவுமே உள்ளனர்.

இத்தகையவர்களின் உண்மை முகத்தை அறியாது முகமூடிகளை நம்பி நட்புக்கொண்டு நேரடியாக சந்தித்துப்பழகியதால் சீரழிந்தும் கொலையுண்டும் போகின்றவர்களின் பட்டியலும் சம்பவங்களும் உலகம் முழுவதும் இருந்து வந்த வண்ணமே உள்ளன. குறிப்பாக இதில் சிறுவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

(தொடரும்...)

## இது எப்படியிருக்கிறது...!



சிறிலங்கா அரசியல்வாதி ஒருவர் வெளிநாட்டு அரசியல் வாதியின் விருந்தினராகச் சென்றிருந்தார். அந்த அரசியல்வாதியின் வீட்டின் ஆடம்பரத்தை கண்டுவியந்த அவர் உங்கள் மக்களவை உறுப்பினர் வேதனத்தில் எப்படி இப்படி வீட்டைக் கட்டினீர்கள் என்று கேட்டார். அவரை யன்னலுக்கு அழைத்துச்சென்ற வெளிநாட்டு அரசியல் வாதி
"அதோ அந்த நதி தெரிகிறதா?" "தெரியுது"
"அதில அந்த பாலம் தெரியுதா?"
"நல்லாத்தெரியுது"
"முப்பது வீதம" என்றார் வெளிநாட்டு அரசியல்வாதி


அந்த அரசியல் வாதி. பின்பொருமுறை சிறிலங்கா பிரமுகரின் விருந்தினராக வந்தார். அவரது மாளிகை தன்னுடையதை விட ஆடம்பரமாக இருப்பதை கண்டு "எங்கட நாட்டு சம்பளத்திலயே இப்பிடியொரு வீட்டக் கட்டேலாது உங்கட நாட்டு குறைந்த சம்பளத்தில என்னெண்டு இப்பிடி வீட்ட கட்ட முடிஞ்சுது. சிறிலங்கா அரசியல் வாதியும் வெளிநாட்டு அரசியல் வாதி செய்தது போலவே அவரை யன்னலொன்றுக்குக் கூட்டிச்சென்றார்.
"அதோ அந்த நதி தெரிகிறதா?" "தெரிகிறது"
"அதோ அந்தப் பாலம் தெரிகிறதா"
"இல்லையே ஒன்றையும் காணவில்லை"
"நுறு வீதம்;; என்றார் நம்மாள் பெருமையுடன். "




# உயிரியல் பயங்கரம்

இயற்கைச் சீற்றங்களான நிலநடுக்கம், சுனாமி, புயல் போன்றவற்றை தொடர்ந்து நோய்க் கிருமிகள் விரைந்து பரவுகின்றன. இவை தவிர போர்க் காலங்களில் பயன்படுத்தப்படும் உயிரியல் ஆயுதங்களினால் நோய்க்கிருமிகள் பரவுகின்றன. விரைந்து பரவும் நோய்க்கிருமிகளை முன் கூட்டியே கண்டறிவதற்கான தொழில்நுட்பம் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

இந்தவகைத் தொழில்




நுட்பத்தினால் பக்ரீரியாக்கள், வைரஸ்கள் மற்றும் நச்சுப் பொருளை முன்கூட்டியே கண்டறியலாம். நோய்க்கிருமிகள் பரவுவதை முன்கூட்டியே கண்டறிந்தால் தொற்று நோய்களை விரைவில் தடுக்கலாம் என்ற அடிப்படையில் இந்தத் தொழில்நுட்பம் செயல்படுகிறது. இயற்கைச் சீற்றங்களைத்தவிர "பயோ டெரரி சம்" எனப்படும் உயிரியல் பயங்கரங்கள் உலகுக்கு தற்போது மிகப்பெரிய சவாலாக உள்ளது. மரபான ஆயுதங்கள், வேதியியல் ஆயுதங்கள் என்று இருந்த போர் தொழில்நுட்பம் தற்போது "உயிரியல் ஆயுதங்களாக" மாறிவிட்டது. தனி மனிதனை நோய்க்கிருமிகள் தாக்குவதற்கு முன்னால் சுற்றுசசூழலில் பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே, முதல் நிலையிலேயே நோய்க்கிருமிகளை கண்டறிய புதிய வகைத் தொழில் நுட்பம் உதவுகிறது.

1995இலேயே இதுகுறித்த விரிவான ஆய்வுகள் தொடங்கி விட்டன. வெர்சன் விஞ்ஞானி இதுகுறித்த ஆய்வை முறைப்படி தொடங்கினார். 2005இரின் தொடக்கத்தில்தான் இந்த ஆய்வு முதல் கட்டமாக வெற்றிபெற்றது.

"மூலக்கூறு உயிரியல்" ஆய்வுகளைப்பயன்படுத்தி நோய்க் கிருமிகளின் டி.என்.ஏ.,வைக் கண்டறிந்து நோய்க்கிருமிகள் அடையாளம் காணப்படுகின்றன.

சமூக மருத்துவத் துறைக்கு இந்தத்தொழில்நுட்பம் மிகப் பெரிய அளவில் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆந்த்ராக்ஸ், பிளேக் மற்றும் பொடுலினம் நச்சுப்பொருள் முதலியவற்றை முன்கூட்டியே கண்டறியலாம்.

இயற்கைச் சீற்றப் பேரழிவு ஆணையம் இயற்கைச் சீற்றங்களை முன்கூட்டியே கண்டறிவது, நிவாரணப்பணிகளை விரைந்து செயல்படுத்துவது போன்றவற்றோடு விரைந்து பரவும் நோய்க்கிருமிகளை கண்டறிவது குறித்து கவனம் செலுத்தவேண்டும்.

# உருளைக்கிழங்கு கார்கள்

தாராளமயமாக்கல் பொருளாதாரக்கொள்கைகளினால் ஆசிய நாடுகளில் கார்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இன்று மிக நவீன பாணியளாக இருக்கும் கார்கள் அடுத்த ஆண்டே மிகவும்



பழைய பாணியாக மாறிவிடுகிறது. எனவே, இனி எதிர்காலங்களில் உபயோகப்படுத்தாத கார்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கார்களை சிதைப்பது, மறு சுழற்சி முறையில் பயன்படுத்துவது போன்றவை, சுற்றுச்சூழல் மாசுபாடுகளை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

எனவே, புதிய வகையான, சிதைவுறும்போது மண்ணுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத, நில மாசுபாட்டினை அதிகரிக்காத வாகனங்களை உருவாக்குவது குறித்து விஞ்ஞானிகளும் தொழில்நுட்ப நிபுணர்களும் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர்.

தற்போது லண்டனில் வடிவமைக்கப்பட்டுள்ள புதிய காரின் பல பாகங்கள் உருளைக்கிழங்கினை மூலப் பொருட்களாகப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளன.

உருளைக் கிழங்கில் உள்ள இயற்கை அமிலத்தை பயன்படுத்தி பிளாஸ்ரிக் தயாரிக்கப்படுகிறது. இந்தப் பிளாஸ்ரிக் மண்ணில் மட்கும் தன்மையைப் பெற்றுள்ளது. இந்தப் பிளாஸ்ரிக்கில் இருந்து காரின் முக்கிய பாகங்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன.

இயற்கை முறையில் உற்பத்தி ஆகும். இந்தப் பிளாஸ்ரிக் வேதியியல் முறையில் உருவாக்கப்படும் சிந்தடிக் பிளாஸ்ரிக்கைப் போல உறுதித்தன்மை உடையதாக இருக்கும். ஐரோப்பிய நாடுகளில் சோதனை அளவில் வெற்றிபெற்றுள்ள இந்த "உருளைக் கிழங்கு பிளாஸ்ரிக் கார்கள்" ஆசிய நாடுகளில் முழு அளவில் வெற்றி பெறுமா? என்பது ஆய்வுக்குரிய விசயமாக உள்ளது. ஏனெனில் கார்களை வடிமைக்கும் போது, மற்ற நாட்டில் உள்ள கார்களின் எண்ணிக்கை, ரோட்டின் தரம், மக்கள் தொகை, பயன்படுத்தப்படும் எரிபொருளின் தரம், நாட்டின் சராசரி வெப்பநிலை, அனுமதிக்கப்பட்ட அதிகபட்சவேகம், போக்குவரத்து நெருக்கடிபோன்ற பல்வேறு காரணிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

ஒருகிலோ உருளைக் கிழங்கை உருவாக்க 700 லீற்றர் நீர் தேவைப்படுகிறது. உணவுப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வந்த உருளைக்கிழங்கு இனி கார் தொழிற்சாலைகளுக்கு முக்கிய மூலப்பொருளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்து சமுத்திரப் பிராந்திய சுனாமி வரலாறு

இந்திய உபகண்டம்-இந்து சமுத்திரப்பிராந்தியம் அதைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளையும் பூகம்பங்கள் அடிக்கடி தாக்குகின்றன. ஆனால், இப்பகுதிகளில் சுனாமி நிகழ்வுகள் வெகு அரிதாகவே நிகழ்கின்றன. மக்களின் பாதுகாப்பு மற்றும் கடற்கரையோரங்களில் அமைந்திருக்கும் கட்டுமான அமைப்புகள் ஆகியவற்றின் பாதுகாப்பு என்ற ரீதியில் பார்க்கும்போது அவை அரிதாகத்தான் இப்பகுதிகளைத் தாக்குகின்றன என்பது அறியப்படுகிறது.

பசிபிக் பெருங்கடலை சுற்றி அமைந்துள்ள நாடுகளைத் தாக்கியிருக்கும் சுனாமிகளைப் பற்றித்தான் அதிக அளவில் இதுவரை ஆய்வுகள் வெளிவந்திருக்கின்றன. இருப்பினும் இந்தியப் பெருங்கடலில் நிகழ்ந்திருக்கும் சுனாமிகளைப் பற்றியும்கூட சில ஆய்வுகள் வெளிவந்திருக்கின்றன.

1883 ஒகஸ்ட் 27இல் இந்தோனேசியாவில் உள்ள கிராகத்தோவா எரிமலை வெடித்ததால் சுனாமி உருவானது இது கிழக்கு கரைகளை தாக்கியபோது அதன் அலை உயரம் 1.5 மீற்றராகவும் இருந்தது.

1884இல் வங்காள விரிகுடாவின் மேற்குப் பகுதியில் பூகம்பம் வெடித்தது. இதனால் சுனாமி உருவானது. இந்த சுனாமி அந்தமான் தீவுகளின் தலைநகரமான போர்ட் பிளேயர் மற்றும் ஹுக்ளி ஆற்றின் முகவாயில் இருக்கும் துப்லெத் ஆகியவற்றைத் தாக்கியது. 1941 ஜுன் 26இல் அந்தமான் கடலில் உள்ள ஓர் இடத்தில் 8.1 ரிக்டர் அளவையைக் கொண்ட பூகம்பம் வெடித்தது. இந்தியாவின் கிழக்குக் கடற்கரையை நோக்கி நகரும் சுனாமி ஒன்றும் உருவானது. இந்த சுனாமித் தொடர் அலைகள் 0.75 - 1.25 மீற்றர் உயரத்தை எட்டின.

1945 நவம்பர் 27இல் கராச்சிக்கு சுமார் 70 கிலோமீட்டர்களுக்குத் தெற்கில் உள்ள இடத்திலும், கட்ச் வளைகுடாப் பகுதியிலும் சுனாமி அலைகளின் உயரம் 11.0 11.5 மீடரை எட்டின. இவையே இந்திய உபகண்ட பிராந்திய சுனாமி வரலாறு.




நமது உடலின் வளர்ச்சிக்கு விற்றமின், உயிர்ச்சத்துக்கள் இன்றியமையாதன போல தாதுப்பொருட்களும் அவசியமாகின்றன. அவற்றுள் ஒன்றுதான் கல்சியம்.

சராசரி மனித உடலில் ஒரு கிலோக் கிராம் கல்சியம் உள்ளது. இதில் 99 வீதம் எலும்புகளில்தான் காணப்படுகின்றது. மிகுதி ஒரு வீதம் மிக முக்கியமான வேலைகளை உடம்பில் செய்கின்றது. கல்சியம் உட்கொள்வது குறைந்தால் எலும்புகள் மெலிந்து உடல் பலமற்றுப் போகும். அத்துடன் இரத்த அழுத்தம், பெருங் குடல் புற்றுநோய் மற்றும் சிறுநீரகத்தில் கற்கள் என பல நோய்கள் வர அதிக வாய்ப்பு இருக்கும்.

## உணவில் சேர்க்க வேண்டிய கல்சியம்




வளரும்பருவத்தில் குறிப்பாக இளவயதினர் தினமும் 800 Mg சுன்னாம்புச்சத்தினை உட்கொள்ளவேண்டும். அதாவது பால், தயிர், மோர் மற்றும் கொழுப்புக் குறைந்த பாலாடைக் கட்டி (cheese) என்பவற்றை உணவில் சேர்த்துக்கொள்வது நன்று.

கல்சியத்தை எமது உடலில் உள்ள சுரப்பிகள் கட்டுப்படுத்துகின்றன. இரத்தத்தில் இருக்கும் கல்சியத்தின் அளவை ஒழுங்காக சுரப்பிகளில் வைத்திருக்க விற்றமின் டி, மற்றும் நாளமில்லாச் சுரப்பியான தயிரோயிற் என்பன காரணமாக அமைகின்றன. விற்றமின் டி ஆனது கல்சியம் எலும்புகளிலிருந்து வெளியே செல்வதற்கும் மற்றும் கல்சியம் சிறுநீரகத்திலிருந்து இரத்தத்திற்குப்போகாமல் இருப்பதற்கும் உதவுகின்றன. பொதுவாக தினமும் கல்சியத்தின் அளவு பின்வருமாறு இருத்தல் வேண்டும். சிறுவர்கள் வயது 1-9 வரை 500 Mg ,இளவயதினர் 750Mg,கர்ப்பிணிப் பெண்கள் இறுதி மாதவிடாய் நிறுத்தத்தின் பின்னர் 750-1000Mg. இதைவிடுத்து எமது உடலில் கல்சியத்தின் அளவு குறைந்தால் எலும்புகள் சக்தி இழக்கின்றன. பெருங் குடல் புற்றுநோய் இரத்த அழுத்தம் கூடும். சிறுநீரகத்தில் கல்தோன்றும் வாய்ப்பு அதிகரிக்கலாம்.

எனவே நீங்கள் உங்கள் உணவுகளில் கல்சியத்தினையும் சேர்த்துக்கொள்ளுங்கள். அதற்காக 250Mg கல்சியத்தை தினமும் உணவில் சேர்த்துக்கொண்டாலும் பிரச்சினைகள் உருவாகும். அதனால் அளவோடு சேர்த்துக் கொள்வதே நன்று.

அத்தோடு உங்களுக்கு சிறுநீரகக் கோளாறு இருந்தால் அல்லது பென்சிலின் பாவிப்பதாக இருந்தால், அல்லது கை, கால் நடுக்கம், மூளை சம்பந்தமான நோய்களுக்கு மருந்து பாவிப்பவராக இருந்தால் கல்சியத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள். அல்லது மருத்துவ ஆலோசனையுடன் நடந்துகொள்ளுங்கள். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதை மறக்காதீர்கள்.

# ஆஸ்துமாவுடன் வாழ்தல்

இலங்கையில் ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டுள்ளோரின் மட்டத்தைக் காட்டுவதற்கு எதுவித தரவும் இல்லை. எனினும் வயது வந்தோரை விட சிறுவர்கள் மத்தியில் ஆஸ்துமாவினால் பீடிக்கப்படுவோர் அதிகமாகும். சிறுவர்களின் வழமையான தீவிரமற்ற அளவிலேயே காணப்படும். அதிஷ்ட வசமாகப் பெரும்பாலானோர் பராயமடையும் போது அதிலிருந்து விடுபட்டுவிடுகின்றனர். சிறுபராயத்தின் போது பெண்களை விட ஆண்களிலேயே



ஆஸ்துமா பொதுவாகக் காணப்படுகின்றது. ஆனால் ஒரே அளவில் வயதுவந்தோர் பாதிக்கப்படுகின்றனர்.

ஆஸ்துமா அதிகளவில் பொதுவாகக் காணப்படுகின்றது எனப் பெருமளவு அண்மைய அளவீடுகள் கருத்து வெளியிட்டு உள்ளன. உண்மையில் ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை கடந்த இருபது வருடங்களின் போது இருமடங்காகியுள்ளது. அதிஷ்டவசமாக மிகவும் சில ஆட்களே விசேடமாக இளம் சிறுவர்கள் ஆஸ்துமாவினால் இறக்கின்றார்கள். ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டோர் அது பற்றிய ஆபத்தை கவனத்தில் எடுக்காமல் இருப்பதும் அதைத் தடுப்பதற்குப் போதிய மருந்தினை எடுக்காததும் ஆஸ்துமாவை அவர்கள் கொண்டிருப்பதற்கு ஒரு காரணியாக விளங்குகின்றது.

பெருமளவு வித்தியாசமான காரணிகள் அல்லது "தூண்டல்கள்" ஆஸ்துமா தாக்கத்தை அதிகரிக்கும். ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டுள்ள யாவருமே ஒரே விதமான தூண்டல் களைக் கொண்டிருக்கவில்லை. ஆதலினால் ஆஸ்துமா தாக்கத்தை விளைவிக்கும் தூண்டலை இனங்காண்பது சாத்தியமானதாயிருப்பின் அது உதவியாக விளங்கும்.

வைரசு தொற்று நோய்கள், வீட்டுத்தூசிக் கறையான்கள், மகரந்தங்கள், தேகாப்பியாசம், காலநிலை ஆகியவற்றை தூண்டல்களாக உள்ளடக்கலாம்.


இதோ இது பற்றிய மேலதிக விபரங்கள்.

'அலர்ஜி' காரணிகள் வீட்டுத்தூசி, புல், மகரந்தங்கள் அல்லது சிறிய பூஞ்சணவித்திகள் போன்றன பாதிக்கும் தன்மையிலான ஒரு துணிக்கையைச் சுவாசிக்கும்போது ஆஸ்துமாத் தாக்கம் ஏற்படுகின்றது.

ஒருசில நிமிடங்களுக்குள் இழுப்பு ஆரம்பித்து அடுத்த சில மணித்தியாலங்களுள் தீவிர தாக்கம் ஒன்றுக்குக் கொண்டுசெல்லலாம். இவ்வித தாக்கத்தின் பின் சில வாரங்களுக்கு காற்று வழிகள் பெரிதும் இழுப்புடன் விளங்கும். இவை பற்றி இப்பிரிவு முழுவதும் பின்னர் அதிக விளக்கத்துடன் கருத்துப் பரிமாறுவோம்.

(தொடரும்)

# இடர்மிகு களங்களில் சுடர்மிகு வீரன்



உந்துகணை செலுத்தியுடன் சதா போர்க்களத்திலே வலம் வரும் அந்த நெடிய உருவம் கண்ணுக்குள் நிரந்தர விம்பமாகியேவிட்டது. ஒரு சுதந்திர போராளிக்கே உரிய நிதானம், வேகம், சுமை தாங்கிடும் இதயம், பொறுமை, துடிதுடிப்பு எல்லாமே அந்த நெடிய போராளியுடனேயே பிறந்திருந்தது.

இடர் நிறைந்த சண்டைக்களங்களில் அவனொரு சூரப்புலி என்று சொல்லுவது அவனது எல்லாவிதமான சண்டைகளுக்கும் பொருந்தும். நல்ல குறிசூட்டாளன் மட்டுமல்ல உந்தகணை செலுத்தி இயக்குவதில் திறமையானவன். களத்தில் எந்த நடவடிக்கை என்றாலும் எல்லாவற்றிலும் பேர் போனவன். முன்மாதிரியாகச் செய்துகாட்டுபவன் இவனே.

வீரவேங்கை கப்டன் மதியன் (சிவலிங்கம் இராமலிங்கம்) முத்தயன்கட்டு. எந்தவொரு விடயத்தை எடுத்தாலும் போராட்ட வெற்றிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்படும் இவன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதையும் செய்யத்துணிந்தவன்.

சாதாரண அடிப்படைப் பயிற்சி போராளியாக அடியெடுத்துவைத்த இவன் தனது போராட்டவாழ்வில் செய்த சாதனைகள் பல. பொதுவாழ்விலிருந்து எழுந்து விடுதலைக்கு வருகின்ற போராளிக்கும் உணர்வுகள் திடீரென மாறுவதுண்டு. அந்த வகையில் கப்டன் மதியனின் உணர்வுகள் சண்டைக் களங்களிலே மிக மிக சிறப்பான கோணத்தில் செயல்வடிவம்பெற்றது.

கப்டன் மதியனை முதன் முதலில் வரவேற்ற ஜெயசிக்குறுச் சமர் இவன் களத்தில் புலி என்பதைத் தெளிவுபடுத்தியது. இந்த நெருக்கமான களத்தில் பைரவன் எனும் போராளியுடன், உந்துகணைச் செலுத்தி உதவியாளனாக செயற்படத்தொடங்கியபோதே தனது பொறுப்பாளரின் ஆரம்ப அறிவூட்டலில்தான் ஒரு சாதாரண உந்துகணை செலுத்துனராக செயற்படத் தொடங்கிவிட்டான்.

இப்படியாக கனரக ஆயுதங்கள் இயக்குவதிலேயே தனது இயக்க வாழ்வை ஆரம்பித்த கப்டன் மதியன் பிற்காலத்தில் சண்டைக் களங்களில் சிறந்த சூட்டாளனாகி சாதனைகள் பல படைத்தான்.

ஓயாத அலைகள்-02ஆரம்பிப்பதற்கு முன்பு இலங்கைத்தீவின் 50ஆவது சுதந்திரதினத்திற்கு 02 நாட்கள் இருக்கையில் கிளிநொச்சி முன்னரங்குப் பகுதியில் தொடங்கப்பட்ட சண்டையின் போது தடையணியோடு கப்டன் மதியனும் தனது உந்துகணையுடன் சென்றிருந்தான். திட்டத்தின்படி நடையணியின் கனரக ஆயுதங்கள் எதிரியின் நிலைகளை உடைப்பதிலேயே உள்நுழையும் வெற்றி ஓங்கியிருந்தது.

அதற்கமைவாக கப்டன் மதியன் தனக்குத் தரப்பட்ட எதிரியின் நிலையை துல்லியமான முறையில் தகர்த்தெறிந்தான். சண்டை தொடங்கும்போது கும்மிருட்டாக இருந்தபோதும் நிதானமான அனுபவ சூட்டினால் எதிரியின் அந்த காவலரணை அழித்திருந்தான். அவனது அந்தச் சூட்டின் பெறுமதி

**க.மிரேசு**

விடிந்தவுடனேயே தெரிந்தது. ஏனெனில் ஒரு எதிரி இறந்து கிடக்க, இன்னுமொருவன் காயத்துடன் சென்று பக்கத்திலுள்ள கிணற்று மறைவில் இறந்துகிடந்தான். அந்தக் காவலரணும் ஒரு பக்கம் சிதைவுற்றுக் கிடந்தது. இன்றளவும் நினைவில் மறையாமல் இருந்தது.

இதனைத்தொடர்ந்து சுட்டதீவு, ஊரியான் காவலரண் தொடர்களிலும் எதிரியின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் கப்டன் மதியன் தொடர்ந்து வேகமுடனேயே செயற்படலானான். தனக்குத் தரப்படுகின்றவேலைகளை வேகமுடன் நிறைவேற்றும் தனிச் சிறப்பை இவனிடம் காணமுடிந்தது. பகல் முழுதும் எதிரியோடு சண்டைசெய்து உணவு நீர் கிடைக்காத போதும் இரவானதும் தனக்கான நிலைகளை அமைப்பதில் பலமணி நேரங்களைச் செலவிடுவான்.

தனக்கான காவலரண் அமைப்பது மட்டுமல்ல அமைக்கும் காவலரணை எந்தளவு நேர்த்தியாக அமைக்கவேண்டும் என்பதில் தனது கவனத்தை செலுத்துவதோடு, தனது சக போராளிகளினதும் காவலரண் அமைக்கும் வேலையிலும் ஒத்தாசை நல்கி தனது குழு ஒற்றுமையை எந்தநேரத்திலும் காட்டத்தவறமாட்டான்.

நாம் ஊரியான் காவல் நிலைகளில் எதிரியை தடுத்து நிறுத்தியிருந்த அதேநேரத்தில் எதிரி பலமுறை எம்மை தாக்கமுற்பட்டான். அதன் போது கப்டன் மதியனின் ஆர்.பி.ஜி உந்துகணைகள் எதிரிக்கு நல்ல பாடத்தை கற்றுக்கொடுத்தன.

ஒரு நாள் கப்டன் மதியன் நின்ற பக்கமாக எதிரியின் கவச ராங்கியொன்று வேகமாக எம்மை நோக்கிவந்தது. இந்த நடவடிக்கைக்கு எதிரி வைத்த பேர் "புலிவேட்டை" ஊரியான் வெளிகளில் எதிரி நகரத்தொடங்கிவிட்டான். எதிரிக்கு முன்பாக எதிரியின் கவசங்களும் நகரத்தொடங்கின.


ஒரு பக்கம் பரிசுதனின் கலிபர் எதிரியை எதிர்க்க தனது அனல் நாக்குகளை கக்கியது. மறுபுறத்தில் கப்டன் மதியன் தலைமையில் ஓரிடத்திலிருந்து 04 உந்துகணைகள் செயற்படத் தொடங்கியன. கவச எதிர்ப்பு கணைகளும் துருப்பெதிர்ப்பு கணைகளும் மாறி மாறி எதிரியை சிதைவுறச் செய்தன. எதிரியின் கவசமொன்றுக்கு மதியன் குறிபார்த்துச் சுட்ட உந்துகணை பட்டு அந்த கவசம் புகையை கக்கியது. களத்தில் நின்ற எல்லோரும் கத்தி ஆரவாரப்பட எதிரியின் கவசம் புகைகக்கியபடியே அவனது பிரதேசத்திற்குள் சென்றுவிட்டது.

இப்படியாகக் கப்டன் மதியன் சிறிய பெரிய சண்டைகளில் தனது சுடுகருவியினால் நிறையவே சாதித்திருக்கிறான். ஓயாத அலைகள்- 02 இல் தனது அணியுடன் உந்துகணை செலுத்துனராக சென்றவன் எதிரிகளின் முன்ன ரங்குகளை தகர்ப்பதில் பெரிதும் செயலாற்றினான்.

கப்டன் மதியனின் வீரத்திற்கு சான்று கற்பிக்க இத்தாவில் களம் விரிந்தது. 27.03.2000 சண்டை தொடங்கிய நாளிலிருந்து 28.04.2000 நாம் இத்தாவில் என்ற சரித்திர சமரை முடித்து வெளியேறும்போது இத்தாவில் சமரில் நடந்த எத்தனையோ வீரமிகு சாதனைகளுக்கு சொந்தக்காரன் கப்டன் மதியன்.

2000-04-10 காலை எதிரி பல்லாயிரம் பேர் இணைந்து மிக உக்கிரமான தாக்குதலை தொடங்கி விட்டான். இடைவிடாத சண்டை எதிரி எல்லாப் பக்கங்களிலும் க்வச வாகனங்களுடன் முன்னேறத்தொடங்கிவிட்டான். மதியன் நின்ற பக்கங்களுக்கு ஊடாகவும் எதிரி முன்னேறத் தொடங்கிவிட்டான் சண்டைக் களத்தில் துப்பாக்கி வேட்டுக்கள், எறிகணை வெடிப்புக்களின் சத்தத்தை விட கவசவாகன ராங்குகளின் சத்தமே பேரிரைச்சலாகக் கேட்டது.


எங்களுக்கும் நல்லா விளங்கிட்டுது கிளாலிப் பக்கமாக இருந்து வந்த முதலாவது அரங்கை கப்டன் மதியனே தாக்கினான். அது சேதத்துடன் திரும்பிச்சென்று விட்டது. மேலும் ஒரு ராங் மதியனை நோக்கி முன்னேற அதையும் அடிக்கிறான் அது எரிந்தவாறே சென்றதும் பக்கத்தில் வந்த இன்னுமொரு ராங்கி அவ்விடத்தைவிட்டு தப்ப முயற்சிசெய்து திரும்பும்போது பள்ளத்தில் மாட்டிக்கொண்டு திணற இறுதியில் எடுக்கமுடியாமல் அதில் வந்தவர்கள் தப்பி ஓட மதியன் அந்த ராங்கியை அடிக்கவில்லை. காரணம் அதை கைப்பற்றலாம் என்று.



ஆனால் களச் சூழ்நிலையினால் அது உடைக்கப்படுகின்றது. மாலை எதிரி தோல்வியுடன் ஓட்டமெடுக்கிறான். இன்றைய வெற்றிக்கு கப்டன் மதியன் பொறுப்பாகினான்.

இப்படியாகக் கள வாழ்விலேயே தன்னை இணைத்துக்கொண்டவன். தீச்சுவாலை சமரில் தனது அணியோடு கடும் சமராடி எதிரியை அழித்தொழித்தான். தான் 16.09.2001 அன்று முக்கியமான வேவு நடவடிக்கை ஒன்றுக்குச் சென்ற வேளை எழுதுமட்டுவாழ் பகுதியில் வைத்து தவறுதலான வெடிவிபத்தில் அந்த வீரப்புலி வீரன் வீரச்சாவடைந்தான். ஆனால் அவனின் அந்த சொல் நினைவை உலுப்பியது. "யாழ்ப்பாணத்தைப் பிடித்து விட்டுத்தான் சாவேன்" ●





நாட்டுப்பற்றாளர்
க.சிவராசா



# வீடு

காலையில் இருந்தே சாரதா பரபரப்பாக இருந்தாள். இனம் புரியாத சந்தோஷம் மனதிற்குள் துள்ளிக் கொண்டிருந்தது. பதினான்கு வருடங்களின் பின் சொந்த மண்ணை கட்டிய வீட்டை ஓடியாடி மகிழ்ந்த வளவைப் பார்க்கப்போகிறாள்.

பதினான்கு வருடங்கள், அகதி முகாம்களிலும் இரவல் குடிசைகளிலும் வாழ்ந்து துன்பப்பட்ட பின் இப்போது சொந்த வீட்டிற்குத் திரும்ப வழிபிறந்திருக்கிறது.

அந்த வீட்டைக் கட்டி முடிக்க அவள் பட்டபாடு சாதாரணமானதல்ல. கணவன் பாலச்சந்திரனிற்கு கொழும்பில் அரசாங்க உத்தியோகம். அடிக்கடி வரமுடியாத நிலை. மாதாந்த சம்பளத்தையும் எடுக்கமுடியாத கடன்களையும் எடுத்து அவளுக்கு அனுப்பி விடுவான். அவள்தான் மழை, வெயில் பாராமல் கூலிக்காரருக்கு உதவியாளாக நின்று வீட்டைக் கட்டி முடித்தாள்.

வீட்டிற்கு 'துளசிஅகம்' என்று பெயரும் வைத்து குடி புகுந்த போது பாலச்சந்திரனும் சாரதாவும் ஊரையே அழைத்திருந்தார்கள். வந்தவர்கள் வீட்டை அங்கமங்கமாகப் புகழ்ந்தார்கள்.

சாரதாவிற்கு மன நிறைவால் கண்கள் திரையிட்டன. தன்னுடைய உதவி பெரிதாக இல்லாமல் அந்த வீட்டைக் கட்டி முடித்த சாரதாவை பலரிடமும் சொல்லி பெருமைப்பட்டுக்கொண்டான் பாலச்சந்திரன்.

அவன் ஓய்வாக கதிரையில் இருக்கும் வேளைகளிலெல்லாம் மகள் துளசி மடியில் ஏறி விடுவாள்.

''அப்பா வீடு எனக்குத்தானே" ஆறு வயதிலும் அவளுக்கு மழலைக்குரல்.

"துளசிக்குட்டிக்குத்தான் வீடு .... வேற ஆருக்கு..."

கொஞ்சலுடன் பாலச்சந்திரன் சொல்லுவான்.

''அண்ணாவுக்கு வீடு குடுக்கிறேல்ல... என்னப்பா"

"அண்ணா ஆம்பிளைப் பிள்ளை அவனுக்கேன் வீடு.

பிள்ளைக்குத்தான் வீடு"

தந்தையின் சொல்லில் நம்பிக்கை வைத்து துளசி மகிழ்ச்சியுடன் மடியை விட்டு இறங்கிப் போவாள்.

துளசியிலும் பார்க்க இரண்டு வயது கூடிய அண்ணன் நிலவனிடமும் வீடு தனக்குத்தானென வீரியம் கூறுவாள். நிலவன் அமைதியாகச் சிரிப்பான்.

அவ்வளவு அரும்பாடு பட்டுக்கட்டிய வீட்டில் ஆறுமாத காலம் கூட இருக்கமுடியவில்லை. பலாலி இராணுவ முகாமிலிருந்து சிங்கள இராணுவம் மூர்க்கத்தனமான தாக்குதல்களுடன் நகர்வை மேற்கொண்டது. எறிகணைகள் நாலா பக்கமும் வீழ்ந்து வெடித்தன.

ஒரு அரை மணி நேரத்துக்குள் ஒழுங்கைகள், தெருக்களெல்லாம் மக்களால் நிரம்பிவிட்டன. கையில் அகப்பட்ட உடமைகளை எடுத்துக்கொண்டு மக்கள் உயிரைக் காக்க வீடு வாசல்களை விட்டு ஓடிக் கொண்டிருந்தார்கள்.

சாரதா அவசரம் அவசரமாக சில துணிமணிகளையும் பிள்ளைகளின் பள்ளிக்கூடப் புத்தகங்களையும் எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு- பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டாள்.

வீதியில் நின்று வீட்டைத் திரும்பிப்பார்த்தாள் கண்கள் பொல பொலவென கண்ணீரைக் கொட்டின 'ஓ' வென்று சத்தமிட்டு அழுதாள். கணவனின் உழைப்பும், தனது வியர்வை எல்லாமே இந்த வீடுதான். வீட்டைத் திரும்பிப்பார்த்து, பார்த்து அழுதபடி போனாள். அவள் பின்னால் பிள்ளைகள் போனார்கள்.

அதன் பின்னர் வீடும் வளவும் அவளது கனவில் வந்ததேயன்றி கண்ணால் காண முடியவில்லை. அவளது வீட்டையும் கடந்து வந்து இராணுவம் நிலைகொண்டுவிட்டது.

கணவனிற்கு அழுது அழுது கடிதங்கள் எழுதினாள். பாலச்சந்திரன் அவளுக்கும் பிள்ளைகளுக்கும் ஆறுதல் சொல்லிக் கடிதம் எழுதினானேயன்றி அவனும் உடைந்து போனான்.

அதன் பின் எத்தினை இரவல் வீடுகள்- துன்பங்கள், சமாதானம், பேச்சுவார்த்தை, பாதை திறப்பு என்னவெல்லாமோ நடந்தன. ஆனால் சனத்திற்கு வீடுகளோ, காணிகளோ திரும்பக் கிடைக்கவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் தனக்கு வேண்டுமென இராணுவம் குந்தியிருந்தது.

"வீடுவேண்டும்... இராணுவமே விலகு" என எத்தனையோ போராட்டங்கள் ஒவ்வொன்றிலும் சாரதா முன்னின்றாள். ஆனால் வீடு கிடைக்கவில்லை.

பாலச்சந்திரன் ஓய்வு பெறும் நாளும் நெருங்கிக்கொண்டிருந்தது. இப்போது ஒரு புதிய செய்தி. தெல்லிப்பழையை அண்மித்த சில பகுதிகளை விட்டு இராணுவம் விலகிக்கொள்ளப் போவதாகப் பரவலாகப் பேச்சு அடிபட்டது.

அது உண்மையென உறுதிப்படுத்தப்பட்டு, உதவி அரச அதிபரால் நாளும் குறிப்பிடப்பட்டது. சாரதா அடைந்த குதூகலத்திற்கு அளவேயில்லை. அயலவர்களைத் தேடிப் போய் கதைத்தாள்.

"வீட்டைப் போய் பார்க்கலாம், கெதியெண்டு வாருங்கோ'' என கணவனிற்குக் கடிதம் எழுதினாள். சாரதாவின் கடிதத்தைப் பார்த்த பாலச்சந்திரனிற்கு எல்லையில்லாத மகிழ்ச்சி. லீவு எடுத்துக் கொண்டு சாரதாவையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு போய் வீட்டைப் பார்த்து அதனை நாலு தடவை சுற்றிவர மனம் துள்ளியது. அவன் இன்னும் ஒரு சில நாட்களே கடமையில் இருக்கவேண்டும். பென்ஷன் எடுப்பதற்கான சகல படிவங்களையும் நிரப்பிக் கொடுத்துவிட்டு ஊருக்குப் புறப்பட்டான்.

சாரதாவும், பாலச்சந்திரனும் வீட்டிற்கு அருகில் உள்ளவர்களுடன் சேர்ந்து வீடு பார்க்கப் புறப்பட்டார்கள். பிள்ளைகளைக் கூட்டிப்போக மனம் இடந்தரவில்லை. அங்கே மிதி வெடிகள் இருக்கலாம்; அத்தோடு அவர் கள் இப்போது சின்னப்பிள்ளைகள் இல்லை. வளர்ந்து விட்டார்கள்.

**விழிசிட்டி-க.சிவராசா**

வண்டில்கார வேலுப்பிள்ளை அம்மான் விடு விடுவென முன்னே போய்க்கொண்டிருந்தார். பின்னால் பாக்கியம் மாமி கிளாக்கர் நடராசா - பாலச்சந்திரன் சாரதா இன்னும் சிலரும் வந்துகொண்டிருந்தார்கள்.

கல்லூரியைக் கடந்து போகப்போக பற்றைகள் வளர்ந்து பாதையைக் குறுக்கியிருந்தன. தார் றோட்டை உடைத்துக்கொண்டு மஞ்சள் முன்னாவும், இலந்தைமரமும் கிளைவிட்டு நின்ற அதிசயத்தைப் பார்த்துக்கொண்டு போனார்கள்.

அடர்ந்து வளர்ந்திருந்த கடுகு நாவற்பற்றைகளைத் தாண்டிச்சென்ற போது சாரதாவின் கண்கள் அகல விரிந்தன. நாவல் மரமொன்று வானளாவை உயர்ந்து கிளைபரப்பி நின்றது. அந்த இடத்தில் நாவல் மரமொன்று நின்றதாக அவளிற்கு நினைவில்லை. " என்ன சாரதா நாவல் மரத்தை அடையாளம் தெரியவில்லையோ "எங்கட வளவுக்கும் மூர்த்தி வளவுக்கும் இடையில எல்லையில நிண்ட கண்டுதான் இப்ப பெரிய மரமா நிக்குது..... பதினாலு வருசமல்லோ....

பாலச்சந்திரன் சொன்னதைக்கேட்டு சாரதா குதூகலித்தாள். " அப்ப வீட்டுக்குக்கிட்ட வந்திட்டம்" சொல்லிய படி எட்டி நடந்தாள். நாவல் மரத்திற்கு அப்பால் வீடு தெரியவில்லை. கற்குவியல் ஒன்று பெரிதாகக் கிடந்தது. அதற்குள் கூரை ஓடுகளும்- பனை மரத்துண்டங்களும் புதையுண்டு கிடந்தன.

சாரதாவின் கால்கள் துவண்டன. பாலச்சந்திரனின் முகம் இருண்டு போனது. அங்கே அவர்களின் வீடு இருக்கவில்லை. அது மூலையில் கற்குவியலாகக் கிடந்தது. கீழே நிலத்தைப் பார்த்தார்கள். புல்டோசரின் தடங்கள் புதியனவாக அங்குமிங்கும் தாறுமாறாகத் தெரிந்தன. இராணுவம் பின்நோக்கிப் போகும் போது எல்லாவற்றையும் இடித்துத் தள்ளிவிட்டுப் போயிருக்கிறார்கள். சாரதா தலைக்குக் கைவைத்துக் கொண்டு நிலத்தில் இருந்து "ஓ" வென்று சத்திமிட்டழுதாள். பாலச்சந்திரன் அவளைத்தேற்ற முடியாமல் கண்கலங்க நின்றான்.

கூட வந்தவர்கள் சாரதாவைக் கடந்து பதட்டத்துடன் போனார்கள். எல்லோரது மனங்களும் வெந்து கொதித்துக்கொண்டிருந்தன.

வீடுபார்க்கப்போன சாரதா துவண்ட நிலையில் திரும்பினாள். அழுது அழுது கண்கள் வீங்கி விட்டன. பாலச்சந்திரன் எவ்வளவோ சொல்லியும் அவளைத் தேற்ற முடியவில்லை.

"அம்மா! வீடு எப்படியிருக்கு? பிள்ளைகள் ஆவலுடன் கேட்டார்கள்."

"எங்கட எல்லாத்தேட்டத்தையும் ஆமி புல்டோசர் போட்டு இடித்துத் தள்ளிப்போட்டான்." சாரதா ஓயாமல் புலம்பினாள். பாலச்சந்திரனிற்கு எல்லாமே அற்றுப்போனது போல மனம் சோர்வடைந்தது. 'யாரோடும் பேச் மனமில்லாமல் மூலையில் முடங்கிக்கிடந்தான். மகள் துளசியைப் பார்க்கும்போதெல்லாம்.....

" அப்பா வீடு எனக்குத்தானே" என்று மழலையாகக் கேட்டது. நினைவில் சுழன்றது. மனம் கொதித்தது.

இரண்டு வாரங்களாக வீட்டுக்குள் முடங்கியவன் பென்ஷன் அலுவலாகக் கொழும்பு செல்ல ஆயத்தமானான்.கொழும்பில் நின்று அலுவல் பார்த்தால்தான் பென்ஷனை விரைவில் எடுக்கலாம் இல்லாவிட்டால் அது தள்ளிக்கொண்டே போகும். அவன் புறப்பட்டான்.

கொழும்பில் ஓடியாடி அலுவல் பார்ப்பதற்கு வசதியாகக் கோட்டை புகையிரத நிலையத்திற்கருகே உள்ள விடுதியில் அறையெடுத்துத் தங்கிக் கொண்டான்.

தொடர்ந்து நான்கு நாட்கள் ஒரே அலைச்சல். எப்படியும் ஒரு மாதத்தில் பென்ஷன் கைக்கு வரத்தொடங்கி விடும். எல்லா அலுவல்களும் முடிந்துவிட்டன. உடல் சோர இருக்கையில் இருந்தான்.

இந்தப்பென்ஷன் பணத்தை எடுத்து வீடு கட்டி துளசிக்கு வாழ்வு அமைத்துக்கொடுக்க முடியுமா? என அவன் சிந்தனை சுழன்றது. நினைக்க நினைக்க மனம் கொதித்தது.

புல்டோசர் கொண்டு அவனது வீட்டை நொருக்கித்தள்ளிய அந்த முகம் தெரியாத இராணுவத்தினரை நினைத்து- முஷ்டியை இறுக்கி மேசையில் ஓங்கிக்குத்தினான். மேசையில் இருந்த தண்ணீர்ப் போத்தல் சரிந்து விழுந்தது.

அன்று அவன் வீட்டிற்குத்திரும்ப எண்ணியிருந்தான். கடைத்தெருவிற்குப்போய் சாரதாவிற்கும் பிள்ளைகளுக்கும் சில துணிமணிகள் வாங்கிக்கொண்டான். உடைகளைக் கழுவிப்போடவேண்டுமென்ற எண்ணத்தில் விரைவாக விடுதிக்குத் திரும்பினான். அவன் தங்கியிருந்த அறை நாலாவது மாடியில் இருந்தது. படியேறினான்.இரண்டாவது மாடியில் வரவேற்பறை இருந்தது. வரவேற்பாளரிடம் அன்றைய பத்திரிகையை வாங்கி அங்கிருந்த இருக்கையில் இருந்து கொண்டு மேலோட்டமாகப் புரட்டினான்.

யாரோ படியேறிவரும் ஓசை கேட்டது. ஒரு திடகாத்திரமான வாலிபன் வந்து கொண்டிருந்தான். வந்தவன்.....

"அறைஇருக்கிறதா" வென சிங்களத்தில் விசாரித்தான் வாய் திறந்தபோது மதுவின் நெடி வந்தது. வரவேற்பாளரிடம் தனது அடையாள அட்டையை எடுத்துக்கொடுக்க முனைந்தபோது அது கீழே விழுந்தது. பாலச்சந்திரனின் காலுக்கருகே கிடந்த அடையாள அட்டையை எடுத்துக் கொடுக்கும் போது பாலச்சந்திரன் அதனை ஒரு தடவை பார்த்தான்.

''சிறிலங்கன் ஆமி-எம் சூரியப்பெருமா" என்றிருந்தது. அதில் இராணுவ உடையில் அவன் இருந்தான். " இந்தாங்கோ" பாலச்சந்திரன் அவனிடம் அதனைக்கொடுத்தான். பாலச்சந்திரனைத் தமிழன் என்று இனம்கண்டு கொண்ட காரணத்தாலோ என்னவோ நன்றி கூடச் சொல்லாமல், பறிப்பது போல அதனை வாங்கிக்கொண்டான்.

பதிவுகளெல்லாம் முடித்து விட்டு- றூம்பையனின் வருகைக்காக சூரியப் பெருமா காத்திருந்தான். அவனை விசாரிக்க வேண்டும்போல் பாலச்சந்திரனுக்குத் தோன்றியது. பாலச்சந்திரனுக்குச் சிங்களம் நன்றாகத் தெரியும். சிங்களத்தாலேயே பேச்சைத் தொடங்கினான்.

சூரியப் பெருமா பலாலி இராணுவத்தளத்தில் தான் மூன்று வருடமாக வேலை செய்ததாகவும், தெல்லிப்பழையில் நிலைகொண்டிருக்கும் ஐம்பத்திரண்டாம் படைப்பிரிவில் தான் தனக்குப் பணியென்றும், இப்போது அந்தப் பகுதி பின்னோக்கி நகர்த்தப்படுவதால் அந்த வேலைகளை முடித்துக்கொண்டு பதினைந்து

(22ஆம் பக்கம் பார்க்க)

## 'வெலிக்கடை' முகட்டிலிருந்து வெள்ளை உலகத்திற்கு...

நாடித் துடிப்புகளின்
விகிதம்-
நாளுக்கு நாள் குறைவுற்று
என்றோவொரு நாள்
முற்றாய்
முடங்குவது உறுதி.

வலிகளினால்
அலறியலறி வாய் உமிழ் நீரற்று
கண்ணீரும் பெருக்கோடி
அதுவும் வற்றும்
எனினும்,
முடியாதது வதைகள்.

வதைகள்-
நாளிகை, நாட்களெனக் கடந்து
விடாப் பிடியாயும்,
மாறா வினாக்களோடும்,
விசித்திரமாகவும்,
வித்தியாசமாகவும் தொடரும்.

காரணமற்ற
கைதுக்குப் பின்னரான
காலப் பதிவுகளில்...
கரைந்து போன என் கூடு
கருகிப் போன உறவுகள்
கல்லாகிப் போன மனது.
இது ஞாபகமற்ற வருடத்து
நான்காவது தவணை நாள்.

நம்பிக்கையற்று,
நான்கு நபர்களுடன் பிணைக்கப்பட்டு....
நான் போகிறேன்.

வெளியிலே...
வெலிக்கடைக் கூரையேறிக்
குரல் கொடுக்கிறான்
ஒருவன்.

"வெள்ளை உலகமே...
வெந்து போன
இந்த உள்ளத்தையும்
வெளுறிய உடலையும்
ஒரு தடவை பாருங்கள்.

நான் மதிக்கப்படவில்லை,
நான்கு சுவருக்குள் இன்றும்
மிதிக்கப் படுகிறேன்.
ஏனெனில்,
நான் ஒரு தமிழன்'

நா.கானகன்.

## விட்டில்களின் இரா

வெம்மைக்குள் விட்டில்கள்
எரிந்த இராவினில்
என் ரோமங்கள் கருகி
மணத்தன
விட்டிலுக்கு எல்லாம்
விடியாத நாட்கள் தான்.
சிறு வெளிச்சத்தில்
அதன் ஜீவார்த்தம் நிறைவாகின்றது.
விட்டிலை கொல்லுதல்
விளக்குகளின் பணியா என்ன?
விட்டிலுக் கென்ன
மனசு இருக்கப் போகின்றது.
வீடு, தோட்டம், துரவு, பெண்டிலுடன்
பிள்ளைகள் ஆட்டுடன் மாடு
அவைதவிர ஏதும்
எல்லாம் பொசுக்கென்று
போய்விடுகின்றன.
போகட்டும் ஒரு விட்டில்
ஆனால் அடுத்த விட்டில்
அதற்கடுத்த விட்டில்
எந்த விட்டிலுக்கும் பேதம் கிடையாது
ஒரு புலுண்டிய மணத்துடன்
நிறைய விட்டில்களின்
கனவு தீயில் கருகும் துயரம்
தொடர்கிறது.

கோகுலராகவன்

இலக்கியப்பகிர்வு

# காற்றின் துளிகள்

பொன்காந்தன் தொகுப்பில் புலிகளின் குரல் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட தொகுப்பு காற்றின் துளிகள் ஆகும். புலிகளின் குரல் வானொலியில் " வெள்ளிப்பொழுது" நிகழ்ச்சியில் ஒலிபரப்பான பொன் காந்தன், ஆதிலட்சுமி சிவகுமார், செந்திரு, ரட்ணா, கை. சரவணன், திருநகரூர் ஜெகா, ஜெயசீலன், க.லிங்கராசா ஆகிய எட்டுப் படைப் பாளிகளின் படைப்புக்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

தொகுப்பின் தரம்போலவே படைப்பாளிகள் எடுத்துக்கொண்ட பொருளை தத்தமது பார்வைக்கு ஏற்ப விரித்துக் கூறுவதிலும் வேறுபாடுகள் உள்ளன. உதாரணமாக "ஆறு" என்ற தலைப்பில் பொன்காந்தன் மிக நீளமாக விரித்துச் சென்றுள்ள அதேவேளை " ஒன்றுமில்லை" என்ற தலைப்பில் தன் பங்கைச் சுருக்கிக் கொண்டு விடுகின்றார். எடுத்துக் கொண்ட தலைப்புக்களும் இந்தச் சுருக்கத்திற்கு ஒரு காரணமாக அமையலாம்.

வெள்ளிப்பொழுது தயாரிப்பாளர் பொன் காந்தன் தலைப்புக்களைத் தெரிவு செய்யும்போதும் அதனைப் படைப்பாளிகளைக் கொண்டு படைப் பாக்கம் செய்யும்போது சமச்சீரைக் கவனித்திருக்க வேண்டும் அல்லது வேண்டிய தகவல்களை, விடயங்களைச் சேகரித்துக்கொடுத்திருக்க வேண்டும். தயாரிப்பாளராகிய அவர் எடுத்துக்கொண்ட விடயத்தின் அளவும், அமைப்பும் ஏனையவர்களின் விடயங்களிலும் இடம்பெற்றிருந்தால் நன்றாக அமைந்திருக்கும். நல்ல அமைப்பாக்கத்துடன் வெளியான காற்றின் துளிகளின் ஒளிப் படங்கள் சிறப்புடன் அமைந்துள்ளன.

" தலை குனிந்து வீழ்ந்திட விடாத
தத்துவத்திற்கு
தமிழர்களுக்குப் புதிய பக்கங்களைத்
திறந்த புத்தகத்திற்கு" என அர்த்த முள்ள வரிகளுடன் ஆரம்பிக்கும் காற்றின் வரிகள் "ஒரு கணம் தலைசாய்ந்து தொடர்கின்றோம்.'
எங்கள் பின்னாலே ஒரு பிரமாண்ட சக்தி என்ற வரிகளுடன் உயிர்ப்புப் பெறுகின்றது.

"எமது புலிகளின் குரல் கவிஞன் பொன்காந்தன் காந்தக்கலி வீச்சுடைய நல்ல படைப்பாளி" என நூலின் தொகுப்பாசிரியர் பொன் காந்தன் தொடர்பாகக் கூறும் புலிகளின் குரல் பொறுப்பாளர் தொகுப்பில் உள்ள ஏனைய கவிஞர்கள் தொடர்பாகவும் ஓரிருவரிகளைச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

"சமூகத்தில் இலை, மறை காய்களாக இருக்கும் கலைஞர்களை வெளி உலகிற்குக் கொண்டுவரும் பணியையும் புதிய படைப்புக்களை கவிஞர்களை உருவாக்கும் பணிகளையும் பொன்காந்தன் தனது வெள்ளிப்பொழுது மனமே மனமே, பாடலும் தேடலும், உள்ளம் சிந்தும் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் செய்து வருகின்றார்" எனப் பொறுப்பாளர் மேலும் தெரிவிக்கின்றார்.

படைப்புலகில் புதியவர்களைக் கொண்டு வருதலும் அவர்களை ஊக்குவிப்பதும், ஏற்கனவே படைப்புலகில் இருப்பவர்களின் கடமையாகும்: அந்தப்பணியை பொன் காந்தன் மேற்கொள்வது பாராட்டுக்குரியது.

"உடல் உழைப்பும் மூளை உழைப்பும்
சமமாகிற சூழலில்தான்
விடுதலைத் தேடல் விழி[illegible]கும்
அதுதான் இன்றைய[illegible]ம் புலி
விழிப்பும்!"
எனக் கூறும் கவிஞர் அறிவு மதியின் அணிந்துரை தொகுப்புக்கு அணிகலனாக அமைகின்றது.

" பேசிக்கொண்டே நுழைவோம்" என்றபடி வரும் "பொன்காந்தன்" அவர்களின் கவிவரிகள் தன்



நியாயப்பாட்டை வலியுறுத்துகின்றன. பொதுவாக செவிவழி உணரப்படுவதற்கும் விழிவழி தரிசனமாவதற்கும் இடையே வேறுபாடுகள் உண்டு. காற்றில் ஏறிவரும் கவிவரிகள் அச்சுப் பதிப்பில் கவிவரிகளாக வரும்போது ஒருவகை சலிப்புத்தன்மை ஏற்படுவது வழமைதான்.

அணுவைத்துளைத்து ஏழு கடலைப்புகுத்துவது போல அச்சில் வரும் கவிதைகள் கவித்துவச்செழிப்பும் சொற்கட்டும் இறுக்கமும் கொண்டுவரும். பன்முறை வாசித்து ஒவ்வொரு வாசிப்பின் போதும் புதுப்புது அர்த்தங்களைத் தேடுவதன் ஊடாக எய்தப்படும் நிறைவும் விருப்பும் செவிவழிக் கவிதைகளில் கிடைப்பதில்லை. அதனையே பொன்காந்தன் பின் வருமாறு தெரிவிக்கின்றார்.

" காதுக்குரியதாய் இருந்தது
கண்ணுக்குரியதாய் வரும் போது
நெஞ்சைத் தொடும் விதம் சில வேளை வீழ்ச்சியடையலாம்.
எனினும் இது காற்றின் பதிவாக கைக்கு வருவதில் ஆனந்தம் பெறுகிறது" எனவும்
"வெள்ளிப் பொழுதை கவிதையாக நோக்கினால் சிலவேளை வெள்ளிப் பொழுது அல்லது நீங்கள் தோற்றுப் போகலாம்"

எனவும் பொன்காந்தன் கூறுவது கவனிப்புக்குரியது.

'ஆறு' பற்றி கவி எழுத முனையும் பொன்காந்தன்
"கனகராயன் ஆற்றைச் சுற்றி
எழுப்பப்படாத கல்வெட்டுக்கள்
தமிழனின் குருதியில்
செதுக்கப்பட்டுள்ளன.
சந்ததிக்காக தேசத்திற்காக
சிங்கள தேசத்தின்
கொட்டம்
நொருங்கிப் போன கதை
கனகராயன் ஆற்றைச்சுற்றியும்
அதிகம்"

எனத் தன் ஆளுமையை வெளிப்படுத்துகிறார். எனினும் அவருடைய வழமையான வெளிப்பாடு இதில் இல்லை.

ஆதிலட்சுமி சிவகுமார் "கல்"லை எடுத்து அற்புதமாகப் பொழிந்து தள்ளியுள்ளார். தொகுப்பில் முதன்மை பெறுவது அவருடைய கல்தான்

"கல்லாயிருக்கக்கூட கடவுளை மனிதன் விட்டுவிடவில்லை. கல்லைச் சுமந்துவந்து கட்டடங்கள் எழுப்பினான். கடவுளை உள்வைத்து கதவினைச் சாத்தினான். கல்லான கடவுள் கருப்பக்கிரகத்துச் சிறைப்பட்டது. கல் மூன்றை வைத்து கனல்மூட்டி ஒருபெண் கண்சிவந்து கண்சிவந்து கரிபூசி நின்றாள். வா இங்கே என்று வலிந்தழைத்தான் ஒருவன் கல்லானாலும் கணவன் உனக்கென்று போதித்தான்" எனக் கல்லைச் செதுக்கிச் செல்கிறார் ஆதிலட்சுமி.

"கிட்டிப்புள்ளு அடிக்கும்
போதும்
சொட்டிப்பூ அடிக்கும்
போதும்
தட்டித்தட்டி தமிழ்ச்
சொல்லெடுத்து
பாவியற்றும் பாப்பாக்கள்
பூப்பாவும் இயற்றி
பூவிருந்து தேனெடுக்கும்
தேனீக்கும் பாவியற்றி"
என "பா" பாடும்
"செந்திரு"வும்
"எல்லோரும் வருக
முதலில் கூடி
ஆற இருந்து பேசி
குப்பையென்பது யாதென
முதலில் முடிவெடுப்போம்.
பின்னர் உடனேயே
குப்பைக்கு விடைதரவும்
முடியும்"
என குப்பை'யை முடிக்கிறார் கை.சரவணன்'

"ஓட்டைகள்
பாரபட்சங்களுக்கு
தூபமிடுபவை
மனவெறுப்புகளுக்கு வித்திடுபவை
எதிரணி உருவாக்கங்களுக்கு
அடிக்கல் நாட்டுபவை" எனப் பட்டியல் இடுகிறார். 'ஓட்டைகள்' தலைப்பில் கவிபுனைந்த 'திருநகரூர் ஜெகா"
"ஒரேநாளில்
உயிர்ச்சூழலில் உருவாக்கியிருக்க
முடியாது
என்கையால்
ஆதி மூலத்தால் உருவாக்கப்பட்ட
ஆதாம் ஏவாள் கதை
நல்ல கதையாகவே இருந்து
வருகிறது"
என "ஆதி" பற்றி போராளி ஜெயசீலன் அறிவின் பக்கம் நின்று குறிப்பிடுகிறார்.


( ஒன்றுமில்லை) என்ற தலைப்பில் கவிபுனையும் க.லிங்கராசா
" உருவம் ஒன்றுமில்லாத இந்த
உயிரைக் காவிக்கொண்டு தானே
இத்தனை அச்சம்
இத்தனை பரிதவிப்பு
இத்தனை போராட்டம்"
என்கிறார் கேலியாக!

காற்றின் பதிவான இந்தத் தொகுப்பின் வரிகள் இப்போது கண்ணிற்குப் பதிவாக வந்துள்ளன. காற்றில் வந்தால் என்ன? கண்ணிற்கு வந்தால் என்ன? இவை எங்கள் விடுதலை வேட்கையை, எங்கள் சுதந்திரப் போராட்டத்தை அடியொற்றி எழுந்தவை.

எனவே இக்கவிதைக்கான பெறுமதியும மதிப்பும் அளவிட முடியாதவை. எனவே இத்தகைய வெளியீடுகளை வாழ்த்தி வரவேற்பது எங்களின் கடமையாகும்.

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

# இளைய நாதம்



## எங்கள் ஓணான்

பல்லிகள் ஏறக்குறைய 3200 இனங்கள் உள்ளன. அவற்றை 18 குடும்பங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஓணான்கள் இரண்டு குடும்பத்திற்குள் அடங்குகின்றன. அவையாவன ஒன்று இகுவானா குடும்பம் மற்றது அகமிடே குடும்பம் ஆகும். பூமியின் மேற்குக் கோளத்தில் வெப்ப மண்டலப் பிரதேசத்தில் பெருமளவு காணப்படுபவை இகுவானா குடும்பத்தைச் சேர்ந்த ஓணான்கள். அகமிடே குடும்பத்தைச் சேர்ந்த ஓணான்கள் கிழக்கு கோளத்தில் குறிப்பாக ஆசியப் பிரதேசங்களில் காணப்படுகின்றன.

உருவ அமைப்பிலும் பழக்க வழக்கத்திலும் இது பெரும்பாலும் இகுவானாவை ஒத்திருக்கும். இதன் பல் அமைப்பைக் கொண்டுதான் மற்றவற்றிலிருந்து இதை தனியாகப் பிரித்துள்ளனர். இவற்றுக்கு வெட்டுப் பல், கோரைப் பற்கள், கடவாய்ப்பற்கள் என்றெல்லாம் உள்ளன. இந்த குடும்பத்தைச் சேர்ந்த ஓணான்கள் பெரும்பாலும் பூச்சி உண்ணிகள்.

மரங்கள் செடி கொடிகள் வேலியோரங்கள் என பெரும்பாலும் எல்லா இடங்களிலும் காணப்படும். தலை ஒரு பக்கமாக அழுத்திய உடல் ஆரம்பத்தில் பருமனாகவும் போகப்போக சிறிதாகவும் காணப்படும். இதன் வால் உடலை விட இரண்டு மடங்காகக் காணப்படும். உடல் முழுவதும் செதில்களால் நிறைந்து காணப்படும். இமைகளோடு கூடிய நன்கு வளர்ச்சி பெற்ற கண்கள் இதற்கு உண்டு. அத்தோடு கூர்மையான செவிகளும் காணப்படுகின்றன.



தெற்காசியப் பிரதேசங்களில காணப்படும் இவற்றில் காட்டு ஓணான், பச்சை ஓணான் என்றெல்லாம் உண்டு. கால்களில் நான்கு விரல்கள் காணப்படும். மற்ற இனத்திற்கு ஐந்து விரல்கள் காணப்படுகின்றன. பெரும்பாலும் ஐந்து முதல் எட்டு செ.மீ வரை நீளமானதாக வளரும். பறக்கும் ஓணான், முள் வால் ஓணான் என பல வகை உண்டு.

இதில் முள் வால் ஓணான் வறண்ட பகுதிகளில் காணப்படும் இனமாகும். உருண்டையாக தலையும் தட்டையாக உடல் அமைப்பும் கொண்டது. வாயில் வளையமாக முள் செதில்கள் காணப்படும். 35-40 செ.மீ வளரக் கூடியது. இதன் உடல் பழுப்பு மஞ்சள், அல்லது மண்நிறத்தில் இருக்கும். குளிர் காலத்தில் பெரும்பாலும் நான்கு மாதங்கள் வரை உறக்கத்தில் ஆழ்ந்துவிடும். இதைவிட கொண்டை ஓணான் எனும் ஓர் வகையும் உண்டு. நாம் எமது பிரதேசங்களில் காணும் ஓணான் அகமிடே குடும்பத்தைச் சேர்ந்த ஓணான் ஆகும். இவை முட்டையிட்டே இனப்பெருக்கம் செய்கின்றன.

## சொற்சிலம்பம் - 77

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நே | ப் | ம | தி | லி | ளு | தீ |
| டி | கு | நீ | பா | ம | சீ | ட |
| கா | யா | த் | சோ | னி | ணி | கா |
| லை | அ | பி | ரி | ரோ | ல் | ஜ |
| மே | ட் | தா | ஷ் | ரா | ரி | ந |
| ஸ் | ம் | கா | தா | ய் | யெ | பு |
| பி | லை | ய் | ஓ | கி | ள | க |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 75 இன் விடைகள்

01. சகாரா

02. அவுஸ்திரேலியா

### சொற்சிலம்பம் - 75 இன் பரிசுக்குரியவர்

க.கிசாந்தினி,
மு/தேவிபுரம் அ.த.க. பாடசாலை,
புதுக்குடியிருப்பு.

### சொற்சிலம்பம் - 75 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. பா.துசிக்கா, தரம் 4B, யா/மீசாலை வீரசிங்கம், மகாவித்தியாலயம்.
02. சி.சஜீதன், புளியங்குளம்.
03. பா.பிரதீபன், 95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
04. தி.தேவமைந்தன், 39 மூதூர், திருகோணமலை.
05. வே.சீலன், 143C கந்தபுரம், கிளிநொச்சி.
06. அலைமகள், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
07. அ.நிக்லஸ், சின்னக்கடை, மன்னார்.
08. வீ.சசிகலா, தரணிக்குளம், வவுனியா.

01. அண்மையில் இலங்கைக்கு வந்த இளவரசர் சாள்ஸ் எந்த நாடு.
01) ....................................

02. கியூபா நாட்டின் தலைவரின் பெயர்?
01) ....................................

சொற்சிலம்பம்-77
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ....................................
முகவரி :- ....................................
....................................

## முயற்சிக்கு சாட்சி




எந்தவொரு கலையை கற்பதானாலும் அந்தக் கலையின் பாண்டித்தியம் பெற்ற ஒருவரை குருவாக வைத்தே நாம் பயிற்சிகளைப் பெறுவோம்.

ஆனால், ஒரு மாணவனின் கதை வேறுவிதமாக அமைகிறது. 17 வயதே நிரம்பிய வே.அருள்குமார் எனும் புனிதபூமி சிறுவர் இல்லத்தைச சேர்ந்த மாணவன் எந்தவொரு குருவினதும் உதவியின்றித் தன் சொந்த முயற்சியால் யோகாசனத்தின் மிகக் கடின பயிற்சிகள் சிலவற்றை மிகச் சாதாரணமாகவே செய்து காட்டி பார்ப்பவர்களை வியப்பிலாழ்த்தி வருகிறான்.



கால்கள் இரண்டையும் தூக்கி தோளில் போடுவது ஒற்றைக்காலைத் தூக்கி தோளில் போட்டுக்கொண்டே ஒற்றைக்காலில் எழுந்து நிற்பது. மற்றும் ஒற்றைக் காலை தோளில் போட்டுக் கொண்டே ஒற்றைக் காலால சைக்கிள் ஓடுவது போன்ற வியத்தகு செயல்களைச் செய்துவரும் மேற்படி மாணவன் பத்திற்கு மேற்பட்ட குட்டிச் சீடர்களை வைத்துப்பயிற்சியும் கொடுத்து வருகிறான்.



## ஆமையாரின் இனிப்புச் சுவை

பகுதி-05



# வீடு

## தன்னம்பிக்கை வேண்டும்

ஆழ்ந்த சிந்தனையும் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் வாழ்வின் வெற்றிக்கு அறிகுறியானவை. குறிப்பாக நம்மில் பலபேர் எவ்விடயத்தையும் செய்யும்போது அதனைப்பற்றி ஓர் துளியேனும் நினைப்பதில்லை. சட்டென செய்துவிடுவார்கள். இதனால் சில வேளைகளில் நஷ்டம் கூட ஏற்படுவதுண்டு. எதனை செய்யமுன்னும் அதனை முன்கூட்டியே சிந்தித்துச் செய்யுங்கள். இதன் மூலம் நன்மையினை நாம் அடைந்துகொள்ளமுடியும்.

விடாமுயற்சி இது எல்லோருக்கும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் முக்கியமாய் இருக்கவேண்டிய ஒன்றாகும். நாம் வெறுமனவே ஒவ்வொன்றையும் செய்யவேண்டும் என்ற நினைப்போடு இருந்துவிடக்கூடாது. குறிப்பாக சில பேர் தாம் வளர்ச்சியடைந்த பின்னும் தமக்கென்று ஓர் வேலையைத் தேடாமல் எல்லாம் வீடுதேடிவரும் என முடங்கிக் கிடப்பார்கள். சிலர் இறைவன் எனக்குத் தந்த கொடை இவ்வளவுதான். என்னால் இனி என்ன செய்யமுடியும் என்று இருந்து அமாவாசை வானில் வெண் மதியைத் தேடுவது போலிருப்பார். விடாமுயற்சியாய் இருந்தால் எதனையும் இலகுவாய் அடையமுடியும் தானே.

இயலாமையென்று எவையேனுமில்லை. ஒவ்வொரு விடயத்திலும் விடாமுயற்சியாய் இருந்து வாழ்வில் வெற்றியைத் தேடுங்கள்.

தன்னம்பிக்கை வேண்டும் எமக்கு. இது இல்லையென்றால் வாழ்வில் என்றுமே இருள்தான். நம்மால் எதனையும் செய்துகொள்ள முடியும் என நம்பிக்கையை மனதில் நிறையவே வளர்த்துக் கொள்ளுங்கள். நமக்கு ஓர் தைரியம் கூட வளர்ந்து கொள்ளும், கல்வி என்றாலும் சரி வேலை என்றாலும் சரி வேறு எவை என்றாலும் சரி நம்பிக்கையில்லாமல் செய்யமுடியாது. எமக்கான இலக்கினை




அடைவதற்கு ஆழ்ந்த சிந்தனையும் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் வேண்டும். உங்கள் மனதில் நிறையவே நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள். கூடவே ஏனையவர்களுக்கும் நம்பிக்கையினை ஊட்டுங்கள். இவ்வையத்துள் பிறந்த மானிடனால் இயலாமை என்று ஏதுமில்லை. எனவே ஒளிமயமான வாழ்வினை நோக்கி என்றும் நம்பிக்கையோடு சிறகடிப்போம்.

சி.மதிஸ்

## சந்தோசம் எதுவரை...!

ஒவ்வொரு மனிதனும் எந்தத் துன்பத்திலும் சந்தோஷமாய்த்தான் வாழ நினைக்கிறான். ஆனால் அது முடிவதேயில்லை. ஏன்? எமது எதிர்பார்ப்பில் தான் இந்த சந்தோஷம் உள்ளது. மனோதத்துவ நிபுணர் ருத்ரன் என்பவர் குறிப்பிடுவது போல் "நம் எதிர்பார்ப்புகள் தொடுவானத்தில் இருக்கும் போது அருகே இருக்கும் சுலபமான சந்தோஷங்கள் எம் கண்களுக்குத் தெரிவதில்லை" ஆம் நாம் நிறைய எதிர்பார்க்கும்போது ஏமாற்றம் அடைந்து விட்டால் போதும். ஏமாற்றம் இருக்கத்தான் செய்யும். எதிர்பார்ப்பு இல்லாமல் வாழமுடியுமா? அப்படியென்றால் ஏமாற்றம் ஏற்படாதா? எதிர்ப்புக்கள் என்பது எமது ஆசைகள், தேவைகள் என்று அமைகின்ற போது அங்கு ஒரு ஏமாற்றமும் ஏற்பட வாய்ப்பும் இருக்கும். ஏமாற்றங்கள் ஏற்படுவது சகஜம், நிஜம். ஏமாற்றங்களால் உடைந்து போகாமல் வருவது வரட்டும் என்று வாழப் பழக வேண்டும். ஏமாற்றமடையாமல் இருப்பது என்பது எமது நம்பிக்கை. அவசியம் நம்பிக்கையோடு எதிர்பார்க்கவேண்டும். நம்பிக்கைகள் ஒருபோதும் தோற்காது. சிறியளவேனும் எதிர்பார்க்கிறோம் என்றால் அந்த அளவை விட இரட்டிப்பான நம்பிக்கையும் இருக்க வேண்டும்.

எமது சந்தோஷங்கள் தொலைந்து போகின்றபோதோ. அல்லது நாம் ஏமாற்றமடைகின்றபோதோ யாரிடம் என்றாலும் அதைப் பேசித் தீர்வு காணுகின்றபோது ஓரளவு திருப்தி ஏற்படுகின்றதல்லவா. சந்தோஷம் என்பது இன்னொருவரை நாம் சந்தோஷப்படுத்தும் போது அந்தச் சந்தோஷம் எமக்கும் தானே. இந்தச்சந்தோஷத்திற்காக எதிர்பார்க்கின்றோம் என்றால் ஏமாற்றம் ஏற்படும் போது அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லைத் தான். அளவுக்கதிகமாக எதிர்பார்க்கும் போது நாம் ஏமாற்றப்படும் சந்தர்ப்பத்தில் ஒரு விரக்தி நிலையும் மனச் சோர்வும் ஏற்படுகின்றது. அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றங்களை சுமைகளாகக் கருதுவதால நாம் அதிகம் துன்பப் படுகிறோம். ஓரளவு அவற்றை ஏற்றுக்



கொள்கின்ற சந்தர்ப்பங்களில் எமது மனச் சுமைகள் இலகுவாகத் தான் இருக்கும்.

நண்பர்களே! நெப்போலியன் அழகாகச் சொல்லியுள்ளார். "நம்பிக்கை என்ற சொல்லின் முன்னால் கஷ்டங்கள் எல்லாம் இடிந்த வீட்டின் பகுதிகளைப் போன்று சரிந்து விழுகின்றன'' உண்மை. நாம் நம்பிக்கையோடு எதனையும் எதிர்பார்ப்போம் எனில் ஏமாற்றம் என்பது எமக்கு முன் ஏது சுமை. வாழ்க்கையில் சந்தோஷம் என்பது ஏமாற்றத்தால் தொலைந்து போகாது நம்பிக்கையோடு எதிர்பார்க்க வேண்டியது.

ஈழவிழி

## பரிசளிக்கும் கலை...

எல்லா வயதினரும் மிகவும் விரும்பக்கூடிய பரிசுப் பொருள் புத்தகங்கள். வயதுக்கேற்ற புத்தகங்களைப் பரிசாகக் கொடுப்பது பரிசு பெறுபவர்களுக்கு ஓர் உற்ற நண்பரைப் பெற்றுத் தருவதற்குச் சமம்.

* * *

மூளைக்கு வேலை தரக்கூடிய விளையாட்டுப் பொருட்கள் மற்றும் பொதுஅறிவுப் புத்தகங்கள் பள்ளி மாணவர்களுக்கான சிறந்த பரிசுகளாகும்.

* * *

புதுமனை புகுவிழாவில் அலங்காரப் பொருட்கள் மேசை விரிப்புக்கள், படுக்கை விரிப்பு, அலங்கார மின்விளக்குகள் போன்றவற்றைப் பரிசாக அளிக்கலாம்..

* * *

மிகவும் நெருக்கமான நண்பர்களுக்கே உடைகள் வாசனைப் பொருட்கள் பரிசளிக்கலாம்.

* * *

வார மாதப் பத்திரிகைகளுக்கு ஆண்டு சந்தா கட்டலாம் அது வரவேற்கத்தக்க பரிசு.

* * *

வயதானவர்களுக்கு அவர்கள் பயன்படுத்தக் கூடியவற்றைப் பரிசளியுங்கள். விலையுயர்ந்த அலங்காரப் பொம்மையை விட சாதாரணமான கைக்குட்டைகள் கூட பெரிதும் வரவேற்கப்படும்; பயன்படுத்தப்படும்.

* * *

## மைசூர்ப்பாகு




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| கடலைமா | -1/2சுண்டு |
| சீனி | -1சுண்டு |
| நெய் | -150 கிராம் |
| தண்ணீர் | -1/2 கப் |

செய்முறை:-

- சீனியை மெல்லிய கம்பிப்பாகாகக் காய்ச்சவும்.
- இதில் கடலைமாவைச் சிறிது சிறிதாகத் தூவிக் கட்டிபடாமல் கிளறவும்.
- முழுவதும் நன்கு கலந்த பின் நெய்யை இடையிடையே சேர்த்துக் கிளறவும்.
- சட்டியில் ஒட்டாமல் திரளும் பருவத்தில் இறக்கி நெய்பூசிய தட்டில்
- கொட்டி அழுத்திப் பரவவும்.
- சூடாக இருக்கும் போதே துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.

## பெற்றோரே...! உங்கள் கையில்

பெற்றோர் என்போர் பிள்ளைகளை பெற்றதோடு மட்டும் தம் கடமை முடிவதில்லை பிள்ளைகள் நல்ல நிலையில் வளர்வதற்கு அத்திவாரமாக அமைபவர்கள அம்மா. அப்பா இருவருமே. பிள்ளைகள் வீட்டிலுள்ள அம்மா. அப்பா இருவரும் நற்குணங்களைக் கடைபிடிக்கவேண்டும். அதன் வழியே குழந்தைகள் வளர்வார்கள். சில குடும்பங்களில் இருக்கும் பிள்ளைகளிடம் படிப்புத்திறன் இருக்கும். ஆனால் நற்பழக்கங்கள் குறைவாக இருக்கும். இது மிகவும் கவலைக்குரிய விடயம். பெற்றோர் படிப்போடு நற்குணங்களையும் தம் பிள்ளைகளுக்கு ஊட்டிவிட வேண்டும். பண்போடு கூடிய கல்வியே பயன் தரும். இல்லையேல் கற்ற கல்விக்கும் மரியாதை அற்றுவிடும். எந்நேரமும் பெற்றோர் விழிப்பாக இருந்தால்தான் பிள்ளைகள் சுடர் விளக்காய் பிரகாசமாக ஒளிவீச முடியும். அப்பா. அம்மா ஒற்றுமையாக வாழவேண்டும். இருவரும் பிரச்சினைகள் வரும்போது விட்டுக் கொடுத்து வாழப் பழகவேண்டும். சில பெற்றோர் தங்களுக்குள் கருத்து மோதல் ஏற்படும்போது பிள்ளைகள் மீது தான் தம் கோபத்தை காட்டி அநாகரிகம் அற்ற வார்த்தைப் பிரயோகம் செய்யக் கூடாது. பிள்ளைகளுக்கு தகாத சொற் பிரயோகங்களை தாமே கற்பிக்கின்றனர். கள்ளமில்லாப் பிஞ்சுகள் என்ன செய்யும் நாளை அப்பிள்ளை உங்களை திட்டித் தீர்க்கும் இது தேவைதானா. பணம் இல்லா விட்டாலும் குழந்தைகளை பண்பான அறிவான சொத்துள்ள செல்வங்களாக சிறப்பாக வளர்ப்பது பெற்றோரே உங்கள் கையில்.

சு.சிவாஜினி

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—38**


பெயர்:.............................................

முகவரி:...........................................

.......................................................


**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# ஒரு கலைக்கூடம் நடுவே ஒருநாள்



கலை வடிவங்கள் காலத்தால் அழியாதவை. கலைக் கூடங்களும், கலைஞர்களும் கால மாற்றங்களினால் அடித்துச்செல்லப்பட்டாலும், காத்திரமானவை. இன்றும் எம் கண் முன்னே வலம் வருவதனை உணர முடிகிறது. கலைவடிவங்கள் தூய்மையானவை, புனிதமானவை. கலைக்கூடங்களையும் புனிதம்மிக்க தலமாகப்பேண வேண்டும். கடந்த காலங்களிலும் இவை காத்திரமாகவே கலைப்பணியை ஆற்றியுள்ளன. கலைக்கழகங்கள் கால ஓட்டங்களில் தம்மை இணைத்துக் கொண்டு தம்மாலான பணிகளை தமது நோக்கங்களிற்கு அமைவாக இலக்கு நோக்கி நகர்த்துகின்றன.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தின் கீழ் இயங்கும் இராமநாதன் நுண்கலைக் கழகம் இன்றைக்கு இரண்டு தசாப்தங்களாகக் கவின் கலைப் பயிலகமாக செயற்பட்டுவருகின்றது. இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் இரண்டு துறைத் தலைவர்களின் கீழ் மூன்று பிரதான பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இக்கலைக் கழகம் இன்று கலை பயிலக்கூடிய இடமாக இல்லை. மரம்செடிகள் வளர்ந்து, நீண்ட காலமாக வெட்டி துப்புரவாக்காமையினால் விச ஜந்துகள் கூட இவ்வளாகத்தில் உலா வருவதனைக் காணக்கூடியதாக வுள்ளது.



நாடகத்துறை வளாகம் மிக எழில் கொஞ்சும் வகையில் கட்டட வடிவமைப்புக்களைக் கொண்டது. இவற்றுக்குக் கட்டியம் கூறுவது போல் நடன ஆற்றுகைப் பயிற்சிக்கென அமைக்கப்பட்ட நடேசர் அரங்கு வளாகத்திற்கு நடுவே கம்பீரமாகக் காட்சி தருகிறது.

முட்புதர்கள் நிறைந்த நடனத்துறை வளாகத்தில் புதிய கட்டட நிர்மாண வேலைகளிற்கென கொண்டு வரப்பட்ட பொருட்களே பரவலாகச் சிதறிக்கிடக்கின்றன. தனியே கட்டடங்களையும் கழிப்பறைகளையும் கட்டினால் போதாது. அவற்றை உரியமுறையில் உரியவர்களைக் கொண்டு பராமரிக்க வேண்டும். இது மட்டுமன்றி கட்டடங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள வளாகத்தையும் தூய்மையாகப் பேண பிரத்தியேகமாக ஊழியர்களை நியமிக்கவேண்டும்.

விரும்பியோ விரும்பாமலோ மாணவர்கள் வருகிறார்கள், கூடவே விரிவுரையாளர்களும் வருகின்றார்கள். விரிவுரைகள் இடம்பெறுகின்றன. பருவகால தேர்வுகளும் நடாத்தப்படுகின்றன. தொடர்ந்து அடுத்த வருடம் விரிவுரைகள், பரீட்சை, இத் தொடர்ச்சியின் முடிவில் பட்டமளிப்பு. இவ்வாறான தொடரியல் செயற்பாடுகளினால் மாணவர் வருகையும் வெளியேற்றமுமே முழுமையாகவும் அதே நேரம் நிறைவாகவும் இடம்பெறுகின்றன.

வளாகப் பராமரிப்பு கட்டடக் கலைக்கூட, கழிப்பறைகளின் பராமரிப்புக்கள் அத்திபூத்தது போல் இடம் பெறுகின்றமை மாணவர்கள் மத்தியில் பெரும்விசனத்தை தோற்றுவித்துள்ளது. கடந்த வருட இறுதியில் வளாக முட்புதர்களிற்கு மத்தியில் முட்புதர்கள் பேசுவது போலான சுலோகங்களை அவதானிக்க முடிந்தது. அச்சுலோகங்களில்... "என்னை வெட்டிப் பார்க்கலாமே" எங்களையும் "கொஞ்சம் பாருங்கள்" "எங்களை வெட்டினால் நல்லா இருக்கும்" இவை மாணவமாணவிகளின் உள்ளக்குமுறல்கள். சுலோக அட்டைகள் காற்றில் அடித்துச்செல்லப்பட்டதே தவிர சம்பந்தப்பட்ட வர்களின் காதில் விழவில்லை. கடந்த வாரம் ஆரம்பமாகிய விரிவுரைகளுக்குச் சென்ற மாணவர்கள் சிற்பக் கலைக்கூடத்திற்குச் சென்றவேளை சிற்பங்களுடன் பாம்புகள் உலா வந்தமை மாணவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதில் இருந்தே வளாகத்தின் இன்றைய நிலையை நாம் ஒவ்வொருவரும் சரிவர விளங்கிக்கொள்ளமுடியும்.


வளாகத்தின் எழில் நயத்தை பாதிக்கும் வகையில் வளர்ந்துள்ள புற்களும் முட்செடிகளும் நீண்டச் காலமாக வெட்டி சுத்தம் செய்யப் படாமை தொடர்பாக மாணவர்களிடம் கருத்துக் கேட்டபோது; இவ் வளாகத்தில் பரதநாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய இரண்டு பிரதான பாடங்கள் நான்கு வருட கற்கை நெறியாக இடம்பெற்றுவருகின்றன. நடன அவைக்காற்றுக் கான பயிற்சிக்கூடங்கள் அமைக் கப்பட்டுள்ளன. இவையும் முழுமையாக திருப்தியை ஏற்படுத்துகின்றனவா என்றால் அதுவும் கேள்வியாகவே உள்ளது.

**இரா-வின்**

சித்திரமும் வடிவமைப்பும் துறையைப் பொறுத்தவரையில் எதுவித அடிப்படை கலைக்கூட வசதிகளுமின்றி இயங்கிவருகின்றது. கடந்த ஆறு வருடங்களாக இக் கற்கை நெறியை எதுவித வசதி வாய்ப்புக்களும் இன்றியே கற்று வருகிறோம். இரண்டு தொகுதி மாணவர்கள் கற்கை நெறியை பூர்த்தி செய்து வெளியேறியுள்ளமையும் இவ் இடத்தில் நினைவுகூரவேண்டும்.

ஓவியம், சிற்பத்திற்கென பிரத்தியேகமான கலைக்கூடங்கள் இல்லை. கட்டடங்களின் தாழ்வாரப் பகுதிகளில் வைத்தே அநேகமான மாணவர்கள் சிற்பங்களைச் செய்கின்றார்கள். பூர்த்தியான சிற்பங்களை வைத்துப் பாதுகாப்பதற்குக் கூட போதுமான இடவசதியில்லை. அரசாங்கம் இலவசக்கல்வியை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வந்தாலும் நாம் எமது கற்கை நெறியை ஒரு தனியார் கலைக் கூடத்தில் கற்பதாகவே உணர்கிறோம். ஏனெனில் எமது செய்முறைப்பாடங்களிற்கான உள்ளீடுகள், உதவிப்பொருட்களை நாங்களே வெளியே வேண்டிப்பயன்படுத்தி வருகிறோம்.

இவ்வளாகத்தில் மாணவர்களும், விரிவுரைகளும் இல்லாமல் இருப்பது ஒரு சில நாட்களே..! ஆனால் புற்களும் முட்செடிகளும் வளாகத்தை அலங்கோலமாக அலங்கரித்த நாட்கள் அதிகம் என வளாகத்தின் நிலையை மாணவர்கள் மிகத்தெளிவாக முன்வைத்தனர்.



இவ்வளாகத்தில் இயங்கி வரும் இராமநாதன் பெண்கள் விடுதி மாணவிகளிடம் எம்மை அறிமுகப் படுத்தி கருத்துக்கேட்டபோது; நாம் தெய்வாதீனமாகத் தப்பிக்கொண்டோம் என்றே நினைக்கின்றோம். ஏனென்றால் எமது விடுதிக்கும் பிரதான வீதிக்கும் இடையேயான வளாகத்தின் ஊடாகச் செல்லும் வீதி தார் போடப்பட்டுள்ளது. இதனால் புற்களும், முட்புதர்களும் இவ் வீதியில் இல்லை. இதனால் ஓரளவு இலகுவான போக்குவரத்தினை மேற் கொள்கிறோம்.வீதிக்கு தார் போடப்பட வில்லையென்றால் நாமே இவற்றை வெட்டி அகற்றியே நாளாந்த போக்குவரத்தினை நாம் மேற்கொள்ள வேண்டும். கலைக்கூடங்கள் புனிதமாகவும் தூய்மையாகவும் இருக்க வேண்டும். ஆனால் இங்கு எதிர்மாறாகவே உள்ளது. கலையை வளர்க்கிறோம் இளம் கலைஞர்களைப் பயிற்றிவிக்கின்றோம் என்று ஊடகங்களில் சுயஇலாபம் தேடுபவர்கள் எமது வளாகத்தை பராமரிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள் ளலாம்தானே. தேவன் குடியிருக்கும் திருத்தலங்கள் போல தெய்வீகக் கலைபயிலும் கலைக்கூடங்களும் இருக்கவேண்டும். ஆலயங்கள் எவ் வாறு சுத்தமாகப்பேணப்படுகின்றதோ அதே போல் எமது வளாகத்தையும் பராமரிக்கவேண்டும்.

மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசைத் துறைவளாகம் இராமநாதன் மகளிர் கல்லூரிக்கும் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திற்கும் இடையே இயங்கி வருகின்றது. நடனத் துறை வளாகம் மருதனார்மடம் உரும்பிராய் வீதியில் அமைந்துள்ளது. இவ் நுண் கலைத் துறைக்கென ஒரு இணைப் பாளர், உதவிப்பதிவாளர், துறைத் தலைவர்கள், மாணவ ஒழுக்காற்றுத் தலைவர்கள், அலுவலகப் பதிவாளர்கள், அலுவலக ஊழியர்கள் என பதவி இருந்தபோதிலும் இவ் வளாகம் சுத்தம் செய்யப்படாமைக்கான காரணம் என்ன? ஆளணிப்பற்றாக் குறையா.., அதிகாரிகளின் அசமந்தப் போக்கா...., அல்லது மாணவர்கள் இவற்றை அகற்றி வளாகத்தை சுத்தம் செய்யலாம்தானே என்ற போக்கா.

இனியாவது பொறுப்பான வர்கள் பொறுப்புணர்ந்து செயற்படுவார்களா அல்லது மாணவர்கள் விச ஜந்துக்கள், புற்கள், முட்புதர்கள், கட்டட நிர்மாணிப்புப் பொருட்களுடன் போராடித்தான் தமது கல்வியைத் தொடரவேண்டுமா? யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம் கட்டட வளாகப்பராமரிப்பில் என்றைக்கும் பின்நின்றதில்லை. வர்ணப்பூச்சுக்களும், வடிவமைப்புக்களும், வளாக ஒழுங்கமைப்புக்களும் காலஓட்டத்துடன் ஒட்டி நிற்கின்றன. இப்பல்கலைக்கழகத்தின் தனியொருபீடத்தின் கீழ் இயங்கும் இராமநாதன் நுண்கலைக்கழக வளாகம் மட்டும் இவ்வாறு இருக்கலாமா?

---

# சிந்தையின் வழிகாட்டிகள்



உள்மனம் ஆற்றல் மிகுந்தது. அதனிடம் எங்களை ஒப்புவித்துக்கொண்டால் வாழ்க்கை வசமாகிறது. அதுவே மனிதர்களை எங்களது கட்டுப்படும் மனம் ஐம்புலன்களில் ஒன்றான கண்ணால் காண்பதில்லை. கட்டுப்படும் மனமானது உள்ளுணர்வினாலேயே உய்த்துணர்கிறது. எங்களுடைய தீவிர உணர்ச்சிக்கு(மனஎழுச்சி, கிளர்ச்சி)அதுவே உறைவிடம். எங்களது நினைவாற்றலுக்கு அதுவே சேமிப்புக்கிடங்கு. எங்கள் கட்டுப் படும் மனது,உணர்வு மனஅறிவு எங்களிடம் வெளிப்படாதபோது செயலற்றிருக்கும் போதுதான் மிக உயர்ந்த செயல் பாட்டுத் திறன் கொண்டு விளங்குகிறது.

'உணர்வு மனம்போல் உள்ளுணர்வு மனம் பகுத்தறியக் கூடியதல்ல.' எங்களது உள்ளுணர்வு மனம் எதிரும் புதிருமாக விவாதம் செய்யாது. அதனால் அதற்குத் தவறான யோசனைகள் தெரிவித்தாலும் அது அவற்றை உண்மையாக வாங்கிக்கொள்ளும். அவ் வாறு வாங்கிபிரதிபலனாக ஏற்படக்கூடிய நிலைகள், அனுபவங்கள், நிகழ்வுகளை ஏற்படுத்தும். நாங்கள் தப்பான எண்ணங்களை எங்களது உள்ளுணர்வு மனதுக்குச் செலுத்தி யிருந்தால் அதை நிவர்த்தி செய்ய, நல்ல இணக்கமான உருவாக்கும் சிந்தனைகள் திரும்பித்திரும்பிச் சிந்தித்து வருதலேயாகும். அவ்வாறு மறுபடியும் மறுபடியும் அனுப்பப்பட்ட எண்ணங்களை உள்ளுணர்வு ஒத்துக்கொண்டு உள்வாங்கினால் அது எங்களைப் புதிய மனிதனாக ஆக்கும். நல்ல சிந்தனைகளை வாழ்க்கையை அளிக்கும்.

நாங்கள் அச்சத்தை விளைவிக்கும்,கவலையைத்தரும், கேடு சூழும் சிந்தனைகளைக் கொண்டிருந்தால், எங்களது உள்ளுணர்வு மனதின் எங்கும் வியாபித்திருக்கும் ஆற்றலை உணர்ந்து விடுதலை பெற மகிழ்வுடன் இருக்க பூரண உடல்நலம்கொண்டவராய் இருக்க அதற்குக்கட்டளை இட வேண்டும்.

எங்களது உள்ளுணர்வு மனம் யோசனைக்குக் கட்டுப்பட்டது.அது ஒப்பிட்டுப்பார்க்கும் திறனற்றது. பகுத்தறியமுடியா தது. காரணகாரியத்தை அதற்காகவே அலசாது என்பது எங்களுக்குத் தெரிந்ததே. இந்தச் செயல்களெல்லாம் எங்கள்உணர்வு மனம்

**இனியவள்**

செய்பவை. அது தனக்கு உண்டானபதிவுகளின்படி எதிர்விளைவுகளைக் கொடுக்கக்கூடியது. ஒருசெயலுக்கு மற்றொரு செயலை விடமுன்னுரிமை தர இயலாதது.

மனிதர்கள் ஒரே யோசனைக்கு பல்வேறு விதமாகத்தங்களது மறுமொழியினைத் தெரிவிப்பார்கள் என்பது நடை முறையான உண்மை. இது அவர்கள் நம்பிக்கையினாலும்

(21 ஆம் பக்கம் பார்க்க..)

# பிரிட்டிஷ் மகாராணியை ஏன்... தாலிக்கொடியில சுமப்பான்?

வணக்கம் பிள்ளையள் எல்லாருக்கும் ! ஐயோ எனக்கு நடந்த அவமானத்துக்கு வெளியாலை தலைகாட்டேலாமல் இருக்கிது. சே! எவ்வளவு மரியாதையா குந்தில இருக்கிறனான். இப்ப தலையில துண்டைப் போட்டுக் கொண்டெல்லே இருக்கவேண்டி வந்திட்டுது. என்ரை குஞ்சுகள் ! என்ரை அனுபவத்தை வைச்சுச் சொல்லிறன். தெரிஞ்சோ, தெரியாமலோ இந்தக் காலத்துப் பிள்ளையளிட்டை மட்டும் வாய்குடுத்துப் போடாதயங்கோ ! பேந்து நீங்களும் என்னோடை வந்து இப்பிடித் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு கொள்ளுங்கோவன் ! இதெல்லாம் காலா காலமா எங்கட சமூகத்தில் பண்பாடா, மரபுவிழுமியங்களா இருக்கிற விசயங்கள். இதையெல்லாம் சும்மா தூக்கி அங்காலபோடு, நதியாத்தோடு போடு எண்டு சொன்னாப்போல நடக்கிற காரியங்களே ! எண்டு இதுகளைப்பற்றி வீட்டை வந்து நிண்ட என்ரை ஒரு பேர்த்திக்கு விளக்கிக்கொண்டிருந்தன்.

அது A/L கடைசி வருசம் படிச்சுக்கொண்டிருக்கிது பிள்ளை. நாங்கள் இரண்டு பேரும் அகப்படிற எல்லா விசயத்தைப் பற்றியும் விவாதிக்கிறனாங்கள். என்ன இருந்தாலும் நேற்றுப் பிறந்ததுகளுக்கு நாங்கள் எங்கட 70-80வருச அனுபவத்தை பிள்ளை உனக்கு எல்லாம் இப்பை விளங்காது.இப்பை துள்ளுற வயசில வெறும் உலோகமாகத்தான் உது தெரியும். நாளைக்கொரு கலியாணம்,காட்சி எண்டு வந்திட்டால் சீதனம் செலவுகளெண்டு எவ்வளவு தேவைப்படும் ! அதுதான் எங்கட மூத்த ஆட்கள் தீர்க்க தரிசனத்தோட இப்பிடியொரு சேமிப்பு வழக்கத்தை எங்களுக்குள்ளை அறிமுகப் படுத்தியிருக்கினம். அவசர காலத்திலை நகை,நட்டை நம்பிறது மாதிரி நாலு சனத்தை நம்பலாமோ? குறும்புக்காரப் பேர்த்தி! இப்ப உனக்கெல்லாம் இது விளங்காதடா. அதெல்லாம் நேரகாலம் வரேக்கிள்ளை கூடாதெண்டு தான் சீதனம் வாங்கினம் எண்டு சொல்றீங்கள். உங்கட கதையில ஏதாவது அர்த்தம் இருக்கோண்டு யோசிச்சுப் பார்த்தனீங்களே? சும்மா விநாடிக்கொருக்கால் நகைநட்டுத்தான் பெண்களுக்குக் கௌரவம் எண்டு சொல்றீங்கள். அவளுக்கு உள்ளை இருக்கிற ஆளுமையை வளர்த்து விடுங்கோ ! அது செத்தாப் பிறகும் அவளைக்காப்பாத்தும். அதை விட்டிட்டு சும்மா உலோகச்சாத்துப்படியால அவளைக் கௌரவப் படுத்திறீங்கள் எண்டு கதைக்காங்கோ! சாத்துப்படியளைப் போட்டு ஏதோ பதுமை மாதிரி நீங்கள் அவளை ஒடுக்கிறீயள். ஆயிரம்தான் நீங்கள் கதைச்சாலும் உங்களுக்குள்ளையும் உதவாத உந்தப் போக்கு இருக்கிது. உப்பிடியான போக்காலதான் வில்லன் மாரிட்டை இருந்து ஒரு ஹீரோயினைக் காப்பாற்றுறதாச் சொல்லி இருக்கோணும். சே ! அதுவும் எனக்கு இப்பிடி !அண்டைக்குப் பாருங்கோ ஏ9 இல இருக்கிற ஒரு கடைக்கு போனனான். அங்கை இரண்டடியும் வராத சைஸில ஒரு குட்டி முதலாளி நிண்டார். சின்னவர் நிண்டதில கடையே ஒரு கலகலப்புத்தான் "தம்பி! எத்தினையாம் வகுப்புப் படிக்கிறீயள்?" எண்டு கேட்டன். பாலர் வகுப்பு எண்டு பதில் வந்திச்சு. "ஓ! மிச்சம் பெரிய வகுப்புத்தான் படிக்கிறீயள். நல்லாய் படிக்கோணும்" எண்டு சொல்லிட்போட்டுத்தான் சும்மா வாயை வச்சுக் கொண்டிருக்கேலாமல் "அப்ப உங்கட வகுப்பில ஆர் நல்லாய் படிப்பினம்? " எண்டு கேட்டன். "ரீச்சர் தான்! இதுகூடத் தெரியாதே உங்களுக்கு ? " எண்டான் பாருங்கோ அந்தப் பொடியன். இந்தக் காலத்துச் சின்னனுகளின்ரை மூளையைப் பாருங்கோ ! கதை குடுத்துத் தப்பேலாது. ஆனால் நான் சொல்ல வந்த சோகமான விசயம் வேறையுங்கோ.




அண்டைக்கு வீட்டில மத்தியானச் சாப்பாடு முடிச்சிட்டு பிராக்குப் போக பழைய பத்திரிகையளைப் புரட்டிக் கொண்டிருந்தன். அதிலை ஒரு கட்டுரையைப் பார்க்க எனக்கு பேய்ச்சிரிப்பு வந்திச்சு. தமிழ் மக்கள் தங்களின்ரை சொத்துக்களை சும்மா பவுண் நகையளாக்கிறதால சுய பொருளாதாரக் கட்டுமானத்தின்ர வளர்ச்சி முடக்கப்படுகிதெண்டும், அந்தப் பெறுமதியளை உற்பத்தியளிலை நேரடியாக முதலிட்டாலோ அல்லாட்டி சுதேசிய வங்கியளிலை சேமிப்பாகப் போட்டாலோ ஒருத்தருக்கும் நட்டம் வராமல், நன்மை அடையலாம் எண்டும் ஆரோ ஒருத்தர் எழுதியிருந்தார். அந்தத் தம்பியை நினைக்க எனக்குப்பாவமாய் கிடந்திச்சு. எழுதிறதெண்டால் ஏதாவது நடக்கக்கூடிய விசயமா எழுதிறதை விட்டிட்டு, அதுவும் எங்கட பொம்பிளையளைப் பார்த்து பொன்னகை அணியிற வழக்கத்தைக் குறைக்கச் சொல்லிக் கேட்கிறதுக்கு முன்னால கொஞ்சமாவது யோசிக்கிறேல்லையே? நகையள் எண்டிறது எங்கட பொம்பிளையளுக்குக் கூடவே ஒட்டிப் பிறந்த கவசம் மாதிரியல்லோ! கர்ணன் ஏதோ கொடைவள்ளல், இந்திரன் கேட்டவுடன கழட்டிக் குடுத்திட்டார். ஆனா எங்கட வீடுவழியில வந்து கேட்கோணும், இந்திரனிட்டை இருக்கிற கடைசியாய் வந்த மொடல் நகையளையும் கழட்டிப் போட்டல்லோ விட்டிடுவினம். இந்தக் காலத்தில பாருங்கோ ! வீடுவாசல்கள், சவை சந்தியளில முகங்களில புன்னகையைக் காணிறதுக்கே பொன்னகைதான் தேவையாய் இருக்கெண்டால் விளங்கிக் குடுக்கோணுமெல்லோ எண்டிட்டு, நானும் நேரமெடுத்து விளக்கமாய்க் கதைக்கிறனான். " பிள்ளை ஒரு சில விசயங்களை நாங்கள் அனுசரிச்சு,ஏற்றுக்கொள்ள வேணும். நகையள் போட்டாத்தான் பொம்பிளையளுக்கு ஒரு அம்சமா இருக்கும். ஒவ்வொருதரும் தங்களால முடிஞ்சளவுக்கு நாலு நகை,நட்டைப் போட்டாத்தான் ஒரு கௌரவம்." "அப்பு! மன்னிக்கோணும். நகை போடுறதுதான் பெண்ணுக்கு கௌரவம் எண்டு சொல்லுறீங்கள். அப்ப பெண் எண்டிறவள் இயற்கையாக கௌரவமான நிலையில இல்லை. நகை, நட்டுக்களைப் பூட்டித்தான் கௌரவத்தைக் கொண்டுவரோணும் எண்டிறீங்களோ ? " "சே ! சே ! நான் அப்பிடிச் சொல்லேல்லையம்மா ! நாங்கள் தாய்வழிச்சமுதாயத்தில இருந்து வந்தனாங்கள் எண்டு பெருமையாய்ச் சொல்லக்கூடிய இனம். பெண்ணைக் கடவுளாய் மதிக்கிற மரபுகள் எங்களிட்டைத்தான் இருக்கு. இல்லை சவை சந்தியில நாலுபேர் மதிக்கோணும் எண்டிறதுக்காக நகையள் அவசியம் எண்டிறன் மற்றம்படி நான் ஒண்டும் குறையாய் சொல்லேல்லை". ஆக சவை சந்தியில நாலுபேர் மதிக்கோணும் எண்டிறதுக்காக நாற்பது லட்சம் பேரும் மின்னிறதைத்தவிர வேறெந்தப் பிரயோசனமும் இல்லாததொரு உலோகத்துக்காக தென்னாபிரிக்கா, அமெரிக்கா,அவுஸ்திரேலியா எண்டு வெளிநாடுகளுக்கு கொட்டிக் குடுக்கிறம். ஏதோ பாகிஸ்தானும், இந்தியாவும் ஆளையாள் பார்த்து போட்டிக்கு ஆயுதங்களை வாங்கிக் குவிச்ச மாதிரி, இப்பிடியொரு அநியாயக் குவிப்பு என்னத்துக்கு எங்களுக்கு?". "ஐயோ, ஐயோ ! நீயம்மா சின்னப் மூத்தாக்களின்ரை முன்புத்தியின்ரை ஆழம் புலப்படும்." "நீங்களும் உங்கட முன்புத்தியும் ! பெரீசாய் தாய்வழிச் சமுதாயத்தின்ரை சந்ததியள் எண்டு பெருமை கதைக்கிறீயள். ஒரு பொம்பிளையோட குடும்பம் நடத்தி, பிள்ளைகுட்டியளுக்குச் சோறுபோடவக்கில்லாததால தானே ஆரம்பத்திலேயே காப்புறுதி மாதிரி சீதனத்தை வேண்டிப்பதுக்கிறீயள். உங்களிலை உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் ஏன் சந்தையில மாதிரி பேரம் பேசி உப்பிடி விலை போறீங்கள்! சே,எவ்வளவு மோசமான குணம். மனிசி காசு கொண்டு வரோணும், அதை வாங்கலாம். ஆனால்,அவா வேலைக்குப் போனால் அது ஆம்பிளைக்கு அவமானம். உதென்ன நியாயம் ? " "பிள்ளை ! சும்மா விசயம் விளங்காமல் கதைக்கக் கூடாது. ஆம்பிளையள் ஏன் சீதனம் கேட்கினம் ? தங்களுக்காக இல்லையே ! மனுசிக்காரி நாலு காப்புச் சங்கிலியைப் போட்டுக் கௌரவமா வெளியால திரியோணும் எண்டு தானே. அது மட்டுமில்ல, நகையள் எங்கட கலாச்சாரப் பொக்கிசங்கள், அதுகளை நாங்கள் உதறித்தள்ளீட்டு என்ன வெள்ளைக்காரர் பத்தச் சொல்லிச் சொல்லிறீரோ ? உது வேற ஒண்டுமில்லை வயசுக்கேத்த அறிவுதான் எல்லாருக்கும் இருக்கும். அதுதான் ! " எண்டு நான் சொன்னன். " ஆ...கடவுளே எனக்கு வாற ரென்சனுக்கு, இப்பையே கொலையொண்டைச் செய்திட்டு இப்பையே மேல வந்திடுவன். முன்புத்தி அப்பு! ஒரு பக்கத்தால சீதனத்துக்கு தேவைப்படும் எண்டு நகையளாக சொத்துச் சேக்கிறதை நியாயப்படுத்திறீயள். மற்றப்பக்கத்தால மனைவிமார் நகையள் இல்லாமல் கவலைப்படக் ஹீரோ இரண்டரை மணித்தியாலமாக காடு,மேடெல்லாம் கையைப்பிடிச்சி இழுத்துக்கொண்டு திரியிறதை படம் எண்டு சொல்லிப் பாக்கிறீங்கள். ஒருத்தி தன்னையும், தன்ர சமூகத்தையும் காப்பாற்றி வாழ்ந்தால் கௌரவமான பெண்ணாக மதிக்கலாம். அதை விட்டிட்டு நாய்பட அலைச்சலுக்கு மத்தியிலயும் தவறாமல் நாலு கனவுப்பாட்டுக்கு ஆடிற பதுமைப்பிம்பங்களை மாதிரி இருக்கோணும் எண்டு எதிர்பார்க்காங்கோ! சும்மா ஆசைக்கு லைற்றா நகை ஒண்டைரண்டைப் போடிறது வேற. மற்றது அது பவுண் இல்லாட்டி கௌரவம் காத்தில பறந்திடும் எண்டு நினைக்கிறீங்களே! பாரம்பரியம் பற்றிக் கதைக்கிற உங்களுக்கு நான் சொல்லியே தெரியோணும், முந்தி எல்லா வகையான உலோகங்களிலை இருந்தும் பழந்தமிழர் நகையள் செய்தவையெண்டு. பொறுங்கோ! பாரம்பரிய சின்னங்களைப்பற்றி கதைச்சனீங்கள். தாலிக்கொடியிலை ஏன் பிரிட்டிஷ் மகாராணி வந்தவா எண்டெனக்கு விளங்கேல்லை, ஒருக்கால் சொல்லுங்கோ !" " அது வந்து.. ஆ... அவா பொம்பிளையாக இருந்து கொண்டு ஒரு நாட்டையே எவ்வளவு வடிவா ஆளுறா அதைமாதிரி மனைவிமாரும் வீட்டுக்கு இருக்கோணும் எண்ட அடையாளத்துக்காக தான் .... "அந்தரமாவத்துக்கு எனக்கு வேற ஒரு பொயின்ரும் அகப்படேல்லை, வேர்த்துகொட்டத் தொடங்கிச்சுது."ஓகோ எண்டானாம்! அவா தன்ரை நாட்டை வடிவா ஆளுறதால, அடிமை விலங்குகளிலை இருந்து இன்னும் விடுபடாத எங்களுக்கென்ன பிரயோசனம். வேற ஒன்றுமில்லை, எங்களை அடிமை கொண்டதுக்கான

(20 ஆம் பக்கம் பார்க்க..)



## நெஞ்சு... பொறுக்குதில்லை...!

யாழ்.கோப்பாயில் அந்த நூல்நிலையம் இருக்கின்றது- அப்போது நேரம் மாலை 5.45 மணி. அவ்வீதியில் சுமார் 15 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் புகைபிடித்துக் கொண்டிருந்தான். பெண்களுக்குரிய ஒரு துவிச்சக்கர வண்டியில் ஒரு காலை நிலத்தில் ஊன்றியபடி மறுகாலைத் தொங்க விட்டபடி அவன் புகை (சிகரெட்) பிடித்துக்கொண்டிருந்தான். அவன் அந்த வீதியால் வரும் எவரையுமே மதிக்காது தனது பணியில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருந்தான். ஒரு சிகரெட் முடிந்ததும் மறு சிகரெட்டையும் பற்றவைத்து புகை பிடித்தான்.

அவன் நின்ற சுற்றுச்சூழல் சன நெருக்கடி மிகுந்தது. அந்த இடத்தில் அவனுக்குப் பின் பக்கமாக அந்த நூல் நிலையம் இருந்தது. அந்த நிலையத்தில் வயதானவர்கள் தங்கள் அறிவுப்பசிக்குத் தீனி போட்டுக்கொண்டிருந்தனர். அவர்களின் கரிசனை யாவும் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் ...ாய்வதிலேயே இருந்தது. இந்தச் சிறுவனை- அவ... செயலை யாரும் பொருட்படுத்தியதாக இல்லை. அவனது செயலைக்கண்டு ஆச்சரியமடைவதாகவும் இல்லை. சிறுவன் சிகரெட் பிடிப்பதும் எச்சிலை வீதியிலேயே துப்புவதுமாக இருந்தான். அப்போது ஒரு முதியவர் அவ்வழியே வந்துகொண்டிருந்தார். அவனது எச்சில் துப்பல் அவரது சேட்டில் பட்டுவிட்டது. அந்த முதியவர் ஒருமுறை இவனை திரும்பிப் பார்த்தார். ஆனால், சிறுவனோ அவரது பார்வையை மட்டெடுத்ததாக இல்லை; அந்த முதியவர் இவனுடன் கதைத்து என்ன பயன் என்று நினைத்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார். அந்தப் பெரியவர்கள் அறிவுத் தேடலில் நூல் நிலையத்தில் இருக்க அந்தச் சிறுவனோ தன்னுடைய ஆயுளை குறைக்கும் நடவடிக்கையில் இருந்தான். "இவனுக்கு யாரும் எதுவும் சொல்லித் தெரியவேண்டியதில்லை. ஏனெனில் அவனாய் நினைத்துத் திரிந்தினாலே ஒளிய யாரும் அவனைத் திருத்த முடியாது" என்று அங்கிருந்த ஒரு முதியவர் முணுமுணுத்துக் கொண்டார்.

அறிவுப் பசியில் உள்ளோர் நூல் நிலையத்தில் பசியாற இந்தச் சிறுவன் தனது இளமைப் பசிக்கு தன்னையே தன் அறியாமையினால் உணவாக்கிக்கொண்டிருந்ததைப் பார்க்க நெஞ்சு பொறுக்கவில்லை.

சிவி




ம.பாலச்சந்திரன் ஐயா, சரத்குமாரின் ஐயா, ஹரியின் ஐயா என மூன்று தனி விதங்கள் கலவையாகி 'ஐயா' என்றொரு படம் வந்திருக்கிறது. புதிய தளத்தில் வைத்து தம்முடைய படத்தை உருவாக்கிப் பார்வையாளருக்கு அளித்திருப்பதாக இந்த மூவரும் நினைத்திருக்கலாம். ஆப்படியொரு கற்பனையோடுதான் இவர்கள் இயங்கியிருக்கின்றார்கள். என்பதைப் படத்தைப் பார்க்கும் போது விளங்கிக்கொள்ளலாம்.

விருமாண்டியைப்போல கொஞ்சம் விலகலான புதுமாதிரிச் சூழலில் படத்தைத் தொடங்குகின்றார்கள். ஆனால், விருமாண்டி தனது இறுதிப்பகுதி வரையிலும் தளர்வில்லாமல் நகர்ந்தது படம் வளர வளரத்தான்




அதன் வீரியமும் கூடியது.

ஐயா அப்படியல்ல அதன் தொடக்கக் காட்சியோடு ஐயாவின் சரித்திரம் புதுமையை விட்டு பழைய நாறிய தேசத்துக்குள் வீழ்ந்து விட்டது. எந்தப் புது சேதிகளும் இல்லாமல் எந்தப் புதிய காட்சிகளுமில்லாமல் எந்தச் சுவையும் மறந்து அது இழுபடத் தொடங்கி விடுகிறது. நடிகர்களைக் குவித்து படத்தை பிரமாண்டமாக்க நினைத்த யுத்திகூட பல வீனப்பட்டுவிடுகின்றது.

பிரகாஷ்ராஜ் மைய வில்லனாக வருகிறார். தடுக்கல்களற்ற அடையாளமாக அவர் தொலைந்து போகிறார். எப்போதும் வாயடிக்கும் ஓராளாக பலவீனப்படுத்தப்படுகிறார்அவர். சாதி, அரசியல் என்ற தளங்களில் நகர்த்தப்படும் படம் இரண்டையும் யதாத்தமாகப்பாக்கவில்லை.

. ஓரளவுக்கு பலமான விசயமென்றால், நெப்போலியனும் அப்பாவாக வரும் சரத்குமாரும் கொண்டிருக்கின்ற நடிப்புத்தான். ஐயா, தடுக்க வாரிசு அரசியலை வழிமொழிகிறது. அதை' நியாயப்படுத்தியும் விடுகிறது. மறுபக்கத்தில் அது புரியாமை பற்றிய பிரச்சினைகளிலேயே அக்கறை கொண்டிருப்பதாகப்படுகிறது.

புரியாமை அல்லது புரிந்து கொள்வதில் ஏற்படுகின்ற பிரச்சினைகளின் விளைவுகள் தான் எப்போதும் சமூக நெருக்கடியாக, மனித நெருக்கடியாக, வாழ்க்கை நெருக்கடியாக உருவாகிவிடுகிறது.

விருமாண்டியிலும் புரியாமைதான் பெரிய பிரச்சினைக்கான காரணம். விருமாண்டி நெருப்பைத் தூக்கிக் கொண்டு அதனை உரியவர்களிடம் கொடுத்து பிரச்சினையை சுமுகமாக்கப் போகிறார். அப்போது கொத்தாளத் தேவரின் ஆட்கள் விருமாண்டியைக் காணவில்லை, அவளைக் கடத்திவிட்டார்கள் என்று எழுந்து கத்தியுடன் ஊருக்குள் இறங்கி விடுகிறார்கள். விளைவு இரத்தப்பெருக்கும் சாவும் தான்.

அதே போல ஐயாவிலும் நண்பர்களுக்கிடையில் மூட்டப்படுகின்ற விரோதத்தை தவறாகப் புரிந்துகொள்ளும் ஒரு தரப்பைக் காணலாம்.. இந்த விரோதத்தை மூட்டுவதற்கு பயன்படுத்துகின்ற கருவியாக சாதியைக் கையாள்கிறார்கள்.

இலகுவாக ஒருவரை அல்லது ஒரு தரப்பை ஆத்திரமூட்டுவதற்கு அவருடைய அல்லது அவர்களுடைய சாதியையோ, இன மதத்தையோ குறைத்துக் கூறிவிட்டால் போதும் அது பெரிய பிரச்சினையாகி விடுகிறது. தமது நலன் சார்ந்த நோக்கங்களுக்காக சில சக்திகள் குறை கூறல் உத்தியை எப்போதும் பயன்படுத்துகின்றன. ஐயாவில் வருவதும் அதுதான்.

குறைத்து மதிப்பிடல் அல்லது குறைத்துக் கூறுதல் என்பன நடக்கின்றன என்று கருதி அதைப் பற்றி ஆராயாமல் எதிர்மறையான முடிவுக்கு வரும் சந்தர்ப்பங்கள்தான் அதிகமாக எங்கும் நடக்கின்றன. உண்மையா, பொய்யா, சாத்தியமா, இல்லையா என அவர்கள் ஒன்றையும் பரிச்சித்துப் பார்ப்பதில்லை.

ஐயா இதை உணர்த்த முனைகிறது. இது மாதிரி முன்பும் பல படங்கள், பல கதைகள், பல அனுபவங்கள் பல சம்பவங்கள் என பலவற்றைப் பாத்திருக்கின்றோம், பெற்றிருக்கின்றோம். ஐயா இன்னொரு முறை நமக்கு சொல்ல முனைந்துள்ளது.

தொடர்ந்தும் அதேமாதிரிப் பிரச்சினைகள் இருக்குமென்றால் திரும்பத்திரும்ப அறிவுரைகளும், போதனைகளும் தொடர்ந்து கொண்டே இருக்கும். வேண்டுமானால் சொல்லும் முறையிலும் உத்திகளிலும் வேறுபாடுகள், புதுமைகள் இருக்கலாம். ஐயா தன்னளவில் புதுமை என்று கருதியமைக்கமைவாக புரிந்துகொள்ளாமை குறித்து பேசு கிறது. புரிந்துகொள்வதில் உள்ள பிரச்சினைகள் உறவிலும் சமூக நிலையிலும் ஏற்படுகின்ற தாக்கங்கள், விளைவுகளை விபரிக்கிறது.

1940களில் ஏற்பட்ட பஞ்சம், பட்டினிச் சூழலிலிருந்து தொடங்குகின்ற ஒருவித எதிர்பார்ப்பை ஏற்படுத்துகின்றது. ஆனால், தொடர்ந்துவரும் காட்சிகளும், கதைப்போக்கும் சடுதியாக உருவாகியிருந்த எதிர்பார்ப்பை நிராகரித்து விடுகின்றன.

புதிய எதிர்பார்ப்புத் தளங்களை நோக்கிப் பார்வையாளரை நகர்த்துவதற்குப்பதிலாக பழகிப்போன சூழலுக்குள் நின்றாடவே ஐயாவும் முயன்றிருக்கின்றது. அதனால் சிரமமில்லாமல் பெற்றுவிடுவதே படத்தயாரிப்புத் தரப்பின் நோக்கம்.

இது ஓரளவுக்கு அவர்களுக்கு வெற்றியையும் தரலாம். ஆனால், சினிமா என்ற கலைச்சாதனத்துக்கு இது தோல்வியும், பொருத்தமில்லாததும். பாலசந்தர் தயாரிப்பாளராக இருந்து கொண்டு பிற இயக்குநர்களை வைத்து உருவாக்குகின்ற படங்களில் ஒன்றைக் கவனிக்கலாம். உளரிக உத்தி அல்லது சந்திரம் நிரம்பியிருக்கும் அவற்றில். இதில் பாலச்சந்தர் தப்பிக்கொள்வதற்கு ஒரு வாசல் இருக்கிறது. அவர் நெறியாளராக இல்லை என்பதே அது.

சரத்குமார் முடிந்தளவுக்கு பொறுமையுடன் நடித்துள்ளார் என்பதும் கொஞ்சம் அவதானிக்கத்தக்கது. இசை, கமரா போன்றவை தூக்கலாகவும் அதிகமாக இருக்கிறது.

— ஆரதி

# மன்னார் வளைகுடாவில் மீண்டும் பெற்றோலியம்

மன்னார் வளைகுடாவில் மீண்டும் பெற்றோலியம் என்றது மீளவும் எழுச்சிபெறும் கருத்தாகிவிட்டது.

மன்னார் வளைகுடாவில் பெற்றோலிய ஆய்வு இந்தியாவிடம் படைக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சிறிலங்காவின் பெற்றோலியத் தேவையில் மூன்றில் இரண்டு பங்கை இந்தியா பார்த்துக் கொள்ளவேண்டும் என்று உடன் பாட்டுக்கமைய திருகோணமலை சீனன்குடா பெற்றோலியக் குதங்களை ஒயில் நிறுவனத்துக்கு சிறிலங்கா வழங்கியுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளாக நோர்வே அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் நிறுவனங்கள் மன்னார் வளைகுடாவில் முதற் கட்ட ஆய்வுகளை செய்தன. இவற்றின் ஆய்வுகளில் பெற்றோலியம் இருப்பதற்கான ஆரம்பக் கட்ட சாத்தியப்பாடான பெறுபேறுகள் பெறப்பட்டன. தற்போது இரண்டாம் கட்ட ஆய்வுகள் ரி எஸ் ஜி நொபெக் என்ற நிறுவனம் மேற்செய்து கொண்டது.அது தனது முதல் கட்ட ஆய்வையும் செய்தது.அடுத்த கட்டமாக சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அமெரிக்காவின் ஹுஸ்டன்-டென்வர் நிறுவனத்துடனும், லண்டன் சோல்றலேக் சிற்றி நிறுவனத்துடனும் அடுத்தகட்ட ஆய்வுக்காக உடன்பாட்டை செய்ய முயன்றது.இது சந்திரிகாவின் முதல் ஆட்சிக் காலத்தில் நடந்தது.அதன் பின் ரணிலின் ஆட்சி.

அப்போது இந்தியா முயன்றது. அதனை ரணில் அரசு நிராகரித்தது. இப்போது மீளவும் இந்தியா நுழைகின்றது.

இதன் பின் கடந்த சனவரி மாதம் 13ஆம் திகதி சிறிலங்கா அரசுத்தலைவரின் ஆலோசகர் மனோ தித்தாவலவிடம் தன் முன்மொழிவை கடைசியாக இந்தியத்தூதுவர் கையளித்தார்.

இந்த மன்னார் வளைகுடா கடற்பகுதி மன்னார்த்தீவின் தென்பகுதியில் தமிழர் தாயக கடல் எல்லைக்குள் அதிகமாக உள்ள கொண்டுள்ளது.

இந்தக்கட்டத்தில் சிறிலங்கா பெற்றோலியத்துறையில் இந்தியாவின் ஆதிக்கம் அதிகமாகி வருகின்றது. அதன் முதல்கட்டமாக திருகோணமலை சீனன்குடா குதம் குத்தகை விவகாரம் அமைந்துள்ளது. கடந்த ஆண்டு நவம்பரில் மன்னார் வளைகுடாவில் பெற்றோலிய அகழ்வு இந்தியாவிடம் கையளிக்கப்படுவது தொடர்பான நிலைப்பாடு உருவானது.இது தொடர்பான உடன்பாட்டுக்கான தயார்ப்படுத்தல் ஆரம்பமானது.கடந்த ஆண்டு டிசெம்பரில் சிறிலங்காவுக்கான இந்தியத்தூதுவர் நிருபமா ராவ் மன்னார் வளைகுடாவில் பெற்றோலிய ஆய்வு மற்றும் அகழ்வு தொடர்பாக ONGC VIDESH LTD என்ற இந்திய நிறுவனத்தின் முன்மொழிவு ஒன்றை சிறிலங்கா சக்தி மின்சக்தி அமைச்சர் சுசீல் பிரேம ஜயந்தவிடம் கொடுத்தார்.இந்த நிறுவனத்தின் திட்டப்படி பெற்றோலிய ஆய்வு 7 ஆண்டுகளில் 3 கட்டங்களாக நடைபெறும்.

நிருபமாராவ் தாம் மன்னார் வளைகுடா பெற்றோலிய ஆய்வில் ஈடுபடுவது தொடர்பாக அக்கறையாக உள்ளதாக தெரிவித்துள்ளார்.தமது நிறுவனம் இது தொடர்பாக சிறிலங்கா பெற்றோலிய வள அபிவிருத்திக் குழுவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

தற்போதைய சந்திரிகா அரசுக்கு முன்பதாகவும் ஐக்கியதேசியக்கட்சி ஆட்சியின் போதே இந்தியா இது தொடர்பான அக்கறையை செலுத்தத்தொடங்கி விட்டது. ஆனால் இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக்கட்சி நிராகரித்து விட்டது.

2000ஆம் ஆண்டு இந்த ஆய்வுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதிவழங்க உடன்பாடு செய்திருந்தது.

இதன் பின் T.S.G Nopec என்ற நிறுவனம் பெற்றோலிய ஆய்வுக்கான உடன்பாட்டை சிறிலங்கா பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன்

கடற்பரப்பில் உள்ளது.இதன் ஒரு பகுதி சிறிலங்கா எல்லைக்கடற்பகுதியில் வருகின்றது. இப்போது இந்தியாவின் முன்மொழிவை சந்திரிகா ஏற்பாரானால் அவர் ஆசிய அபிவிருத்தி வங்கி T.S.G Nopec ஆகிய நிறுவனங்களுடனான பெற்றோலிய ஆய்வு தொடர்பான உடன்பாட்டை மீறியதாகிவிடும்.இதேவேளை சந்திரிகா கடந்த ஆண்டு நவம்பரில் ஈரானுக்குச் சென்று மன்னார் வளைகுடாவில் பெற்றோலிய ஆய்வுக்கு ஈரான் உதவிகளை செய்யவேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

இப்போது மன்னார் வளைகுடா பெற்றோலியஆய்வு அகழ்வுக்காக அமெரிக்கா, பிரிட்டன்,சீனா ஆகிய நாடுகள் தமது ஆர்வத்தை காட்டியுள்ளன. இதற்குள் தற்போது ஆய்வில் ஈடுபட்டுள்ள அவுஸ்திரேலியாவும் அதிக அக்கறையை காட்டி நிற்கின்றது.

இப்படியாக மன்னார் வளைகுடா பெற்றோலி யத்துக்கான ஒரு போட்டி மறைமுகமாக தீவிரமாக நடந்து கொண்டுள்ளது.

தமிழர் தாயக எல்லை கடற்பரப்புக்குள் வரும் இந்த மன்னார் வளைகுடாப் பிராந்தியம் இன்று பெற்றோலியம் தொடர்பாக சர்வதேச போட்டிக்குள் அகப்பட்டுள்ளது.

தமிழ் தாயக வளங்களை சிறிலங்கா அரசு சர்வதேச நாடுகள் நிறுவனங்களிற்கு வழங்குவதில் ஆர்வமாக இருக்கின்றது.

இது ஒரு அரசியலின் பாற்பட்ட நிலைப்பாடாகவே இருக்கிறது. இன்றுள்ள உலக அரசியல் ஒழுங்கு பெற்றோலிய வளத்தை மையமாகக்கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது.போர்களும் அதற்காகவே நடக்கின்றன.இந்த வகையில் திருகோணமலை பெற்றோல் குதம் மன்னார் வளைகுடா பெற்றோலிய வளம் என்பவற்றை சிறிலங்கா அரசு அரசியலின் பாற்பட்டே நகர்த்துகின்றது.

பெற்றோலியத்தை மையமாகக் கொண்டே இன்றைய உலக அரசியல் நகர்கின்றது.

பணத்தினை மீட்டுத்தந்த
தமிழீழ காவல் துறையினருக்கு கிளிநொச்சி
மக்கள் வங்கியின் மனப்பூர்வமான

பாராட்டுக்கள்

கடந்த 07.02.2005 அன்று வங்கிக் கிளையில் காசோலை மோசடி மூலம் பெரும் தொகைப் பணத்தை கையாடிய நபரை காவல் பணிமனையில் முறைப்பாடு செய்த மறு தினம் சந்தேக நபரையும் கைது செய்ததுடன், பணத்தினையும் மீட்டுத் தந்த கிளிநொச்சி காவல் பணிமனை உ.ப பரிசோதகர் நா.வதனகுமார் மற்றும் ஏனைய காவல்துறை உத்தியோகத்தர்களுக்கு எனது மனப்பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செ.பாலராசா,
முகாமையாளர்
மக்கள் வங்கி,
கிளிநொச்சி.

(சி11383)



# பொருண்மிய வாசல்

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

எங்கள் தாயக மண்ணின் மூன்றில் இரண்டு பகுதிக்கு அரணா மாத்திரம் அல்ல எங்கள் பொருண்மியத்தின் அரணாகவும் கடல் உள்ளது.

"சுனாமி" யினால் எங்கள் கடல் வளம் சார்ந்த தொழிற்பாடுகள் யாவும் முடங்கிப்போன சூழ்நிலையில் மீளவும் கடற்றொழிலில் சகல செயற்பாடுகளையும் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் உள்ளோம்.

எனினும் எங்களில் சிலர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கடல் வளத்தை குறிப்பாக மீன்களை நீண்ட காலத்தில் அழிக்கும் கைங்கரியத்தில் போய் முடிகின்றன.

குறிப்பாக டைனமற் பாவித்து மீன் பிடிக்கும் செயற்பாடானது கடல் வளத்தை மிக மோசமாகப் பாதிக்கின்றது.

டைனமற் பாவித்து மீன்பிடிப்பது கடலடித்தளமேடை, பவளப் பாறை, போன்றவற்றை நாசமாக்குவதுடன் மீன்களையும், மீன் முட்டைகள்,குஞ்சுகள் போன்றவற்றையும் அழித்துவிடுகின்றன.

இத்தகைய நடவடிக்கைகள் நீண்ட கால நோக்கில் எமது கடல் வளத்தை எப்படிப் பாதிக்கும் என்பதை டைனமற் பாவித்து மீன்பிடிப்போர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சுவர் இருந்தால்தான் "சித்திரம் வரையமுடியும்" என்பது எங்கள் பாரம்பரிய பழமொழிகளில் ஒன்று. கடல்வளத்தை அழித்துக் கொண்டு கடற்றொழிலை நாங்கள் எப்படி மேம்படுத்தப் போகின்றோம்?

டைனமற் பாவித்து அதாவது வெடிக்க வைத்து மீன் பிடிக்கும் போது குறித்த இடத்தில் பத்தாயிரம் கிலோ மீன்கள் கொல்லப்படுமானாலும் கூட சுமார் இரண்டாயிரம் கிலோ மீன்களைக்கூட மீனவர்களால் முழுமையாக கையகப்படுத்த முடியாது என துறைசார் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே டைனமற் வெடிக்க வைத்தல் ஊடாக எத்தனையாயிரம் கிலோ மீன்களை நாசமாக்குகிறோம் என்பதை புரிந்துகொள்ள முடிகிறதா?

எங்கள் தாயக மண்ணின் முதன்மையான வளங்களில் கடல்வளம் சிறப்பான இடத்தை வகிக்கிறது. அதனை உரிய முறையில் பராமரித்து நாங்கள் பலன் பெறவேண்டும்.

# விவசாயிகளைத் திகிலடைய வைக்கும் எரிவந்த நோய்

வன்னிப்பிரதேசத்திலே கனகராயன் குளப் பிரதேசத்தில் உள்ள சகல விவசாய போதனாசிரியர் பிரிவில் உள்ள சகல குளங்களின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொண்ட நெற் செய்கையாளர்கள் எரிவந்த நோயினால் பாதிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

இந்நோய் பயிரின் எப்பகுதியையும் தாக்குகின்றது. எனவே இது தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டும். இது பயிரின் நாற்றுப் பருவம், பூக்கும் பருவத்திலும் ஏற்பட்டு பயிர்கள் முற்றாக அழியும் நிலை ஏற்படுகிறது. கனகராயன் குளப்பிரதேசத்தில் குறிசுட்ட குளத்தின் கீழ் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் அநேகமாக இந்நோயினால் பாதிக்கப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நோயின் காரணியான பங்கஸ் மூலம் இலைக் கணுக்கள் நெற்கதிர் நெல் மணியில் பல்வேறு இடங்களில் பாதிப்புக்கள் ஏற்படலாம். உயர் நாற்று மேடைகளில் வளரும் நாற்றுக்களுக்கு இந்நோய் இலகுவாக ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு.

*நோயின் அறிகுறிகள்*

பங்கசுவினால் பாதிக்கப்பட்ட நெற்பயிரின் பல்வேறு பங்கசுவின் நரை நிறமான புள்ளிகள் காணப்படும். இதன் இரு புற நுனியும் சிறிதாகும். நெற்கதிர்கள் பங்கசுவினால் தாக்கப்படும்போது தாக்கப்பட்ட நெற்கதிர்கள் கருமை நிறமாக அவ்விடத்தில் முறிந்து விழும். இதை கழுத்தழுகல் நோய் என்று செல்லப்படுகிறது. இவ்வாறு கதிர்கள் அழுகும்போது அவற்றில் தோன்றும் மணிகள் நிரம்பாது சப்பியாகக் காணப்படும்.

*இந்நோய் தாக்கத்திற்கான கால நிலை.*

கூடிய சாரீரப்பதன் அடிக்கடி பெய்யும் மழை குளிரான காலநிலை நிலவும் காலத்திலும் காலையிலும் இரவிலும் தாவரத்தின் இலையிலும், தாவரத்தின் வேறு பகுதியிலும் பனித்துளி காணப்படல் என்பன நோய் பரவுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதிகளவு நைதரசன் பசளை (யூரியா) இடல் அதிக அடர்த்தியாக பயிர்கள் இருக்கத்தக்கவாறு விதைத்தல் என்பனவும் நோய் இலகுவாக ஏற்பட ஏதுவாகின்றது.

*நோய் பரவுதல்*

காற்று, நீர் என்பவற்றால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களின் பாகங்கள் ஆகியவற்றின் மூலம் நோய்க் காரணியாக பங்கசு பரவுவதால் நோய்கள் தோன்றுகின்றன.

*கட்டுப்படுத்தல்*

நோயைக் கட்டுப்படுத்த இலகுவான வழி எரிவந்த நோயை எதிர்த்து வளரக்கூடிய நெல்லினத்தைப் பயிரிடுதல் சிறந்த வழிமுறையாகும். நோய் அதிகளவு காணப்படும் பிரதேசங்களில் உயர் நாற்று மேடைக்குப் பதிலாக தாழ் நாற்று மேடைகளை ஆயத்தம் செய்வது முக்கியமான தொன்றாகும். அதே போல் பயிர்களுக்கு அதிகளவு யூரியாப் பிரயோகம் மற்றது அடர்த்தியாக விதைப்பதும் பொருத்தமானதல்ல.

நோயின் மூலம் பெருமளவு விளைச்சல் குறையும் எனக் கருதும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே நோயைக் கட்டுப்படுத்த விவசாய இலாகாவினால் சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினிகளைத் தெளித்து இந் நோயைக் கட்டுப்படுத்தலாம். மேலதிக விபரங்களுக்கு உங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியரைச் சந்தித்து ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.

நெல் வயல்களில் எரிவந்த நோய் காணப்பட்டால் ப்ங்கசு நாசினிகளைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். பென்றே கினோசான், கசுமின், பொலிகன், பியுஜியோன் போன்ற பங்கசு நாசினியில் ஏதாவது ஒன்றைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

இதற்கு மாறாக வி.பி.எம் மருந்து பாவித்தலை உடன் தவிர்க்கவும். இந் நோய் தொடர்பாக சந்தேகம் இருப்பின் அருகில் உள்ள விவசாயப் போதனாசிரியரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தெரிவித்துள்ளார். இதேவேளை இந்நோய்த் தாக்கம் தொடர்பான மேலதிக விபரங்களை அந்தந்தப் பகுதி போதனாசிரியர்களை அல்லது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதேச இணைப்பாளர்களைத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபிமான விசுவாசம் மட்டும்தான் உது ! ஏன் அரியாத்தையைப் பொறிச்சிருக்கலாம் தானே! உந்தளவும் ஏன் ? கணவன்-மனைவியின்ரை முகங்கள் என்ன அவ்வளவு மோசமே!'' "பிள்ளை, சும்மா பழசுகள் மாதிரி கதைக்கக்கூடாது. 21 ஆம் நூற்றாண்டில கொஞ்சமாவது நாங்கள் உலக ஓட்டத்தை அனுசரிச்சுப் போகோணும். நவீன நாகரிகங்களை உள்வாங்கிக்கொண்டால் தான், நாங்களும் முன்னேறலாம்'' "சரி ! நானும் ஒத்துக்கொள்ளுறன். ஆனால் அதை ஏன் எங்களுக்குப் பயன்தராத 'குறிப்பிட்ட சில ' விசயங்களிலை மட்டும் பார்க்கிறீங்கள். எங்களை ஜீன்ஸ் போட விடலாம் தானே!" அடடடா ! இப்பதான் எனக்கு விசயம் விளங்கிது. இவ்வளவு துள்ளலுக்கும் காரணம் உதுதானே? அதெல்லாம் எங்கட வழக்கங்களுக்குச் சரிப்பட்டு வராது. ஒவ்வொண்டுக்குமெண்டு எங்கட சமூகத்தில ஒரு சில வரையறையள் இருக்கிது. '' ''அதெப்படி ஆம்பிளையள் போடலாம். நாங்கள் போடக் கூடாதோ?' " ஐயோ, உனக்கு என்னண்டு விளங்கப்படுத்திறதெண்டு எனக்கு தெரியேலடா'' "ஐயோ ! அப்பு, நான் அவ்வளவு மக்கில்லை. உங்கட பேர்த்தியல்லே. யோசிச்சுப்பாருங்கோ கொஞ்சம் ! பாவாடை சட்டையள் கூடாதெண்டு நான் சொல்லேல்லை. ஆனால், அன்றாட வாழ்க்கையில நாங்கள் முகங்கொடுக்கிற சிக்கல்களையும் யோசிச்சுப்பார்க்கோணுமெல்லோ ! ஒற்றைக்கையால சைக்கிள் கைப்பிடியையும் மற்றக்கையால சட்டையையும் பிடிச்சிக்கொண்டு ஏதோ சேர்க்கஸ் மாதிரியெல்லே சைக்கிள் ஓடவேண்டிக்கிடக்கிது. கொஞ்சக் காலத்துக்கு முன்னால யாழ்ப்பாணத்தில ஒரு அக்கா பாவாடை சில்லுக்குள்ளை சிக்குப்பட்டு நடு வீதியில விழுந்திட்டாவாம். ஆம்பிளையள் கனபேர் பார்க்கக் கூடியதாய் சரியாக் கஷ்ரப்பட்டுத் தானாம் களட்டியெடுக்க முடிஞ்சிதாம். வீட்டுக்குப்போன அவா அவமானத்தால மனம் உடைஞ்சு போய் தற்கொலை செய்திட்டா (உண்மைச்செய்தி). நான் இப்ப இறுக்க இறுக்க இங்லண்ட் ஸ்ரைல் கேட்கேல்லை. ஆனால், இந்த விசயத்திலை கொஞ்சம் எங்கட பார்வையள் மாறோணும் எண்டு மட்டும்தான் சொல்லிறன். எங்கட அடையாளங்களை ஒருக்காலும் நாங்கள் இழக்கக்கூடாது. அதேநேரம் எங்கட வளர்ச்சிக்கு துணைபோற ஆரோக்கியமான அடையாளங்கள் எவை எண்டிறது குறிச்சும் நாங்கள் விழிப்பாய் இருக்கோணும். குரங்காய் இருந்த எங்கட முன்னோருக்கு வால் கூர்ப்பு விதிகளுக்கு அவசியமா இல்லாமல் போனதாலதான், பரிணாம வளர்ச்சியில எங்களுக்கு இப்ப வாலில்லை. அதை ஏற்றுக் கொள்ளாமல் வால் எங்கட பாரம்பரிய அடையாளம் எண்டு நீங்கள் சொல்லலாமோ?''

என்ரை இருண்ட புத்திக்கு கொஞ்சம் கொஞ்சமாய் வெளிச்சம் வரத்தொடங்கிச்சிது. சின்னவள் எண்டாலும் அவள் சொல்லிறதிலை கன நியாயம் இருக்கிது. நான் பழைய பாய் மாதிரி விசர்ப்புராணம் பாடி நல்லா வாங்கிக் கட்டிட்டன். என்ரை வயசுக்குப் போயும் போயும் ஒரு சின்னப் பொடிச சிட்டை அவமானப்பட்டிட்டன் ! சரி ! சரி ! என்ன இருந்தாலும் அவள் ஆர் ? என்ரை பேர்த்தியெல்லோ ! அவள் நியாயத்தைக் கதைச்சு வெண்டிட்டாள் எண்டால் பெருமை எனக்கும் தானே !"உன்னை நினைக்க உண்மையிலையே எனக்குப் பெருமையாக் கிடக்கிது. அது சரி ! நான் பிறந்த நாளுக்குத் தந்த 2 பவுண் சங்கிலி எங்கை? கழுத்தில காணேல்லை!''

"அதுவோ ...ஹீ ..... காசா மாத்தி தமிழீழ வைப்பகத்தில சேமிப்புக் கணக்கில போட்டிட்டன். 11வீத வட்டி,ஒவ்வொரு வருசமும் முடிய, முதலோட சேர்த்து புது முதலாக வைப்பில போடப்படும். எனக்கும் லாபம். எங்கள் எல்லோருக்கும் லாபம். உங்களுக்கு மட்டும்தான் நட்டம். அடுத்தமுறை காசாகவே தாங்கோ, இல்லாட்டி வீண் கழிவுகள்" சொல்லிக்கொண்டே ஒரு கிருமிச் சிரிப்பு சிரிச்சாள். அந்தச்சிரிப்பு மனசுக்கு நிறை வைத் தந்திச்சு. அப்படியான சிரிப்பு எல்லாருக்கும் கிடைக் கோணும் எண்டு அவள் நினைக்கிறதிலையும் நியாயம் இருக்கத் தான்செய்யிது. நான் விட்ட பிழையளை ஒவ்வொண்டா யோசிச்சுப்பார்த்தன். நீங்களும் யோசியுங்கோ ! பிரயோசனம் எல்லாருக்கும் எண்டால், ஏன் தயங்கிக்கொண்டு பின்னுக்கு நிக்கோணும் !

14-03-2005 திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது

**திருமறைக்கலாமன்றம்**

தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகை

**குருதி கழுவிய குவலயம்**

மன்ற அரங்கில்

*(திருப்பாடுகளின் காட்சி)*

*14,15,17,18, 19,20 மார்ச் 2005*

*(திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)*

*(6 நாட்களுக்கு)*

மாலை 7.00மணி

பார்வையாளர்களுக்கு:

* இறுதி நாள் வரை காத்திருக்காமல் ஆரம்ப நாட்களில் பார்வையிட்டு இறுதி நேர நெருக்கடி நிலைகளைத் தவிர்க்க உதவுமாறு வேண்டுகின்றோம்.
* தூர இடங்களில் இருந்து வரும் பார்வையாளர்கள் முன்னதாகவே உங்கள் ஆசனங்களைப் பதிவு செய்யுங்கள். ஆசனங்களுக்கான பதிவுகளை இன்று முதல் மேற்கொள்ளலாம்.
* முதல்நாள் மட்டும் இலவசம், ஏனைய நாட்களுக்கு அன்பளிப்பு 30.00
* முல்லைத்தீவு அளம்பில் திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'பலிக்களம்' திருப்பாடுகளின் காட்சி இன்று 11ஆம் திகதி அளம்பில் புனித அந்தோனியார் ஆலய முன்றலிலும் 13ஆம் திகதி இரணைப்பாலை முற்றவெளி மைதானத்திலும் மாலை 7.30 மணிக்கு மேடையேறுகின்றது என்பதனையும் அறியத்தருகின்றோம்.
* நீங்கள் நீண்டகாலமாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த கல்வாரி இராகங்கள்-4 'பலிக்களம்' திருப்பாடுகளின் காட்சிப் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவையும் இப்பொழுது பெற்றுக்கொள்ளலாம்.

**கல்வாரி நோக்கிய இறைமகனின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

238, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி.021-222 2393

*திருமறைக் கலாமன்றம்.*

(சி-11385)

குமுதினி குறிகாட்டுவான் இறங்கு துறைக்குக் கொண்டு வரப்பட்டு அதற்குள் இருந்து இறந்தோரையும் காயமடைந்தோரையும் வெளியேற்றும் பணி விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டது. அப்போதைய தீவகப் பொறுப்பாளர் உடனடியாக களத்தில் இறங்கிச் செயற்பட்டார். காயமடைந்தோர் முதலுதவிக்காக புங்குடுதீவு மருத்துவ மனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு முதலுதவியின் பின் யாழ் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.இறந்த 33 பேரின் உடல்கள் புங்குடுதீவு மருத்துவமனையில் வைக்கப்பட்டன.

புங்குடுதீவு மக்கள் அங்கு திரண்டனர். சிங்களப்படைகளின் கொடுமை கண்டு கொதிப்புற்றனர்.ஆயினும் அப்போது என்ன செய்யமுடியும். ஆனால் அம் மக்கள் உடனடியாகவே பணம் திரட்டிக் கொடுத்தனர். அந்தப் பணத்தைக் கொண்டு உடனடியாக தீவகப் பொறுப்பாளர் பாய்களை கொள்வனவு செய்து இறந்தோர் உடல்களை அவற்றைக் கொண்டு கட்டி யாழ் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.அடுத்த கட்டமாக இறந்தோரின் இறுதிக்கிரியைக்காக புங்குடுதீவு மக்களின் பணத்தைக் கொண்டு சவப்பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டன. மரண விசாரணையின் பின்னர் மருத்துவ மனையிலும் இறந்தவர்களுடன் 36 பேரின் உடல்கள் அவரவர் இடங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டன.

நெடுந்தீவுக்குக் கொண்டுசெல்லப்பட வேண்டிய உடல்களை கொண்ட சவப் பெட்டிகள் புங்குடுதீவு மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

அங்கு இனவாதத்தில் பலியான மக்களின் உடல்களின்

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 37

சாட்சியாக வணக்கக் கூட்டம் நடந்தது.

இதற்கிடையில் இந்த நிகழ்வில் நடந்த ஒரு இலக்கிய அழியாப் பதிவை பற்றியும் சொல்ல வேண்டும்.

குமுதினியில் கொலையுண்ட மக்களின் மக்களிற்காக புங்குடுதீவு மக்கள் திரட்டிக் கொடுத்த பணத்தில் மிகுதியான பணத்தில் தமிழர் வரலாறில் முக்கியமான ஒரு பதிவு நடந்தது.அதுவே தமிழ் வரலாறில் ஒரு படுகொலைக்கான அழியாத இலக்கியப் பதிவாகவும் அமைந்தது. எஞ்சிய பணத்தில் படுகொலைக்கான நினைவுப் பிரசுரம் ஒன்று அச்சிடப்பட்டது.அதில் தமிழின் முக்கிய கவிஞர்களான சு.வில்வரத்தினம்,மு.பொன்னம்பலம் ஆகியோரின் கவிதைகளும் நிலாந்தனின் முதல் கவிதையும் பிரசுரமானது. சு.வில்வரத்தினத்தின் கவிதை காலன் கடைவிரிக்கிறான் என்ற தலைப்பில் அமைந்தது என்ற தகவல் மட்டும் இருக்கிறது.ஆனால் கவிதையை காணக் கிடைக்கவில்லை. மு.போ வின் கவிதையும் அப்படியே. ஆனால் நிலாந்தனின் கடலம்மா கவிதைதான் அழியாப் பதிவாக இலக்கிய சாட்சியமாக இன்றும் இருக்கிறது. காலத்தால் அழியாத பதிவு அது.

கடல் என்ற சடப்பொருளை கடலம்மா என விழித்து கடலுக்கு உயிர்ப்பைக் கொடுத்த கவிதை. கடலை தமிழருடன் உயிர்ப்பாக பிணைத்த கவிதை.

கடலை கடலம்மாவாக கருத்துருவாக்கிய முதல் கவிதையாகவும் அதுதான் அமையும் என கருதலாம்.

அந்த கடலம்மா என்று கடலுக்கு உயிர் கொடுத்த அந்தக் கவிதை தமிழர் தாயக இலக்கியப்பரப்பில் ஒரு முக்கிய மைல்கல். கடலுடன் குமுதினி என்ற சடப்பொருளான படகுக்கும் உயிர் கொடுத்த கவிதை. இன்றும் குமுதினி தமிழ்மக்களின் உயிர்களின் இருப்பிடமாக அதுவாக இல்லாமல் அவளாகவே இருக்கிறது. இதனையும் நிலாந்தனின் கவிதை சாதித்துக் கொடுத்திருக்கிறது.

*கடலம்மா...... நீயே சொல்*
*குமுதினி ஏன் பிந்தி வந்தாள்?*
*எம்மவரின் அவலங்களைச்*
*சடலங்களாய்ச் சுமந்துகொண்டு*
*'குமுதினி' குருதி வடிய வந்தாள்.*
*கடலம்மா கண்டாயோ*
*கார்த்திகேசு என்னவானான்?*
*எந்தக்கரையில் உடலூதிக்கிடந்தானோ*
*ஓ....! சோழகக் காற்றே நீ*
*வழம்மாறி வீசியிருந்தால்....*
*'குமுதினி' வரமாட்டாள்*
*என்று நெடுந்தீவுக்குச்*
*சொல்லியிருப்பாய்.*
*பாவம்*
*மரணங்களின் செய்தி கூடக்*
*கிட்டாத தொலைவில்*
*ஏக்கங்களையும் துக்கங்களையும்*
*கடலலைகளிடம் சொல்லிவிட்டுக்*
*காத்திருக்கும் மக்கள்.......*
*கடலம்மா நீ மலடி*
*ஏனந்தத் தீவுகளை*
*அநாதரவாய்த் தனியே விட்டாய்*
*கடலம்மா*
*உன் நீள் பரப்பில்*
*அநாதரவாய் மரணித்த எம்மவரை*
*புதிய கல்லறைகளை எழுப்பி*
*'அநாதை கல்லறைகள்'*
*என நினைவூட்டு ஆனால்,*
*இனிவருங் கல்லறைகள்*
*வெறும் இழப்புகளின்*
*நினைவல்ல எமது*
*இலட்சியங்களின் நினைவாகட்டும்.*

இது நிலாந்தனின் கவிதை. இதை மையமாக் கொண்டு 1990களின் பிற்பகுதியில் குமுதினியின் படுகொலை அவலத்தை சுவிஸர்லாந்தில் அன்ரன்பொன் ராஜாவின் நெறியாள்கையில் 'கடலம்மா' என்ற நாடகத்தை அரங்கேற்றினர். அது அங்குள்ள மற்றைய மொழிக்காரரின் கவனத்தை இழுத்தது...

துருவன்

# தொல்லியற் காலங்கள்





எமது வரலாறை- நாம் இந்த மண்ணில் முது மனிதர் என்பதை கூறும் ஆய்வுகளின் விபரங்களடங்கியதான பகுதிகளை அறிமுகம் செய்யவுள்ளோம். ஆதார பூர்வ வரலாற்றுத்தரவுகளை சான்றுகளை நாம் தருவோம். வரலாறு தொல்லியல் என்ற-துறைவழி அறிவியல் மூலம் நிரூபிக்கப்படுவது. அல்லது தர்க்கரீதியான முடிவுகளை வெளியிடுவது இது அறிவியலை பெரும்பான்மையாகக் கொண்டது. தொல்லியல் இந்தத் தொல்லியலே நம்வரலாறை நிரூபிக்க உதவப்போவதாகும்.

எமது தேச தொல்லியலாய்வை பார்க்குமுன் உலகத் தொல்லியல் சொற்கள் காலங்களை இங்கு அறிமுகப்படுத்துகிறோம். நவீன மனிதனுக்கான காலம் 40 ஆயிரம் ஆண்டுகளாகும். மனிதனின் காலம் அவன் பயன்படுத்திய கருவிகளால் வகுக்கப்பட்டுள்ளது. அவை கற்காலம், செம்பு வெண்கலக்காலம் இரும்புக்காலம் என்பவையாகும்.

கற்காலம் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. வரலாற்றுக்கு முந்திய காலம். வரலாற்று உதய காலம். வரலாற்றுக் காலம் என மற்றொரு பகுப்பும் உள்ளது.

வரலாற்றை கணிப்பிட உதவும் அறிவியல் நுட்பங்களைப் பார்ப்போம். பொட்டாசியம்- ஆகன் காலக்கணிப்பு; மூலகங்களின் கதிரியக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அது உள்ள இயற்கைப் பொருளின் காலத்தை கணிப்பிடலாம்.

பாறைக்கற்கள் சார்ந்த சான்றுகளில்- 1 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலக்கணிப்பை இதன் மூலம் செய்யலாம். பொட்டாசியம் 40 மூலகத்தின் அரைவாழ்வு என்ற கதிரியக்க காலக் கணிப்பீடு, கதிரியக்க காலக்கணிப்பீடு என்பவற்றை பொட்டாசியம் ஆகன் காலக் கணிப்பீடு செய்யும்.



**காபன்- 14 காலக்கணிப்பீடு**

காபன்-14 மூலகம் கதிர் வீசத்தக்கது. சகல உயிரின வகைகளும் காபன் 14 ஐத்தன்னகத்தே கொண்டவை. உறைவு மூலமும்- அவற்றின் காலத்தை கணிப்பிட முடியும். 80 ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான உயிரிச்சுவடுகளை காபன் 14 காலக்கணிப்பின் மூலம் கணிப்பிட முடியும். 1948-49 ஆண்டுகளில் வில்லியட்லிப்பி இதனை விருத்தி செய்தார். காபன் 14 காலக்கணிப்பு கருவிக்கு **'கைகர்எண்ணி'** என்ற பெயர் உண்டு.

**வெப்ப ஒளிர்வு காலக் கணிப்பீடு முறை:-** பண்டைக்கால மட்பாண்டங்கள், செங்கற்கள் ஆகிய சுட்டமண் பொருட்களை காலக்கணிப்பீடு செய்யும் முறை இது. மட்பாண்டங்களில் உள்ள யுரோனியம், குவாட்ஸ் மண்துகள்களில் சக்தி கொள்ளளவு என்பவற்றைக் கொண்டு இம் முறை காலக்கணிப்பீடு செய்யப்படுகின்றது.. **டென்டா கால ஒழுங்கு கணிப்பீடு** இது மரங்களின் வளையங்களை கொண்டு காலத்தை கணிப்பிடும் முறையாகும். மரத்தின் வளையங்களின் ஒழுங்கு அகலம் என்பன ஆண்டாண்டு மாறும். இதனைக் கொண்டு பல ஆயிரக்கணக்கான ஆண்டின் முன்பதான மரங்களின் காலத்தை கணிப்பிடலாம்.

**அந்தரோபோலொஜி** இல மற்றொரு தொல்லியல் கணிப்பீடுக்கு உதவும் துறையாகும். இது மனிதனின் சமூக, பண்பாடு, உயிரியல், மொழியியல் விடயங்களின் ஊடாக தர்க்கரீதியாகக் கணிப்பீடு செய்தல் துறையாகும்.

தொல்லியலுக்கு உதவும் அடுத்த துறை சூழலியல் சூழல்- அதன் இயற்கை, தர்க்கவியல் மூலம், கணிப்பிடலை செய்ய இத்துறை உதவும். இத்தகைய அறிவியல் ஆய்வுகள் மூலம் தொல்லியல் வரலாற்றை நிரூபிக்கின்றது. எமது வரலாற்றை நிறுவ இவை உதவியிருக்கின்றன. உதவுகின்றன. உதவப் போகின்றன.

பலியோலிதின் என்ற பழைய காற்காலம். மெஸோலிதிக் என்ற இடைக்கற்காலம். நியோலிதிக் என்ற புதிய கற்காலம் என்பவை அவை. இதன்பின் செம்பு-வெண்கலக்காலம்- கடைசியாக இரும்புக் காலம் என்பன மனித வரலாற்றில் வருகின்றன. தவிர காபன் 14 கதிர்வீச்சின் மூலம் தன்னளவில் குறைகின்றது. காபன் 14 அளவு கதிர் வீசல்மூலம் நைதரசனாக மாறுகின்றது. C 14 அளவு அரைவாசியாகக் குறைய 5568 ஆண்டுகள் எடுக்கும். அனைத்து உயிரினச் சுவடுகளிலும் உள்ள காபன் 14 மூலமும்-சடப்பொருட்களில் தங்கிய இரத்த

---

(17 ஆம் பக்கத்தொடர்ச்சி..)

உள்ளுணர்வு மனதின் நிலையினாலும் விளைவது. 'யோசனை' என்பதற்கு அகராதியில் ஒரு செயல் அல்லது நிகழ்வுபற்றிய பிரேரணை. எண்ணத்தை உருவாக்கும் செயல், சிறுகருத்து என்றிருக்கும். விளைவுகளைக்கொண்டு வரும் ஓர் எண்ணத்தை எங்கள் உணர்வு மனத்தை எதிர்த்து உள்ளுணர்வு மனதில் செலுத்த முடியாது என்பதே தெளிவு. வேறு வழியில் சொல்லவேண்டுமெனில் எந்தக் கருத்தையும் எங்கள் உணர்வு நிராகரிக்கும் திறன் உடையது.

நம்மில் ஒவ்வொருவருக்கும் அவருக்கே உரிய அச்சங்கள், நம்பிக்கைகள் கருத்துக்கள் உண்டு. நமக்குள் இருக்கும் அனுமானங்கள் நமது வாழ்வைக் கட்டுப்படுத்தி வழி நடத்துகிறது. ஒரு யோசனை என்பது அதனிடத்திலேயே ஒரு சக்தியும் இல்லாதது. அது மனதினால் ஒத்துக்கொள்ளப்பட்டு உள்வாங்கினால். சக்தி பெறுகிறது. இதனால் எங்களது உள்ளுணர்வுச் சக்திகள் ஒரு குறிப்பிட்ட குறுகிய பாதையில் வழிந்தோட முடிகிறது. அந்த குறிப்பிட்ட வழி என்பது எங்களது யோசனையின் தன்மையைப் பொறுத்தது. நாங்கள் எங்கள் உள்ளுணர்வு மனதுக்கு யோசனை கொடுக்கும் போது சரியானதைத்தான் தருகின்றோமா? என்பதை உறுதிப் படுத்த வேண்டும். அந்த யோசனை குணப் படுத்தக்கூடியதாகவும், ஆசீவதிப்பதாயும், உயரச் செய்வதாயும் இருக்கவேண்டும்.

தனக்கே யோசனையைப் பல நற்செயல்கள் புரிவதற்கு, பயம் போக்குவதற்கு, எதிர்மறையான நிலைகள் மாறுவதற்கு உபயோகப்படுத்தலாம். நாங்கள் எங்களது உணர்வு மனதிற்கு இடர்பாடுகளையும், தடைகளையும், தாமதத்தையும் உண்டாக்கினால், எங்கள் உள்ளுணர்வு மனதில் உறையும் அறிவாற்றலையும், புத்திக்கூர்மையையும் மறுப்பது போன்றதாகும். இதனால் மன உணர்ச்சி நெருக்கடி உண்டாகிறது. அதன் விளைவாக நோய்கள் வருகின்றன. புத்தி பேதலிக்கும் தன்மை கூட ஏற்பட்டு விடுகிறது.

எங்களது விருப்பம் நிறைவேற வெற்றிகொள்ள கீழ்க்கண்டதை உரக்கப் பலமுறை உண்மையாகச் சொல்லி உறுதி செய்ய வேண்டும். "இந்த அளவற்ற அறிவுத்திறன், எனக்கு விருப்பத்தைக்கொடுத்து முன்னின்று அழைத்துச் செல்வது வழிகாட்டுவது, எனது விருப்பத்தை நிறைவு செய்யக்கூடிய மிக நல்ல திட்டம். எனது உள்ளுணர்வு மனம் இப்போது மறுமொழி கொடுக்கிறது. நான் உள்ளே கேட்பதையும், உணருவதையும் வெளியில் தெரியாமலே தெரியும்படி செய்கிறது. அங்கே ஒரு சமநிலை இடர்பாடுகள் வரும்போதும் அமைதியோடு இருத்தல் என்பது ஏற்படுகின்றது" எங்களது உள்ளுணர்வு மனம் எங்களுக்கு வேலை புரிய வேண்டும் என விரும்பினால் அதற்குச் சரியான கோரிக்கையைக் கொடுக்க வேண்டும்.

''ஒளியும், நல்லிணக்கமும், நம்பிக்கையும்
எங்களை வந்தடையட்டும்.
இருளும், முரண்பாடும், அச்சமும்
எங்களை விட்டு விலகட்டும்.''

நாங்கள் எங்கு வாழ்ந்தாலும் எங்களைச் சுற்றியுள்ளவைகளையே பார்க்கின்றோம். எங்களுக்குள் இருப்பதைப் பார்க்கத் தவறி விடுகின்றோம். நம்மில் பலருக்கு இதேநிலை. உள்ளுலகம் என்பது எங்கள் சிந்தனைகளை, உணர்வுகளைக் கொண்டதாகும். வேறு உலகம் இல்லை. அப்படியிருப்பதாய் நாங்கள் எண்ணிக்கொண்டால் வேறென்ன அற்புதம் எங்கள் வாழ்வில் நிகழவேண்டும் என்று எதிர்பார்க்கவேண்டும்?



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 07**

**பகுதி -38**

மிருகங்களை சூழ அவன் மட்டைகளால் ஆன வேலியொன்றை அமைத்தான். வேலியில் ஒரு இடத்தில் அதை பின்னுக்கு மடித்து விட்டு திறந்த வாசல் ஒன்றை உருவாக்கிக்கொண்டே "நான் வேலியில் ஒரு வாசலை வைக்கிறேன் மிருகங்கள் விரும்பும் போது அவை போய்வருவதற்கு அது உதவும்" என்றான்.

"எனக்கு விளங்குது" என்றேன் நான். வேலியை அமைக்கவென்று வெட்டிக் கழிக்கப்பட்டிருந்த பல்வேறு வடிவங்களில்




இருந்த மட்டைத் துண்டுகளை எடுத்து அவற்றை அவதானமாகவும், நுணுக்கமாகவும் ஆராய்ந்தான். "இது....இது..."என்று தயங்கினான். அவன் அந்தப் பொருளை வரையறை செய்ய முயன்றுகொண்டிருந்தான். பின் "இது எதுக்கும் உதவாததுண்டு. எதுக்கும் உதவாதது இப்பிடித்தான் இருக்கும்" என்றபடி அவற்றை நான் பார்க்கும்படி தூக்கிக்காட்டினான். இது ஒரு ஆர்வமூட்டும் அனுமானமாக இருந்தது. ஓரளவுக்கு துல்லியமானதாகவும் இருந்தது.

சில பொம்மைப் போர் வீரர்களை அவன் எடுத்துக்கொண்டான். "இந்த ஆள், ஒரு துப்பாக்கியை வைத்திருக்கிறான். இந்த ஆள் குதிரையில் போகிறான். இங்கே சண்டை செய்கிற ஆக்கள் இன்னும் சிலபேர் இங்க இருக்கினம்" என்று சொன்னவன் மணல் பெட்டியின் வெளிவிளிம்பில் அவற்றை வரிசையாக நிறுத்தினான். "இதுகள நா்ன் பெட்டியில போடப்போறன்" என்றவன் அப்படியே செய்தான். " இந்த ட்றக் வண்டி வீட்டச் சுத்தி திரும்பவும் தடம் ஒண்ட கீறப்போகுது. முயலும் பூனையும் ஜன்னலுக்குள்ளால பாக்குதுகள். சும்மா பார்த்துக்கொண்டும் கவனிச்சுக் கொண்டும் இருக்குதுகள்."

அவன் அங்கேயே அமர்ந்திருந்தான். அவனது கைகள் இரண்டும் மடியின் மீது கோர்த்தபடி வைக்கப்பட்டிருந்தன. பல நிமிடங்கள், எதுவும் பேசாமல் பல நிமிடங்கள் என்னையே பார்த்தபடியிருந்தான். அவனது முகம் இறுகிப்போயிருந்தது. ஆனால், அவனுடைய கண்கள் சிந்தனையால் ஒளிர்ந்து கொண்டிருந்தன. பின் என்னை நோக்கிச் சிரிந்து கதைக்கத் தொடங்கினான். "இது சுதந்திரதினம் அல்ல. யூலை நாலாம் திகதிதான் அது வரும் ஆனால் அது ஒரு வியாழக்கிழமை வருகிறது அண்டைக்கு நான் வந்து மிஸ் ஏ-ஐப் பார்ப்பேன். நான் கலண்டரில பார்த்தனான் யூலைமுதலாம் திகதி திங்கள் யூலை இரண்டு செவ்வாய் மூன்று புதன் கிட்டத்தட்ட சுதந்திர தினம் என்றாலும் அது இல்லை அடுத்து யூலை நான்கு வியாழக்கிழமை அண்டைக்கு சுதந்திர தினம். அந்த வியாழக்கிழமை நான் இங்க வருவன்" என்றவன் எட்டி பொம்மை முயலை எடுத்துக்கொண்டான். "யூலை மூண்டாம் திகதி புதன்கிழமை நீண்ட நாளா இருக்கப்போகுது. காலை, மதியம் இரவு எண்டு அது நீளும். பிறகு அடுத்தநாள் காலை வெளிச்சம் தெரியும். யூலை நாலாந்திகதி சுதந்திரதினம். அண்டைக்கு வியாழக்கிழமை, நான் இங்க வருவன்." என்றான்.

"இஞ்ச வாரது உங்களுக்கு நல்ல விருப்பம் போல இருக்குது" என்றேன்.


"ஓம் எனக்கு விருப்பம்" என்றவன். தொடர்ந்து "எனக்கு நல்ல விருப்பம்" என்றான். வேகமாக இயல்பு நிலைக்கு மீண்டவன் தொடர்ந்து கதைக்கத் தொடங்கினான். "சுதந்திரதினம் என்கிறது இராணுவ வீரற்ரையும் கடற்படை வீரற்ரையும் நாள். மேளங்கள் 'தொம்'.....'தொம்'.....'தொம்' எண்டு அதிரும். கொடிகள் தொங்க விடுவினம்" என்றவன் அணிவகுப்புப் பாடல் ஒன்றைப்பாடினான். மணலை அள்ளி எடுத்து ட்றக்கில் நிரப்பினான். பிறகு அதை அங்குமிங்கும் தள்ளினான். "சுதந்திரதினம் நல்ல சந்தோஷமான நாள். எல்லாரும் சந்தோஷத்தில பூரிச்சுப் போவினம். இந்த வீரர்கள் சுதந்திரத்தை இறக்குகினம். எல்லாக் கதவுகளையும் திறந்து விடுகினம்!"

இந்தக் குழந்தையினுடைய மொழியின் அழகும் வலுவும் கருத்தைக் கவருவதாக இருந்தன. அவனுடைய தனிமையினாலும் பயத்தினாலும் அவனுடைய ஏக்கம் என்ற வனாந்தரத்துக்குள் அது விரட்டப்பட்டிருந்தாலும் அது வளர்ந்து மலர்ந்திருப்பதை எண்ணும்போது மனதுக்கு ஆறுதலாக இருந்தது.ஆனால், இப்போது தனது பயத்துக்குள்ளேயே முன்னகர்ந்து தான் கண்டு கொண்ட ஐயத்துக்கிடமில்லாத உண்மைகளால் வலுப்பெற்றுக் கொண்டிருந்தான். தனது கோபம்,பயம், ஏக்கம் முதலியவற்றை எதிர்பார்ப்பு, நம்பிக்கை, மகிழ்ச்சி முதலியவற்றால் மாற்றீடு செய்துகொண்டிருந்தான். அவனுடைய துக்கமும் தோல்வியுணர்வும் மெல்ல மெல்ல விலகிக்கொண்டிருந்தன.

"நீயும் அந்த மகிழ்ச்சியை உணருகிறாய் தானே, இல்லையா டிப்ஸ்" சிறிது நேரத்துக்குப்பின் நான் கேட்டேன்.

"நான் இழக்க விரும்பாத சந்தோசம் அது" என்று பதில் சொன்னான். "நான் இந்த அறைக்குள்ள சந்தோசத்தோடதான் வாறனான்."

மணல் பெட்டியில் இருந்தபடிதான் இப்போது உணரும் அமைதியை வெளியே பரவவிட்டுக்கொண்டிருந்த அவனை நான் பார்த்தேன். மிகவும் சிறியவனாக அவன் தெரிந்தான். எனினும் அவனுடைய



மேன்மையுடையவும் உறுதிப்பாட்டினுடையவும் சக்தியை நான் உணரும் அளவுக்கு அவனில் எதிர்பார்ப்பும் துணிவும் நம்பிக்கையும் நிரம்பியிருந்தன.

"நான் இந்த அறைக்குள்ள சந்தோசத்தோடதான் வாறனான்."என்று மீண்டும் சொன்னான். "இங்கயிருந்து துக்கத்தோடதான் போறனான்."

"அப்பிடியா? நீங்கள் போகயிக்க எந்த சந்தோசமும் உங்களோட வாறயில்லையா?"

டிப்ஸ் மூன்று வீரர்களை மண்ணுக்குள் புதைத்தான். "இது அவர்கள துக்கமாக்குது" என்றான் "அவர்களால பார்க்க ஏலாது. அவர்களால கேட்க ஏலாது. அவர்களால மூச்சுவிட ஏலாது." என்று விளக்கினான். "டிப்ஸ் அவர்களை வெளியே எடுத்துவிடு" தனக்குத்தானே கட்டளையிட்டான். "முதல்ல ஒண்ட தெரிஞ்சுகொள். போறத்துக்கான நேரம் வந்து விடும். இப்பிடி புதைத்தபடியே அவர்களை விட்டிட்டுப் போகப்போறியா, டிப்ஸ்?" தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். "இன்னும் ஐஞ்சு நிமிசத்தில போவதற்கான நேரம் வந்துவிடும்" என்றேன் நான்.

(தொடரும்....)

---

(13 ஆம்பக்கம் பார்க்க)

நாட்கள் லீவில் வீட்டுக்குப்போவதாவும் சொன்னான்.

"தெல்லிப்பழை ஏரியா எப்படி இருக்கு" பாலச்சந்திரன் கேட்டான். "அங்கஒண்டுமேயில்லை எல்லாம் தரைமட்டம்...." சிரித்துக்கொண்டு சூரியப்பெருமா சொன்னான். அந்த நேரம் றூம்போய் வர அவனோடு சூரியப்பெருமா படியேறினான்.

' 'எல்லாம் தரைமட்டமாம்.... எவ்வளவு சந்தோசமாகச் சொல் கிறான்" பாலச்சந்திரன் பற்களைக் கோபமாகக் கடித்தான்.

பாலச்சந்திரன் உடைகளைக் கழுவி மொட்டை மாடியில் காயப் போட்டுவிட்டு, இறங்கி வந்து அறை யில் பயண ஒழுங்குகளை மேற் கொண்டான். எல்லாம் தயார் செய்து விட்டு, மாலை ஆறு மணியளவில் வெளியே போய் வவுனியாபோகும் இரவுப் புகைவண்டிக்கு இருக்கை பதிவு செய்துவிட்டு விடுதிக்குத் திரும்பினான். விடுதிக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து கணக்கை முடித்துக்கொண்டு, அறையில் வந்து கட்டிலில் படுத்துக் கொண்டான்.

இடித்துக்கொட்டப்பட்ட வீடு, கற் குவியலாகக்கண்களில் சுழன்றது. நேரத்தைப் பார்த்தான் இரவு ஒன்பது மணி- புகைவண்டிக்கு இன்னும் நாற்பத்தைந்து நிமிடங்கள் இருந்தன. மொட்டை மாடியில் காயப்போட்ட உடுப்புகளின் நினைவுவர, திடீரென எழுந்து அறையைப் பூட்டிவிட்டு மொட்டை மாடிக்குப் படியேறினான். மொட்டை மாடி இருளில் கிடந்தது. மூலையில் நின்று யாரோ சிகரெட் பிடிப்பது தெரிந்தது. இருளில் நிற்பவர் இடுப்பளவு உயர்ந்திருந்த சுவரில் கையை ஊன்றியபடி கீழே வீதியைப் பார்த்துக்கொண்டு நின்றார். அவன் வந்ததை அவர் கவனிக்க வில்லை.


உடுப்புகளை எடுத்தபடி பாலச்சந்திரன் அவரை உற்றுப்பார்த்தான். "சூரியப்பெருமா.... சிகரெட்டை உறிஞ்சியபடி கீழே அதிவேகமாகப் போய்க் கொண்டிருக்கும் வெளிச்சங்களைப் பார்த்துக்கொண்டு அவன் நின்றிருந்தான். பாலச்சந்திரனுக்குத் தேகம் படபடத்தது.

இதே சூரியப்பெருமா பெரியதொரு புல்டோசரில் இருந்து அதனை இயக்கியபடி தனது வீட்டைச் சிறிது, சிறிதாக இடித்துத்தள்ளி கற் குவிய லாகச் சேர்த்துக் கொண்டிருப்பது போல கண்முன் காட்சி விரிந்தது. புல்டோசரின் சத்தம் காதை அடைத்தது. அந்தச்சத்தத்தையும் மீறி.... "எல்லாம் தரைமட்டம்" என சூரியப்பெருமா சொல்லி அட்டகாசமாகச் சிரிப்பது போலத் தெரிந்தது. கைகளில் எடுத்த உடைகளைத் திரும்பக் கொடியில் போட்டான். ஒரே ஒரு கணம் பாலச்சந்திரனுக்கு எங்கிருந்துதான் அவனை அப்படியொரு எண்ணம் கட்டளையிட்டதோ தெரி யாது.

பாலச்சந்திரன் சத்தமின்றி சூரியப்பெருமாவைப் பின்பக்கமாக நெருங்கினான். சூரியப்பெருமா வாயில் சிகரெட் எரிய கைகளை சுவரில் ஊன்றியபடி கீழே பார்த்துக் கொண்டிருந்தான். பாலச்சந்திரன் சடாரென சூரியப்பெருமாவின் கால் களை இறுக்கமாப்பிடித்து மேல் நோக்கித்தூக்கி சுவருக்கப்பால் வீசி னான். எட்டிப்பார்த்தான் சூரியப்பெருமா ஏதோ கத்தியபடி கீழே விழுந்து கொண்டிருந்தான்.


பாலச்சந்திரன் உடைகளை எடுத்துக்கொண்டு விரைவாகக் கீழே இறங்கினான் அறையைத் திறந்து பெட்டிக்குள் உடைகளைத் திணித்தான். பெட்டியை எடுத்துக் கொண்டு கடகடவென படிகளில் இறங்கினான். வரவேற்பாளர் அமைதியாக ஏதோ படித்துக்கொண்டிருந்தார்.அவருக்கு இன்னும் விஷயம் எட்டவில்லை. அறைத் திறப்பை அவரிடம் கொடுத்து விட்டு "குட்நைற்" சொல்லிவிட்டுப் புறப்பட்டான். வீதியில் இறங்கிய போது சடார்,சடாரென வாகனங்கள் பிறேக்போட்டு நின்றன. சூரியப் பெருமாவின் உடல்கிடந்த இடத்திற்கு எல்லோரும் ஓடிக் கொண்டிருந்தார்கள். பாலச்சந்திரன் அவர்களை விலக்கிக்கொண்டு புகையிரதநிலையம் நோக்கி ஓடினான்.

புகையிரதம் ஒலி எழுப்பியது, ரிக்கற்றை கடவையில் நின்றவரிடம் கொடுத்து கிள்ளிக்கொண்டான். நேரம் பார்த்தான் ஒன்பது நாற்பத்தி நான்கு புகையிரதம் சத்தத்துடன் மெல்ல நகரத்தொடங்கியது. இரண் டாம் வகுப்புப் பெட்டியில் பாய்ந்து ஏறிக்கொண்டான். புகையிரதம் வேகம் எடுத்து வவுனியா நோக்கி விரையத்தொடங்கியது.



**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.



# பாவலன் பதில்கள்

*பாவலரே!*

*ஜே.வி.பி யினரை எதனுடன் ஒப்பிடலாம்?*

*நம்மியா,*
*பரந்தன்.*

சந்தர்ப்பத்திற்கும் சுயநலத்திற்கும் ஏற்ப நிறம் மாறும் பச்சோந்தியுடன்.

*பாவலா!*

*மனைவி அமைவது இறைவன் கொடுத்த வரம் என்றால் கணவன் அமைவது?*

*பிரசாந்,*
*வட்டக்கச்சி.*

சீதனம் கொடுத்த பலன்...

*பாவலா!*

*ஒரு நாடு எப்போது திசைமாறுகின்றது?*

*நிசாந்தினி,*
*திருவையாறு.*

அரசியல் தலைமைகள் திசை தடுமாறும் போது....

*பாவலா!*

*தற்போது சீதனச்சந்தையின் நிலைமை எப்படி இருக்கின்றது?*

*பிரியங்கா,*
*வவுனியா.*

டொலர்களாலும், யூரோக்களாலும், பவுண்ட்களாலும் நிர்ணயிக்கும் நிலையில் உள்ளது. திருமணமும் இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரமாகி விட்டதல்லவா!

*பாவலா!*

*சமஷ்டி சாத்தியப்படுமா?*

*காயத்திரி,*
*முழங்காவில்.*

சமாதானம் சாத்தியமானால் மட்டும்....

*பாவலா!*

*றோமியோ-யூலியட் ஜோடிகளுக்கும் இன்றுள்ள ஜோடிகளுக்கும் என்ன வித்தியாசம்.*

*தர்சன்,*
*இராமநாதபுரம்.*

அது "அசல்" -இது "நகல்" அவ்வளவுதான்.

*பாவலா!*

*மாணவியின் கொலையும் அதனால் ஏற்பட்ட மக்களின் கொந்தளிப்பும் பற்றி நீர் என்ன நினைக்கின்றீர்?*

*லதாங்கி,*
*கிளிநொச்சி.*

ஓநாய்களின் வெறியாட்டம் ஓயப்போவதில்லை எரிமலைகள் தொடர்ந்து உறங்கப்போவதுமில்லை.

*பாவலா!*

*கலியாணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றதா? அல்லது சீதனத்தில் நிச்சயிக்கப்படுகின்றதா?*

*சுபாஸ்கரன்,*
*உருத்திரபுரம்.*

இரண்டிலுமில்லை, புரோக்கர்களாலும் சாத்தியமில்லை.

*பாவலா!*

*சந்திரிகாவிற்கு சிறந்த நடிகைக்கான விருது வழங்க வேண்டும் என்று ரணில் கூறியது பற்றி ?*

*சோபிகா,*
*தருமபுரம்.*

சிறந்த நடிகையைத் தேர்ந்தெடுக்கும் குழுவுக்கு பொருத்தமான அனுபவம் மிக்க சிறந்த நடிகர் அவர் என்பதை நிரூபித்துள்ளார்.

*பாவலா!*

*மலையகத் தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்களுக்கு இனி ஏதும் செய்வார்களா?*

*பகீரதி,*
*ஸ்கந்தபுரம்.*

மலைத்துப் போய் நிற்கும் மலையகத் தமிழர்கள் இ.தொ.கவுக்கு கட்ட வேண்டிய சந்தாப் பணத்தை அதிகரிக்கச் செய்வார்கள் அவ்வளவு தான்.

*பாவலா!*

*கடவுள் நம்பிக்கை - மூட நம்பிக்கை என்ன வேறுபாடு?*

*ரதி,*
*கோணாவில்.*

கடவுளை நம்புவது மூடத்தனமுமல்ல.... கடவுளை நம்பாமல் இருப்பது மட்டும் புத்திசாலித்தனமுமல்ல... உன்மீது நீ வைக்கும் நம்பிக்கை மட்டும் தான் உன்னை உயர்த்தும்.

*பாவலா!*

*கோடீஸ்வரனாக வர வேண்டும் அதற்கு அரசியல் வழியா சினிமா வழியா சிறந்தது?*

*யசிசனா,*
*பாரதிபுரம்.*

சீரழிந்து சீமானாக உயர இரண்டையும் விட வேறு வழியே இல்லை...

*பாவலரே!*

*வேட்பாளருக்கு விண்ணப்பிப்பதற்கு அடிப்படைத் தகுதி கூட தேவையில்லை 18 வயது மட்டும் முடிந்திருக்க வேண்டும் அப்படியானால் அமைச்சர்களின் தகுதிகள் பற்றி?*

*சிவானி,*
*யாழ்ப்பாணம்.*

வேட்பாளருக்கு வெற்றியும் கிடைத்து அதிர்ஷ்டமுமிருந்தால் தான் அமைச்சர் பதவி கிடைக்கும். சனங்கள் முட்டாள்களாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம்.

*பாவலா!*

*மனச்சாட்சியைக் கண்டதுண்டா?*

*மயூரி,*
*திருநகர்.*

காணாமல் இருக்கும் வரையில் தான் மனச்சாட்சியின் மீது பயமும் மதிப்பும் இருக்கும்.

*பாவலா!*

*விமர்சனம் எப்படிப்பட்டவையாக இருக்க வேண்டும்?*

*தயா,*
*கனகபுரம்.*

ஒரு படைப்பாளியை அவமானப்படுத்துவதாகவோ விமர்சகர் தனது மேதைமையை வெளிப்படுத்தவோ இருக்கக் கூடாது அது விமர்சகர்களின் பலவீனத்தையே வெளிப்படுத்தும்



# தெருப்பேச்சு

பெண்களுக்கான கருத்தூட்டல்கள் தொடந்து செய்யப்படவேணும். ஏனெண்டால் அவர்கள் தான் எதிர்காலச் சந்ததியைப் படைத்து நிற்கிறார்கள்.

மெய்தான் இந்த உலகத்தில ஒவ்வொரு குழந்தையும் தாயால்தான் வளர்க்கப்படுகின்றது. அவர்கள் நன்கு வளரவும் ஒழுக்கம் மேன்மை என்பவற்றைப் பெறவும் தாயால் தான் செய்யமுடியும்.

எல்லாஞ்சரி ஆனா பிள்ளையள் அநேகமாகப் பாடசாலையில் தானே படிக்கினம். பள்ளிக்கூட ஆசிரியர்களும் கூட பிள்ளைகளை நல்வழிப்படுத்துவதில் பங்குடையவர்கள் தான்.

இருந்தாலும் ஒரு தாயானவள் பிள்ளையைப் பெற்று சீராட்டி வளர்ப்பதோடு அதற்கான பராமரிப்பையும் அன்றாடம் மேற்கொள்ளுகிறாள். எனவே அவள் சிறந்த முறையில் குழந்தைகளை வளர்க்கவும் குடும்பத்தை நிர்வகிக்கவும் தகுந்த கல்வி வழங்கப்படவேண்டுமென்று சுவாமி விவேகானந்தர் சொன்னதை நாம் நினைவு கூரலாம்.

அந்தளவில உங்கட கதைய நிப்பாட்டுங்கோ அவரிவர் எண்ட கதையை விடுங்கோ குடும்பம் நடத்த எங்களுக்கு கல்வி வேணுமாமோ.. பிள்ளை வளர்க்கவும் குடும்பம் பாக்கவும், அவரிவர் சொல்லக் கேட்டுத்தான் இண்டையப் பொண்டுகள் எம்மேபீயே படிச்சிட்டு வந்து வீட்டுக்க உடுப்புகழுவுகினம் புருசன் மாருக்கு. உதெல்லாம் ஆம்பிளையள் செய்யமாட்டியளோ.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -110



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -110

....................................................................
....................................................................
....................................................................
....................................................................

பெயர் : ....................................................
முகவரி : ....................................................
....................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -109



**தெ.சதீஸ்பாபு,**
**அழகியல்கலாமன்றம்,**
**கிளிநொச்சி.**

## பரிசுக்குரிய வரிகள்

*தள்ளாத வயதிலும் குந்தாமை எழுந்து*
*செல்லாத பார்வையில் பொல்லுான்றி நடந்து*
*சொல்லாதவேதனை தேகத்தில் சுமந்து*
*நில்லாமை உழைப்பேன் என் ஈழதேசத்திற்கு.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*பங்குனி வெயிலுக்கொரு தொப்பி*
*நடைக்குதவ ஒரு கைத்தடி*
*உடல் தளர்ந்து போனாலும் மன உறுதி தளராது*
*உழைப்பது மறத்தமிழர் பண்பல்லோ ஐயா.*

கைலை காந்தன்,
இராமநாதபுரம்.

*தள்ளாடும் வயதினிலும் - அந்நியனின் பொருளாதார*
*தடைக்குள் சிக்கி வாழாது கத்திபிடித்து உறுதியுடன்*
*உழைத்து - வாழும் எம் "கவரிமான்"*
*பரம்பரைப் பாட்டனிவன்.*

த.கோகுலன்,
புளியங்குளம்.

*தள்ளாடும் வயதிலும் தளராத உன் உறுதி*
*தன் கையே தனக்கு உதவி*
*தன்னம்பிக்கை; தரணியிலே தளைத்து எழும்*
*தனியான தமிழர் தேசம் தரும்.*

திருமதி. ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*தந்தையே உங்கள் உடலை வருத்தி வலுவூட்டினீர்கள்*
*தங்கள் பிள்ளைகளின் உடலுக்கு; -அவர்கள் தலை நிமிர்ந்ததும்*
*தனிமரமாய் தவிக்கவிட்டார்களோ உங்களை- தந்தையே*
*தளர்வுற்றஉங்களை தாங்கி அணைக்க புலிப்பிள்ளைகள் உள்ளனர்.*

சு.சிவாஜினி,
புதுக்குடியிருப்பு.

*உழைத்து உடல் இளைத்த மனிதா*
*வயிற்றுப் பசிபோக்க இன்னும் "நிவாரணம்" இல்லையோ?*
*சுனாமியை சாடி பல கோடி ஏப்பம் - இங்கு*
*ஒரு துளி கஞ்சிக்கே ஏக்கம்.*


சு.செல்வி,
பரந்தன்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

# மீண்டும் யாழ்ப்பாணத்தில்...

## ஈழநாதத்தின் கிளைப்பணிமனை

தொடர்புகளுக்கு: இல:31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:021 - 222 7917



உங்கள் இல்லம் ஒளிமயமாக வேண்டும் என்ற ஆசையா? உங்கள் ஆசையை நிறைவேற்ற TIGER மின்பிறப்பாக்கி காத்திருக்கின்றது.

ஜப்பானிய தொழில் நுட்பத்துடன் உருவாக்கப்பட்ட TIGER மின்பிறப்பாக்கியை வாங்கி பல்லாண்டு காலம் பலனைப் பெறுங்கள்

TIGER மின்பிறப்பாக்கிக்குத் தேவையான சகல உதிரிப்பாகங்களையும் தரமாகவும் மலிவாகவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

## HONDA MOTORS

எம்மிடம் TNS உந்துருளிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்பிறப்பாக்கிகள், மின்சார மோட்டார்கள், டீசல் இயந்திரங்கள் ஆகியவற்றையும் அவற்றின் உதிரிப்பாகங்களையும் இரு சில்லு உழவு இயந்திர உதிரிப்பாகங்களையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்



TIGER GENERATOR இன் ஏக விநியோகஸ்தர்கள்

## HONDA MOTORS

இல-37, கந்தசாமி கோயில் வீதி, வவுனியா.


(சி-11548)

செல்வம் செழிக்கக்கூடிய வளமான விளைச்சலுக்கு இலங்கையில் முன்னணியில் திகழும்

## எட்க்ரோ கிரிவ்ஸ்

MK-12/MK-20

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், புத்திசாலியான உங்கள் சரியான தெரிவு எட்க்ரோ நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் பொங்கிவரக்கூடிய சலுகைகள் ஒரு வருடத்திற்கான உத்தரவாத சான்றிதழ். பலம் மிக்கதும் நீண்ட காலம் உழைக்கக்கூடியதும் அதிக தண்ணீரை பெற்றுக்கொள்ளக்கூடிய வல்லமை. சுயமாகவும் சுயமற்றதாகவும் நீர் இறைக்கவல்லது. எரிபொருளை சேமிக்க வல்லது. நாடளாவிய விற்பனைக்குப்பிந்திய சிறந்த சேவை. தேவையான அளவு உதிரிப்பாகங்கள்.



SM Graphics

EDNA GROUP

### எட்னா அப்ளயன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

160, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு-04
தொலைபேசி: 508961-2, 502291-3, 592135-6
தொலைநகல்: 594558, 500909
தொடர்புகளுக்கு: மயூரா-0777 418821 இபுனு-0777 418817

யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

### ஆர்க் என்ரப்பிறைசஸ்

150, 152, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 2052

(சி-11452)



உங்கள் இன்றைய தெரிவுக்கு...



குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள் பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண் சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

## குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
*Textile & Fancy House*
Yarl Road, Kilinochchi.

(சி-11463)

SM Graphics

EXPOAIR
*your friend in the skies...*

எக்ஸ்போ எயாரில் பயணியுங்கள்...

யாழ்ப்பாணத்தைக்கண்டுகளியுங்கள்...

அனுபவம் வாய்ந்த நட்புறவு...

நம்பகத்திற்கு எக்ஸ்போ எயார்...



EXPO AVIATION(PVT)LTD.
1E, Stanly Road, Jaffna.
Tel: 021-222 3891/6297 077-2349999/8888
email: Jaffna@espoavi.com/reservations@expoavi.com

(C-10120)

Wednesday, March 09, 2005 11:36:05 AM
இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005ம் ஆண்டு மார்ச் மாதம் 11 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.